Not for sale

நவம்பர் - டிசம்பர் 2018

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## வெளிப்படுத்தலுக்கு வாசகர்களுக்கான ஒரு எளிய வழிகட்டி

முன்னுரை • ஏழு சபைகள் • இரு யுகங்களுக்கு மறைக்கப்பட்டது • ஏழு முத்திரைகள்

ஏழு எக்காளங்கள் • ஸ்திரீ, மிருகங்கள் மற்றும் அறுவடை • கடைசி ஏழு வாதைகள்

பாபிலோனின் பாவங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு • கையில் ஒரு அற்புதமான மாற்றம்

முடிந்தது • முடிவான ஆலோசனைகள்

## வெளிப்படுத்தலுக்கு வாசகர்களுக்கான ஒரு எளிய வழிகாட்டி

# ஆதியிலே



அப்போஸ்தலனாகிய யோவானின் காலம் துவங்கி,தேவனுடைய திட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றி விவரிப்பதன் மூலம், வெளிப்படுத்தல் புத்தகம் புதிய ஏற்பாட்டிற்கு கூடுதலான அழகைச் சேர்க்கிறது. உண்மையாக நிறைவேறக் கூடிய அதன் தீர்க்கதரிசனங்களின் முன்னறிவிப்பை நாம் காணும்போது, நம் பரலோகத் தகப்பன் மேலுள்ள நம்பிக்கையில், நம்மை தாழ்த்தி அர்ப்பணித்து, முழங்கால்களில் நிற்க செய்கிறது.

வெளிப்படுத்தல் 1- "அறிமுகம்" என்ற தலைப்பு ஆசிரியர் (தேவன் ), தூதுவர் (இயேசு) மற்றும் சிறைச்சாலை எழுத்தாளர் (அப்போஸ்தலனாகிய யோவான்) ஆகியோரை அறிமுகப்படுத்துகிறது.

வெளிப்படுத்தல் 2-3 - "ஏழு சபைகள்" என்ற தலைப்பு ஒவ்வொரு சபைக்கும் உள்ள தூதர்களையும், ஒவ்வொரு சபையின் குறிப்பான காலப்பகுதியையும், ஒவ்வொரு செய்தியின் சாத்தியமான அர்த்தத்தையும் தரக்கூடியது என்று கருதுகிறது.

வெளிப்படுத்தல் 4-5 - "இரு யுகங்களாக மறைந்திருக்கும்" என்ற தலைப்பு தேவ திட்டம், 24 மூப்பர்கள் உள்பட, நான்கு ஜீவன்கள் மற்றும் "அடிக்கப்பட்ட ஆட்டைப் போல" என்பவைகளின் ஆவிக்குரிய பார்வையை கருத்தில் கொள்கிறது.

வெளிப்படுத்தல் 6:1-8:1 -"ஏழு முத்திரைகள்" என்ற தலைப்பு, சுவிசேஷ யுக சபைக்கு வெளிப்படுத்தப்பட்ட போதனையின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது மற்றும் முத்திரைகளை திறக்க தகுதியுடைய ஒரே ஒருவரை மட்டும் அடையாளம் காட்டுகிறது.

வெளிப்படுத்தல் 8-11 -" ஏழு எக்காளங்கள்" என்ற தலைப்பு, ஒவ்வொரு சபையின் ஏழு செய்திகள், ஒவ்வொன்றும் இந்த உலகத்தின் மனுக்குலத்தின் மேல் கொண்டிருக்கும் விளைவுகளை காட்டுகிறது.

வெளிப்படுத்தல் 12-14 - " ஸ்திரீ, மிருகங்கள் மற்றும் அறுவடை" என்ற தலைப்பு கிட்டத்தட்ட 2000 வருடங்களாக சபை துன்புறுத்தப்பட்டதன் விவரங்கள், போப் அமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பிரச்சனைகள் மற்றும் சுவிசேஷ யுகத்தின் அறுவடையை விவரிக்கிறது.

வெளிப்படுத்தல் 15-16 - "கடைசியான ஏழு வாதைகள்" என்ற தலைப்பு யாத்திராகமம், எரிகோ, சாலொமோனின் ஆலயம், தற்போதைய தீய உலகத்திற்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பை எவ்வாறு அடையாளப்படுத்தும் என்பதை வெளிப்படுத்துகிறது.

வெளிப்படுத்தல் 17-18 - "பாபிலோனின் பாவங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு" என்ற தலைப்பு பாபிலோனின் மகா வேசியையும் (போப் அமைப்பு) அதனுடைய விரிவான தீர்ப்பையும் வெளிப்படுத்துகிறது.

வெளிப்படுத்தல் 19-20 - "ஒரு அற்புதமான மாற்றம் கையில் உள்ளது" என்ற தலைப்பு பரிசுத்தவான்கள் எவ்வாறு சுவிசேஷ யுகத்தின் முடிவை அவர்களுக்கு முன்னிருக்கும் சமரச வேலைகளை எதிர்பார்க்கும் வாக்குத்தத்தத்தின் காலமாக கண்ணோக்குகிறார்கள் என்றும் விவரிக்கிறது.

வெளிப்படுத்தல் 21-22 -"இது முடிந்தது" என்ற தலைப்பு, தேவனுடைய இராஜ்யத்தின் இரண்டு அழகான விளக்கங்களை ஜீவனுக்கு கொண்டு வந்து, இந்நேரத்தில் அமைதி, நீதி, மறுசீரமைப்பு போன்றவை, மனுக்குலத்தின் சகல ஜாதிகள் மேல் செலுத்தும் தாக்கத்தை சுட்டிக்காட்டுகிறது.

வெளிப்படுத்தல் 22 - "ஆலோசனை முடிவு" என்ற தலைப்பு அப்போஸ்தலனாகிய யோவானின் கடைசி அறிவுரையையும், ஆசீர்வாதத்தையும் விவரிக்கிறது. இனிவரும் கடினமான மற்றும் இடுக்கமான வழியில் சபையின் பலத்தை வலுப்படுத்தும்படியாக இது அப்போஸ்தலனாகிய யோவானின் காலத்தில் அறிவிக்கப்பட்டது.

சுவிசேஷ யுகத்தின் முடிவில், சபையின் பாத அங்கத்தினருக்கு, இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தல் : பாடுகளில் உள்ள அர்த்தங்களையும், நோக்கத்தின் தெளிவையும் மற்றும் காத்திருப்பதில் நம்பிக்கையையும் தருகிறது. நிரந்தரமான ஒப்புரவாக்குதலின் வேலை நமக்கு முன் உள்ளது. தேவனுடைய மகத்தான இராஜ்யம், துவங்குவதை கவனித்துக்கொண்டே, அதை நோக்கி நாம் செயல்படுவோம்!

இறுதியாக, கடைசி கட்டுரை, ஃப்ரெடரிக் ஃபார்ராரின் கிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்து ஒரு அழகான பகுதியாகும். நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான வருடைய போதனைகளையும் , முன்மாதிரியையும் சிந்திக்கையில், இந்த பிரதி ஆசீர்வாதமாக இருக்கும் என்று நாம் உண்மையாக நம்புகிறோம்.

**நவம்பர் / டிசம்பர் 2018, தொகுப்பு 100, எண் 6**


**முன்னுரை** - 33
வெளிப்படுத்தல் 1

**ஏழு சபைகள்** - 36
வெளிப்படுத்தல் 2-3

**இரு யுகங்களுக்கு மறைக்கப்பட்டது** - 40
வெளிப்படுத்தல் 4-5

**ஏழு முத்திரைகள்** - 43
வெளிப்படுத்தல் 6-8

**ஏழு எக்காளங்கள்** - 46
வெளிப்படுத்தல் 8-11

**ஸ்திரீ, மிருகங்கள் மற்றும் அறுவடை** - 51
வெளிப்படுத்தல் 12-14

**கடைசி ஏழு வகைகள்** - 55
வெளிப்படுத்தல் 15-16

**பாபிலோனின் பாவங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு** - 58
வெளிப்படுத்தல் 17-18

**கையில் ஒரு அற்புதமான மாற்றம்** - 61
வெளிப்படுத்தல் 19-20

**முடிந்தது** - 65
வெளிப்படுத்தல் 21-22

**முடிவான ஆலோசனைகள்** - 68
சேர்ப்பதோ, அகற்றுவதோ இல்லை

**இன்றைய தீர்க்கதரிசனம்** - 71
உலக நிதி நெருக்கடி - 10 ஆண்டுகள் கழித்து

**வெளிப்படுத்தல் 1**

# ஒரு அறிமுகம்



"சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்." (வெளிப்படுத்தல் 1:1)

*André Couceiro*

கிபி 96 ம் ஆண்டாக இருந்தது. ரோம பேரரசன் டோமிஷியன் கடுமையான துன்புறுத்தலின் விளைவாக ஆதிகால சபையின் "தூண்களில்" ஒருவராகிய, ஒரு அன்பான மூத்த கிறிஸ்தவர் நாடு கடத்தப்பட்டார்.

"உங்கள் சகோதரனும், இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன்." (வெளிப்படுத்தல் 1:9)

பவுலைப் போல - பூமிக்குரிய ஓட்டத்தை ஏற்கனவே முடித்த - யோவானும், "நல்ல போராட்டத்தை போராடினார்" அந்நேர முதல் நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அவருக்கும், விசுவாசமுள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் நீதியின் கிரீடத்தை கொடுப்பார் என்று காத்திருக்கிறார்.

ஆனால் "அந்த நாள்" எப்போது வரும் ? யோவானின் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்போது, நம்முடைய ஆண்டவராம் இயேசுவால் கொடுக்கப்பட்ட அநேக அடையாளங்கள், கிபி 70க்கு முன்பே நிறைவேறியது. எருசலேமில் ஆலயத்தின் அழிவு (லூக்கா 21:6 , மத்தேயு 24:2) மற்றும் ரோமின் கைகளில் யூதர்களின் இனப் படுகொலை. (லூக்கா 23:27-31) இவை அனைத்து நிகழ்வுகளும் யோவான் கடந்து வந்தார். அவர் யுத்தங்களையும், கிளர்ச்சிகளையும், "அந்தி கிறிஸ்துவின்" தோற்றத்தையும் கண்டிருந்தார். "ஆயினும் இயேசு கிறிஸ்து இன்னும் ஏன் வரவில்லை ?" என்று அவர் தம்முடைய உள்ளத்தில் கேட்டிருக்கலாம். மற்ற கிறிஸ்தவர்களும் இதே போல சிந்தித்திருக்கலாம்.

நித்திரையில், உயிர்த்தெழுதலுக்காக காத்திருப்பதற்கு பதிலாக யோவான் சிறையில் இருந்தார். அவர் கிறிஸ்துவுக்குள் இன்னும் சுதந்திரமாக இருந்தாலும், மனுஷரின் கட்டுபாட்டில் இருந்தார். ஆனால் யோவானின் இந்த இருண்ட நேரத்தில், அவர் சபையின் மிகப் பிரகாசமான எதிர்காலத்தை, ஒரு தரிசனத்தின் வடிவில் காட்சியாக பெற்றார்.

"சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்." (வெளிப்படுத்தல் 1:1 )

இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்துதல், அடையாளங்களின் புத்தகம் என்றும், நேரடியான அர்த்தங்களை கொண்டிராத புத்தகம் என்றும் இந்த வசனம் தெளிவாக குறிப்பிடுகிறது. அதன்பின் அந்த தேவதூதன் அதன் "முக்கியத்துவம் வாய்ந்த" நிலையை யோவானுக்கு அறிவித்தார், விசுவாசமுள்ள அவர் நம்முடைய நன்மைக்காக சகலத்தையும் பதிவு செய்தார். அடையாளங்களை ஒழுங்காக விளக்கினால், அதன் செய்தியின் அர்த்தம் சரியாக புரிந்துக்கொள்ளப்படும்.

நம்முடைய ஆண்டவராம் இயேசு ஒரு புது சிருஷ்டியாக, ஆழ்ந்த ஆவிக்குரிய புரிந்துக் கொள்ளுதலைப் பெற்றிருந்தாலும், தேவனுடைய இந்த அற்புதமான வெளிப்பாட்டை, மாம்சத்திலிருந்த இயேசுவுக்கு அவர் வெளிப்படுத்தவில்லை என்ற இந்த உண்மை, யெகோவா தேவன் அவருடைய வெளிச்சம் அல்லது சத்தியத்தை அவருடைய திட்டத்தின்படி, அதற்கேற்ற காலத்திலும் நேரத்திலும் வெளிப் படுத்துவார் என்பதை காட்டுகிறது.

இப்போது யோவான் மற்றும் சபைகள் அந்த சத்தியத்தினால் அறிவூட்டப்பட துவங்குவதற்கான நேரம் வந்தது. இந்த ஆசீர்வாதத்தையும், உறுதியளித்தலையும் யோவான் எவ்வாறு உணர்ந்திருப்பார்! உண்மையில், "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது." (வெளிப்படுத்தல் 1:3) என்று அவர் எழுதினார்.

ஆதிகால கிறிஸ்தவர்கள் இன்னும் ஒரு இருண்ட கண்ணாடி வழியாக பார்த்துக்கொண்டிருக்கையில், இப்போது யோவானும் மற்ற அனைத்து சபைகளும் தங்கள் எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய குறிப்பை கொண்டிருந்தார்கள். ஒரு திறந்த புத்தகம் போல அல்லது சுருளை போல,காலப் போக்கில் தாங்கள் எங்கிருந்தோம் என்பதை அவர்கள் மறுபரிசீலனை செய்யமுடிந்தது. சுவிசேஷ யுகத்தின் பிற்பகுதியில் கடந்து வரும் நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொண்டார்கள். இந்த கோணத்தில், வெளிப்படுத்தலை நாம் பார்த்தோமானால், இதில் எழுதப்பட்டவைகள், சத்தியங்களை மட்டும் அல்ல, சரித்திரங்களையும் வெளிப்படையாக காண்பிக்கிறது.

இந்த கட்டுரையில் யோவானிடமிருந்து சபைகளுக்கும், இப்படியாக யோவானிடமிருந்து

உங்களுக்கும் கொடுக்கப்பட்ட ஒரு கடிதமாகிய இந்த அற்புதமான மற்றும் தீர்க்கதரிசனமான வெளிப்படுத்தலின் முதல் அதிகாரத்தை ஆய்வு செய்ய அழைக்கப் பட்டிருக்கிறீர்கள்!

**ஏழு சபைகள்**

மற்ற கடிதத்தை போல, இதுவும் ஒரு வாழ்த்துதலோடு துவங்குகிறது - "ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதுகிறதாவது." இந்த வசனத்தில், "ஆசியா", ஆசியா கண்டத்தை பொருள்படுத்துவதில்லை. மாறாக யோவானின் காலத்தில், ஒரு ரோமன் மாகாணம், ஆசியா மைனராக அறியப்பட்டிருந்தது. இன்று, அதே இடம் மேற்கு துருக்கியில் உள்ளது.

இயேசு இந்த சபைகளுக்கு பெயரிட்டார்: எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கியா (வெளிப்படுத்தல் 1:4,11)

ஆனால் ஏன் ஏழு சபைகள்? ஏன் அந்த குறிப்பிட்ட வரிசை ? வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள சபைகளின் வரிசைகள், வட்டமான பாதையில் தொடர்ந்து உள்ள இடங்களில் பிரயாணப்படும் தூதஞ்சல் போன்று இருப்பதாக சர் வில்லியம் ராம்சே, தன்னுடைய புத்தகமான, ஏழு சபைகளுக்கான நிருபங்களில், சுவாரசியமாக பரிந்துரைத்துள்ளார். கூடுதலாக, இந்த ஏழு சபைகளும், முதன்மை தகவல் மையங்களாக இருந்தன, அவற்றிலிருந்து அந்த மாவட்டங்களில் இருக்கும் மற்ற சபைகளுக்கு கடிதங்களை வாசிக்கும்படிக்கு, இரண்டாம் நிலை தூதுவர்கள் அனுப்பப்படுவார்கள். திறமை வாய்ந்த விநியோக முறையின் முன்னோக்கில் இருந்து நாம் பார்க்கும்போது, வெளிப்படுத்தல், ஏழு ஆதிகால சபைகளுக்கு மட்டும் அல்ல, மிக பெரிய பார்வையாளர்களுக்கும் அது வெளிப்படுத்தப்பட்டது என்று அறிந்துக்கொள்கிறோம்.

ஆனால் இந்த குறிப்பிட்ட வரிசையிலிருந்து, ஒரு ஆழமான ஆவிக்குரிய பாடத்தையும் கற்றுக்கொள்ளலாம். கிறிஸ்துவ சபையின் வரலாற்றின் நீண்ட கால நிகழ்வுகளை நாம் கவனமாக படிக்கும்போது, சில குறிப்பிடத்தக்க காரியங்களை நாம் காண்கிறோம்.

கிறிஸ்தவ சபையின் வரலாற்றை வெளிப்படையான ஏழு காலங்களாக பிரிப்பதற்கு ஆண்டவர் முடிவெடுத்தார். அவைகளின் அனுபவங்கள், வரலாறு மற்றும் கொள்கைகளின் புரிந்துக்கொள்ளுதல் தனித்துவமாக இருந்தது. ஆகவே, வெளிப்படுத்தல் 1:11 உள்ள ஒவ்வொரு சபையும், ஒவ்வொரு குறிப்பிட்ட காலப்பகுதிகளையும் குறிப்பாக அடையாளப்படுத்தும். அந்த ஒவ்வொரு காலப்பகுதிக்கும், எல்லா சபைக்கும் ஒரு விசேஷித்த தூதுவர் இருக்கவேண்டும். "ஏழு சபைகள்" என்ற தலைப்பில், சுவிசேஷ யுகம் முழுவதிலும், இந்த அருமையான சத்தியத்தைப் பற்றிய விரிவான விளக்கங்களை காண்கிறோம்.

**மனுஷகுமாரனின் தரிசனம்**

பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தின் முதல் அதிகாரத்தை நாம் தொடர்ந்து சிந்தித்துப் பார்க்கையில் நம்முடைய மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அற்புதமான வர்ணனையை காண்கிறோம்:

"அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகேபொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன். அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம்பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம்வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது."(வெளிப்படுத்தல் 1:13-16)

சகோதரர் ரசலின் கூற்றுப்படி, "அவர் தரித்திருந்த நிலையங்கி", இராஜாக்களும் ஆசாரியர்களும் அணிந்திருந்த தொங்கலான நீண்ட வஸ்திரத்தை விவரிக்கிறது.(R1599:2). ஆண்டவர் தம்முடைய ஊழியத்திற்காக பயன்படுத்தும், சபையின் பாத அங்கத்தினரை அடையாளப்படுத்தும் அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்ததினால், அந்த நிலையங்கி பாதங்கள் வரைக்கும் காணப்பட்டது. இவ்வாறு, நிலையங்கி, சத்தியத்தினால் ஒளியூட்டப்படும் சபையின் பாத அங்கத்தினர்கள் வரையிலும் அது நீளமாக இருந்தது. (R3569:5)

சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தனிதத்னியே தீவிரமான சோதனைகள் மூலம் சுத்திகரிக்கப்படுவதன் காரணமாக, அந்த பாதங்கள் " உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலத்தை" போலிருந்தது. (1பேதுரு4:12, R2827:1 ) அவரது மார்பருகே கட்டியிருந்த "பொற்கச்சை" அவருடைய கௌரவத்திற்கும், ஆட்சிப்பொறுப்புக்கும் சாட்சியாக இருந்தது. (R1599:4) வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப்போவுலம் வெண்மையாயிருக்கும் " அவருடைய சிரசும் மயிரும்", அவருடைய வயது மற்றும் தூய்மையும், அறிவு மற்றும் அனுபவ ஞானத்தின், பிரமாதமான ஒரு அடையாளமாக உள்ளது. (R2826:5, HG62:1, R3569:5) நம்முடைய எஜமானர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்பதை இந்த "அக்கினி ஜுவாலையைப்" போலிருக்கும் அவருடைய கண்கள் அடையாளமாக குறிப்பிடுகிறது. அவருடைய கவனத்திலிருந்து எதுவும் தப்பிப்போவதில்லை. மேலும் அது நம் ஒவ்வொருவருக்கும் சுத்திகரிக்கும் விளைவுகளை ஏற்படுத்த வேண்டும். (நீதிமொழிகள் 15:3, R:3569:5) அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட "இருபுறமும் கருக்குள்ள பட்டயம்", தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தை

அடையாளப்படுத்துகிறது. மேலும் அவரது சத்தியத்தின் பணியையும் அதன் இறுதி வெற்றியையும் அடையாளப்படுத்துகிறது. (R:1599:4) இறுதியாக, நாம் பார்க்கக்கூடிய,"பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருக்கும்" அவருடைய சத்தமானது, நம்முடைய ஆண்டவர் சபையோடிருந்து, அவளோடு பல மொழிகளில் பேசக்கூடியதை அடையாளப்படுத்துகிறது!

அவருடைய பிரசன்னத்தின் இந்த விவரிப்பு, பெரும் கௌரவத்தையும், அற்புதமான அவருடைய மகத்துவத்தையும் மட்டுமல்ல, அவருடைய மிகுந்த வல்லமையையும் அதிகாரத்தையும், ஒரு நியாயாதிபதியாகவும், ஒரு காரிய நிர்வாகியாகவும், ஒரு இராஜாவாகவும் இருக்கக்கூடிய பண்புகளை சித்தரிக்கிறது. மறுபட்சத்தில் யோவான், இயேசுவை இப்படிப்பட்ட நிலையில் பார்த்ததில்லை. அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில், யோவான் இயேசுவை நன்கு அறிந்திருந்தார். அவர்கள் நண்பர்களாகவும், நேரத்தை ஒருமித்து செலவழித்தவர்களும், ஒருமித்து பயணம் செய்தவர்களும், ஒருமித்து புசித்து குடித்த உறவினர்களுமாக இருந்தார்கள். "இயேசுவால் நேசிக்கப்பட்ட சீஷன்" என்றும் யோவான் அழைக்கப் பட்டார். (யோவான் 13:23, 19:26, 21:7) இந்த தரிசனத்தில், ஒரு வித்தியாசமான இயேசுவை - மகிமை அடைந்த ஒரு ஜீவியாக, யோவான் அவரை கண்டபோது எப்படி உணர்ந்திருப்பார் என்பதை நாம் யோசித்துப் பார்க்கலாமா ? அவர் எப்படி நடந்துக்கொண்டார் என்று யோவான் நமக்கு சொல்லுகிறார்:

"நான் அவரைக் கண்டபோது செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்" யோவான் கண்ட காட்சியின் ஆழ்ந்த பண்புருவாக்குதலின் கச்சிதமான விளைவாகும் ! அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல் வைத்து, என்னை நோக்கி : "பயப்படாதே" என்றார். (வெளிப்படுத்தல் 1:17) எப்படிப்பட்ட உறுதி !அவர் இயேசுவைப் பற்றி அறிந்திருந்த அந்த இனிமையான நினைவுகள் அவரிடம் திரும்பி வந்ததை நாம் கற்பனை செய்யலாம்.

"நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன், மரித்தேன், ஆனாலும்,இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்." என்று இயேசு தொடர்ந்து கூறினார். (வெளிப்படுத்தல் 1:17, 18) யோவான் அந்த தரிசனத்தை கண்டும் பயப்படவேண்டியதில்லை, மேலும் அவர் பத்மு சிறையில் மரிப்பதை எண்ணியும் பயப்படவேண்டியதில்லை ஏனெனில், இயேசு மரணத்தை ஜெயித்தார். "... கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்க்ளை விடுதலையாக்கவும்.." (சங்கீதம் 102:20) வல்லமைப் பெற்றிருந்தார். எனவே சிறைச்சாலையில் யோவானின் மரணம், நிரந்தமானதாக இருக்காது. மேலும், அவருடைய மரணம் மற்றும் பாவமுள்ள நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, சரியான காலம் வருகையில் பரலோகத்தில் பரிபூரணராக உயர்த்தப்படுவார் என்பதே உண்மையான பொருளாகும்.

**உண்மையான கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் ஒரு அன்பான கடிதம்**

யோவான், "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவராக ஒருவரை கண்டார்", அவர் ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருந்தார்" மற்றும் "அவர் வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்."(வெளிப்படுத்தல் 1:13,16)

இங்கே நாம் ஏழு என்ற எண்ணிக்கையின் இன்னும் இரண்டு நிகழ்வுகளைக் காண்கிறோம். மேலும் வெளிப்படுத்தலில் இன்னும் அதிகமான "ஏழுகள்" உள்ளன: ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், ஏழு கடைசி வாதைகள். இவைகள் இந்த பிரதியில் உள்ள கட்டுரைகளின் தலைப்பாகும். இதில் அவற்றின் அர்த்தங்களைப் பற்றிய விளக்கத்தையும் காணலாம்.

ஆனால் அந்த "ஏழு குத்துவிளக்குகள்" மற்றும் "ஏழு நட்சத்திரங்கள்" என்பதன் பொருள் என்ன ? "அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபையின் தூதர்களாம், நீகண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வெளிப்படுத்தல் 1:20) என்று இயேசு விளக்குகிறார்.

இப்போது, நம்முடைய மகிமையடைந்த ஆண்டவர், நம்மை விட்டு வெகு தூரத்தில் இல்லை, மிக அருகில், உண்மையில் சபைகளின் மத்தியில் இருக்கிறார்! கூடுதலாக, அவர் ஏழு தூதர்களை அவருடைய வலது கரத்தில் அவருடைய வழிநடத்துதல், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பில் வைத்திருக்கிறார், என்ற முழு வரைபடமும் நாம் பெற்றிருக்கிறோம் (R3570:4).( மேலும், இந்த பிரதியில், நாம் பார்க்க இருக்கும் அந்த தூதர்கள், அவர்கள் வாழ்ந்த அந்தந்த காலக்கட்ட சபைக்கான மிகச் சிறந்த செய்தியைக் கொண்டு வந்த தேவனுடைய ஏழு சிறந்த ஊழியர்கள் ஆவர்.

"உங்கள் சகோதரனும்... உபத்திரவத்திற்கு.. உடன்பங்காளனுமாயிருக்கிற" (வெளிப்படுத்தல் 1:9) என்று எவ்வளவு அற்புதமாக யோவானின் வழியாக சொல்லப்பட்டது. நம்முடைய அன்பான தகப்பனாகிய யெகோவா தேவனிடமிருந்தும், நம் அன்பான ஆண்டவர் இயேசுவிடமிருந்தும் எவ்வளவு அற்புதமான கடிதத்தை நாம் பெற்றிருக்கிறோம். இந்த கடிதம் நம்முடைய புரிதலின் கண்களுக்கு முன்பாக வரலாற்றைப் படிப்படியாக வெளிப்படுத்துகிறது. இந்த கடிதம் நம்முடைய பிழைகளையும், வெற்றிகளையும் அன்புடன் சுட்டிக்காட்டுகிறது, எல்லாவற்றிற்கும் மேலாக, "நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே.... நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." (வெளிப்படுத்தல் 2:10 ) என்று நமக்கு அது உறுதியளிக்கிறது.

**வெளிப்படுத்தல் 2-3**

# ஏழு சபைகள்

"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.." (வெளிப்படுத்தல்



*Nathan Austin*

சுவிசேஷ யுகம் முழுவதிலும், சபையின் வளர்ச்சியை நாம் கருத்தில் கொள்ளும்போது, ஏழு சபைகளுக்கு இயேசு கிறிஸ்துவின் செய்தி வல்லமையுள்ளதாகவும், மிகவும் அர்த்தமுள்ளதாகவும் உள்ளது. ஒவ்வொரு சபையின் காலத்துக்கும் இயேசு கிறிஸ்துவின் போஷிப்பும் பராமரிப்பும், கல்வாரியில் அவர் தந்த பலியைத் தொடர்ந்து இன்றைய தினம் வரையிலும் தொடர்கிறது.

ஒவ்வொரு சபையின் விஷயத்திலும் நாம் முன்வைப்பது : (1) பரிந்துரைக்கப்பட்ட ஒரு தூதர், (2) தோராயமான ஒரு காலவரை மற்றும் (3) அந்த சபைக்கான செய்தி, அதாவது ஆதி கால சபைக்கும், சுவிசேஷ யுகத்தின் முடிவு காலத்தில் உள்ள சபையில் உள்ள நமக்கும் பொருந்தக்கூடியதும், பயன்படக்கூடியதுமான செய்தி.

மேலும், ஒவ்வொரு காலப் பகுதியும், அந்த தூதரிடமிருந்து வழங்கப்பட்ட செய்தியுடன் துவங்குகிறதாக கருதுகிறோம். ஆதலால், மற்ற உலக நிகழ்வுகளுக்கு எதிராக, இந்த தேதிகள் அவர்களின் தனித்துவமான செய்தியோடு முடிந்தளவுக்கு நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கும். முதலாம் காலப்பகுதி, கி.பி 70ல் எருசலேமின் அழிவோடு நிறைவடைந்திருக்குமா ? அது சாத்தியம். இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் எழுதப்பட்ட சரியான நாள் மற்றும் தொடர்ந்து வந்த சபைக்கான செய்தியின் துவக்கமான, 70 மற்றும் கி.பி 90 இன் மத்தியில் தான் அதின் முடிவு இருந்திருக்கும் என நாங்கள் முன்மொழிகிறோம்.

**முதலாவது - எபேசு**

வெளிப்படுத்தல் 2ம் அதிகாரத்தின் முதல் ஏழு வசனங்கள் எபேசு சபைக்கு செய்தியை அறிவிக்கிறது. இந்த முதலாம் சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் தூதனாக இருக்கலாம் என ஏறக்குறைய ஒருமனதான உடன்பாடு உள்ளது. சிலர் மற்ற நபர்களை பரிந்துரைத்தாலும், புதிய ஏற்பாட்டின் மிக முக்கியமான ஆசிரியர்களில் ஒருவராக பவுல் இருந்தார் என்பது தெளிவாக உள்ளது. மேலும் சபையின் துவக்க காலத்தில், அவருடைய நிருபங்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. மேலும், எபேசுவின் காலம் பெந்தெகோஸ்தே நாளன்று தொடங்கி, கி.பி 70 முதல் கி.பி90 இடையில் ஏதோ ஒரு குறிப்பிட்ட இடம் வரை தொடர்ந்தது என்று நாம் கருதுகிறோம்.

இந்த முதலாம் சபைக்கு அப்போஸ்தலனாகிய பேதுருவும் சாத்தியமான ஒரு தூதனாக கருதப்படுகிறார். "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்..

..பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்...என்றார்."(மத்தேயு16:18-19 ) பேதுரு முதலாவது பெந்தெகோஸ்தெ நாளன்று யூதர்களுக்கும், பின்னர் சமாரியர்களுக்கும் (அப்போஸ்தலர் 8:14-17 ), அதன்பின் புறஜாதிகளுக்கும் (கொர்னேலியு) சுவிசேஷத்தை அறிவித்தவர்.

இந்த காலத்தில் உள்ள சபை நீடிய சகிப்புத்தன்மைக்கும், பகுத்தறிவுக்கும் புகழ் பெற்றாலும், வெளிப்படையாக அதன் பக்தி வைராக்கியத்தை இழக்க அனுமதித்தது :"ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு." (வெளிப்படுத்தல் 2:4) ஆதிகால உபத்திரவங்கள், இயேசுவை நம்புவதற்கு (மிக சரியாக) அவர்களை வழிநடத்தியிருக்கவேண்டும். எனினும், இந்த துன்புறுத்துதல்கள் குறைந்தவிட்டபின், ஆதிகால கிறிஸ்தவர்கள் அதிகமான தன்னம்பிக்கையில் வளர்ச்சி அடைந்து, உண்மையான இலக்கிலிருந்து திசைத் திருப்பப்பட்டிருக்கலாம். கூடுதலாக, இவர்கள் நிக்கோலாயர்களின் செயல்களை வெறுப்பதற்காக பாராட்டப்பட்டார்கள். இது "வெற்றி அடைதல்" அல்லது "ஜனங்களை அடிபணிய வைப்பவர்கள்" என்ற அடையாள அர்த்தமுள்ள பெயராகத் தோன்றுகிறது. இதில், சபைக்குள்ளேயே (3யோவான் 9) மற்றவர்கள் மீது "அதிகாரம் செலுத்துவது" மற்றும் தலைமை ஏற்படுத்துவதற்கான ஒரு உந்துதல் குறிப்பிடப்படுவதை காணலாம். இருந்தபோதிலும், தலைமையின் உணர்வுகளை எதிர்த்து போராடுவதே நமக்கு எடுத்துக்காட்டின் மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது. (1பேதுரு 5:1-3) எனவே, நம்முடைய வரங்கள் எதுவானாலும் சரி, சபைகளில் நம்முடைய பங்களிப்பு எதுவாக இருந்தாலும் சரி, நம்முடைய பக்தி வைராக்கியம் குறையாமல், நம்முடைய சகோதர அன்பு மற்றும் மகிழ்ச்சியுடன் ஒத்துழைக்கும் உற்சாக ஆவியும் ஊக்குவிப்பதற்கு, விழிப்புடன் இருப்பதற்கான புத்திமதியை இந்த வசனங்களில் நாம் காண்கிறோம்.

**இரண்டாவது-சிமிர்னா**

சிமிர்னா சபைக்கு (வெளிப்படுத்தல் 2:8-11 ) தூதனாக இருக்கக்கூடிய ஒரு அருமையான தேவ மனுஷன் யோவான். இவர் வெளிப்படுத்தல் புத்தகத்தின் ஆசிரியர். துல்லியமாக சொல்வதற்கு கடினமாக இருந்தாலும், இந்த புத்தகம் கி.பி 70 க்கும் கி.பி 90 க்கும் இடையில் உள்ள காலப்பகுதியில்

எழுதப்பட்டிருக்கவேண்டும். சிமிர்னாவின் காலப் பகுதி கி.பி313 வரை நீடித்திருப்பதாக நாம் நினைக்கிறோம்.

சிமிர்னா என்ற பெயரின் அர்த்தம் "கசப்பு" என்பதாகும், இது அந்த காலத்தில் உள்ள சபை சகித்த துன்புறுத்துதலின் ஒரு சரியான விவரமாகும். ரோம சாம்ராஜ்யம், கிறிஸ்துவ விசுவாசத்திற்கு மிகக்குறைந்த சகிப்புத்தன்மை கொண்டிருந்தனர், ஆதலால், நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஜனங்களை இந்த இடைப்பட்ட சகாப்தங்களில் கொன்று குவித்தனர். நமது ஆண்டவர் ஊக்கப்படுத்தும் வார்த்தைகளோடும், அவரின் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் என பொய்யாய் கூறிக்கொண்டிருப்போர் உட்பட தன் ஜனங்கள் அனுபவிக்கும் உபத்திரவங்கள் மற்றும் குறைப்பாடுகளை அங்கீகரிக்கும், அங்கீகரிப்போடும் துவக்குகிறார். ஆனால் அவர்கள் உண்மையில் ஐசுவரியவான்கள் என்றும் (விலைமதிப்புள்ள வாக்குத்தத்தங்களில்) கொஞ்ச காலம் துன்பம் அனுபவித்தாலும் கூட, மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருப்பவர்கள் ஜீவ கிரீடத்தை பெறுவார்கள் என்று கூறிப்பிடுகிறார். (வெளிப்படுத்தல் 2:10)

நம்முடைய ஆண்டவரின் சித்தத்தையும் கற்பனைகளையும் பின்பற்றக்கூடிய உண்மையான விசுவாசிகள், பெருகிக்கொண்டிருக்கும் செல்வாக்கு மிகுந்த பொய் கிறிஸ்தவர்களின் குழுவினர்களால் கீழ்படுத்தப்பட்டார்கள். அவர்களில் சிலர் தங்களுடைய விசுவாசத்திலிருந்து பயனடைய முயன்றார்கள். (1கொரிந்தியர் 4:8-10 போல் இல்லாமல்) நீரோ, டையோகிளிஷன் மற்றும் அநேகருக்கு கீழ், நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். மற்றும் இறப்பின் கணக்கீடு ஆயிரகணக்கில் கணக்கிடப்பட்டன. (மதிப்பீடுகள் பரவலாக மாறுபடும்)

ரோமானிய தலைமைத்துவத்தால் துன்புறுத்தல்கள் தூண்டப்பட்டிருந்தாலும், பல வெளிநாட்டு நீதிபதிகள் வழக்குகளை பின்பற்றுவதற்கு ஊக்கமளிக்கவில்லை. இது கிறிஸ்தவத்தை ஒடுக்கியதே தவிர, முற்றிலுமாக அழிக்கவில்லை. ஆங்காங்கே, துன்புறுத்தல்கள் இருந்தபோதிலும், அது பெரும் வலியையும் மரணத்தையும் ஏற்படுத்தியது. இந்த கால பகுதியில் சபை வளர்ச்சி அடைந்து ஓரளவுக்கு முன்னேறியது. அவர்கள் துன்பப்பட்டிருப்பினும், நாமும் பல சமயங்களில் துன்பப்படும் போதும், (உண்மையில் அளவில் சற்றே குறைவுத்தான்) நாம் நினைவில் கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்னவெனில், எண்ணி முடியாத அளவான ஆசீர்வாதங்களும், ஜீவ கிரீடமும் நம்மில் இருக்கும் உண்மையுள்ளவர்களுக்காக இன்னும் வைக்கப்பட்டுள்ளது என்பதே!

**மூன்றாவது-பெர்கமு**

கி.பி 313ல், எகிப்தில் உள்ள அலெக்சாண்டிரியாவின் பாதிரியார் ஏரியஸின் செல்வாக்கு அதிகரித்தது. அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் மற்றும் அவர் எடுத்த ஆன்மீக நிலைப்பாடு அவரிடமிருந்து தோன்றாத போதிலும், அவர் ஒழுக்கக்கேட்டிற்கும், திருச்சபையின் தலைமைக் குழுவையும், ஊர்ந்து செல்லும் திரித்துவத்தின் தவறான கொள்கைக்கும் எதிராக குரல் கொடுத்தார். (கி.பி 325ல் பின்பற்றப்பட்ட நீசியன் அறிக்கை, பின்னர் 381ல் திருத்தப்பட்டது) எனவே, அவரை பெர்கமு சபைக்கு தூதுவராக நாம் கருதுகிறோம். பெர்கமு என்ற பெயருக்கு, "பூமிக்குரிய உயர்வு" என்று பொருள். இந்த காலப்பகுதியில், சபையின் தலைமை மற்றும் போப் அமைப்பும் உயர்த்தப்பட்டதை நாம் காண்கிறோம்.

இந்த சமயத்தில் உண்மையான சபை சாத்தானின் சிங்காசனத்தின் மத்தியில் குடியிருப்பதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது ரோமாபுரியில் போப் அமைப்பின் தலைமைத்துவம் உறுதிப்படுத்துவதைக் குறிப்பதாக தோன்றுகிறது. இவர்கள் களைகளாகிய தவறுகளுக்குள் கோதுமை மணிகளாக கலந்திருந்தாலும், பாப்பரசரின் எழுச்சியை மிகவும் எதிர்த்தவர்கள் மௌனமாக்கப்பட்டாலும், அவர் விசுவாசத்தை மறுதலிக்காமல் இருப்பதற்கு புகழ்ந்துரைக்கப்படுகிறார்கள். (வசனம் 13, அந்திபா = அந்தி பாப்பா, "பிதாக்களுக்கு எதிராக)

விசுவாசங்களில் காணப்பட்ட நுட்பமான ஊழல்கள், அக்காலத்தில் இன்னும் கூடுதலான ஒரு சவாலாக இருந்தது. நேரடியான துன்புறுத்தலுக்கு பதிலாக திசைதிருப்பலும், திசைமாற்றமும் இடம்பெற்றது. கிறிஸ்தவத்துடன், புறஜாதியாரின் காரியங்களும் அதிகமாக இணைய துவங்கியது. (ஈஸ்டர், திருத்துவம், கிறிஸ்மஸ், மரியாளின் வணக்கம், அழியா ஆத்துமா, இவைகள் அனைத்தும் புறஜாதியாரின் வழியாக தோன்றியது) சபை பிரபலமடைவதில் வளர்ச்சி அடைந்தாலும், உண்மையான கிறிஸ்தவர்கள், தீய ஒழுக்கக்கேடுகளுக்கு எதிராக போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்த விஷயங்கள் நமக்கு இன்று நடப்பதை நாம் காண்கிறோம். (சுயநலம், பெருமை, மனநோய் மற்றும் முழு அளவிலான பாவங்களை ஏற்றுக்கொள்ளுதல்) நாம் இந்த உலகத்தில் இருந்தாலும், அதன் துரோகங்களில் பங்கெடுத்துக்கொள்ளக்கூடாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பெர்கமுவிற்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நாம் பற்றிக்கொள்வோம். ".....ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து..." (வசனம் 17) - தேவனுடைய அழிவில்லாத வார்த்தை - விசுவாசமுள்ளவர்களாக காணப்படுகிறவர்களுக்கு, ஆவிக்குரிய உணவையும், அழியாமையையும் அளிக்கிறது.

**நான்காவது-தியத்தீரா**

அடுத்தது தியத்தீரா சபை, இதற்கு "பலியின் நறுமணம்" என்று பொருள். இந்த காலப்பகுதியில், நீதியின் நிமித்தம் நீண்ட காலமாக துன்புறுத்தப்படுவதை நாம் கற்பனை செய்யலாம். கி.மு 1160 ற்கு அருகில், வாழ்க்கையை மாற்றக்கூடிய தொடர் நிகழ்வுகள், பீட்டர்

வால்டோவை, தனது வசதிமிக்க வர்த்தகத்தை விட்டு, ஒரு ஆன்மீக பாதையை தேர்வு செய்ய வழிவகுத்தது. புதிய ஏற்பாட்டை லத்தீன் மொழியிலிருந்து பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்ப்பதற்கு ஒரு மதகுருவை அவர் நியமித்தார், போப் அமைப்பு தங்களது சுய நலத்திற்காய் வேதாகமத்திலிருந்து விலகி எழுத ஊக்கம் அளித்ததை இதன் மூலமாய் அவர் உணர வழிவகுத்தது. அவர் தனது மனைவியிடம் தன் சொத்தை ஒப்படைத்துவிட்டு, எஞ்சியிருந்ததை ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு, பொது ஜனங்களுக்கு பிரசங்கிக்க மற்றும் போதிக்கக்கூடிய ஒரு எளிய வாழ்க்கைக்கு தன்னை அர்ப்பணித்தார்.

கத்தோலிக்க திருச்சபை தழுவிக் கொண்டிருந்த சுய-சடங்குள் மற்றும் பாரம்பரியங்கள் - பாவ மன்னிப்பு, அதற்கான சீட்டு, குழந்தை ஞானஸ்நானம், அப்பம் சரீரமாக மாறுதல்( transubstantiation) போன்றவைகளை வெளியே எறிந்துவிடக்கூடிய பண்புகளினால் இந்த காலப்பகுதியில் உள்ள விசுவாசிகள் அடையாளம் கண்டுக்கொள்ளப்பட்டார்கள். வால்டோ மற்றும் அவரை பின்பற்றினவர்கள், போப் அமைப்பின் பல்வேறு காரியங்களை வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட "வேசியின்" ஆதாரங்கள் என விவரித்தன ! சபையின் தவறிழைக்காத தன்மை நன்கு நிறுவப்பட்டது முதல் கத்தோலிக்க சபையின் அரசியல் வலிமைக்கு சவாலான ஒரு நேரமாக இருந்தது. அதினால் வேதாகம அடிப்படையில் எழுப்பப்படும் கேள்வியானது கள்ளப்போதனையாக கட்டமைத்தனர். இதனால், அதிகாரத்தில் உள்ளவர்கள், வேதவாக்கியங்களுக்கு ஒழுக்கக்கேடான மனித சிந்தனைகளை பொருத்தினார்கள். இதன் விளைவாக தவறான விளக்க உரைகள், "தேவனுடைய பரிபூரண வார்த்தைகளாக" ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வேசியாகிய" யேசபேலுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்று வெளிப்படுத்தலின் தீர்க்கதரிசனத்தின் மூலமாக இவர்கள் எச்சரிக்கப்படுகின்றன. யேசபேலின் தவறான கூற்றுகளை தீவிரமாக அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக பலர் செயலற்ற நிலையில் அவளை எதிர்த்தார்கள். ஆனாலும், அவளுடனும் அவள் பிள்ளைகளுடனும் (புரோட்டஸ்டன்) கூட விபச்சாரம் செய்கிறவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று தெளிவாக செய்தி அறிவிக்கப்படுகிறது. (வெளிப்படுத்தல் 2:22-23)

தவறான போதனைகளில் மத்தியிலும், சகிப்புத்தன்மையுடையவர்கள், சத்தியத்தை இறுக பற்றிக்கொள்ளும்படிக்கு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இறுதியில் அட்டவணைகள் மாறும் என்று உறுதியளிக்கப்படுகிறன்து. இருப்பு கோலால் கடுமையான ஆட்சி புரிந்தவர்கள். இறுதியில், பதவியிழந்து அபகரித்து கொண்டோரின் மீதும், கவிழ்த்தப்பட்டவர்களின் மீதும் உறுதியாய் ஆட்சி செய்வோராய் மாறிவிடுகின்றனர். (வசனங்கள் 26-27).இது இன்றைய தினத்திற்கு இணையான ஒரு வாக்குத்தத்தம் என்று தெளிவாகிறது. தவறுகளை எதிர்க்கும் போது உறுதியாய் நிலைத்திருக்க வேண்டிய அவசியத்தை இப்போது நாம் பாக்கிறோம். மேலும் முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றும் நாம் அறிவோம்.

பதிப்பாசிரியரின் குறிப்பு: நான்காம் சபையான தியத்தீரா கி.பி 1517 வரை தொடர்ந்தது, சர்தை சபையானது கி.பி 1517 துவங்கி கி.பி 1700 வரை புரட்டஸ்டன்ட், உலகம் முழுதும் நற்செய்தி ஊழியங்களை செய்ய துவக்கியது முதல் கொண்டு தொடர்ந்தது என சில ஹெரால்டு பதிப்பாசிரியர்கள் நினைக்கின்றனர்.

**ஐந்தாவது-சர்தை**

சர்தை சபை ("மீதமுள்ள" அல்லது "எஞ்சியுள்ள" ) ஒரு முந்தைய முக்கிய உயிரினத்தின் மேலோடு அல்லது உமியை (husk) அடையாளப்படுத்துகிறது. தியத்தீரா சபையின் காலப்பகுதிக்கு பின்னும், வாழ்ந்த மீதியிருந்த விசுவாசமுள்ளவர்களால் இந்த காலப்பகுதி உருவானது.தேவனுடைய வார்த்தையின் சார்பாக ஜான் விக்ளி∴பின் ஏறெடுத்த முயற்சியினால், இந்த காலப்பகுதிக்கு இவரே தூதுவராக இருந்திருக்கலாம் என்று தெரிகிறது. போப்பின் பிடியிலிருந்து வெளியேறுவதற்கு இங்கிலாந்து போராடிக்கொண்டிருந்த கி.பி 1367ல் எங்காவது இக்காலப்பகுதி துவங்கியிருக்கவேண்டும். போப்பரசின் அஸ்திபாரத்தை தாக்கும் வேதவசனத்தைப் பயன்படுத்தி, அவர் கத்தோலிக்க சபையின் எதிரி என்று தெளிவாக கருதப்பட்டார்.

"நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" என்பதே இந்த சபைக்கு உண்டான செய்தியாகும். (வெளிப்படுத்தல் 3:1 )ஆரம்பத்தில் அவர்களின் செய்தித் தகவலை பரப்புவதில் திறமையாக இருந்தபோதிலும், தலைமை இறந்தபின், அந்த இயக்கம் வீழ்ச்சியடைய துவங்கியது. ஆகையால், இறந்துபோகிற காரியங்களை வலுப்படுத்த உற்சாகப்படுத்தப்பட்டார்கள் - நற்கிரியைகளைச் செய்தார்கள், சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டது.

காலப்போக்கில், இந்த இயக்கத்திற்கு ரோம திருச்சபையும் ஆட்சியும் எதிராக வரும் அழுத்தம் அதிகரித்தது. ஆகவே மீதியானோர் இரகசியமான சபையானார்கள். பலவீனமாகும்படி தாக்கப்பட்டாலும், விக்ளி∴பினால் விதைக்கப்பட்ட விதைகள் ஒரு போதும் இறந்துபோகவில்லை. இருப்பினும், வெளிப்படுத்தல் 3:4ன்படி, சிலர் மட்டுமே இந்த சோதனையின் போது விசுவாசமாக நிலைத்திருப்பதாக தெரிகிறது. நாமும் கூட, இந்த சோதனைகளை ஜெயித்தால், வெண்வஸ்திரம் அணிவிக்கப்படுவோம் என்று வாக்குத்தத்தம் அளிக்கப்படுகிறது. (வசனம்5)

**ஆறாவது - பிலதெல்பியா**

போப் அமைப்புக்குள் ஊழல்கள் தீவிரமாக அதிகரிக்கும் போது, பிலதெல்பியா சபை ("சகோதர அன்பு") காட்சிக்குள் வருகிறது. கி.பி 1517 ஆம் ஆண்டில் அக்காலத்து தூதராகிய மார்ட்டின் லூத்தர் தனது புகழ்பெற்ற "95 ஆய்வுரைகளை " வெளியிட்டார் - இது முதன்மையாக பாவ மன்னிப்பு சீட்டையும், பின்னர் போப்பமைப்பின் அதிகாரத்தையும் எதிர்த்தது. இந்த நேரம் வரையில் அந்தி கிறிஸ்துவின் தவறான கூற்றுகள்

இந்த அளவுக்கு முழுமையாக அம்பலப் படுத்தப்படவில்லை. கடந்த காலத்தில் "சபையின் தலைவர்" தேவனால் ஆதரிக்கப்படவேண்டும் என்ற இயல்பான அனுமானத்தை லூத்தர் கண்ணோக்கினார். அவ்வாறு செய்யும்போது, அதன் படிநிலை அமைப்பு (அதன் தலை) உண்மையான மதத்தின் எதிரி என்று அவருக்குத் தெளிவாக தெரியவந்தது.

சீர்திருத்த காலத்தின் வெற்றியானது பெரும்பாலும் பலதரப்பட்ட ஜாதிகள், இனங்கள் மற்றும் நம்பிக்கைகளின் சகோதரத்துவத்தில் சார்ந்து இருந்ததை, இந்த காலக்கட்டத்திற்கு வைத்த பெயரான சகோதர அன்பானது அதை பிரதிபலிக்கிறது. நீண்ட காலமாக சபையை வாதித்துக்கொண்டிருந்த "தலைமையத்துவம்" இந்த காலத்தில் குறைந்து, சமத்துவமான மனப்பான்மை அதிகமாக காணப்பட்டது. இருப்பினும், யூதர்களாக (ஆவிக்குரிய இஸ்ரயேலர்)நடிப்பவர்களை குறித்து உண்மையான சபையை ஆண்டவர் எச்சரிக்கிறார். (வெளிப்படுத்தல் 3:9)

இந்த காலப்பகுதியின் முடிவில் மில்லர் இயக்கம் வந்தது. (1800 ஆம் ஆண்டின் நடுவாக) அப்போது 1844 ஆம் ஆண்டு பலர் உலகின் முடிவை எதிர்பார்த்தனர். இது செயல்படத் தவறியபோது பலருடைய விசுவாசம் சவாலானது. "சோதனையின் காலத்திலும்" (வசனம் 10)காரியங்கள் தெளிவாகும் வரையில், சிலர் தங்கள் விசுவாசத்தை காத்துக்கொண்டார்கள். அவர்கள் (நாமும்) விழுப்புடன் இருக்கவேண்டிய அவசியம் நினைவுபடுத்தப்படுகிறது. இல்லாவிட்டால் எதிர்பார்க்கூடிய பரிசை இழக்கநேரிடும்.

**ஏழாவது - லவோதேோத்தியா**

இறுதியாக, நாம் லவோதிக்கேயா சபைக்கு வந்துவிட்டோம். இவர்கள் குளிரும் இல்லாமல் அனலும் இல்லாமல் வெதுவெதுப்பாக இருக்கக்கூடிய அபாயத்தில் இருப்பவர்கள். சிலர் இந்த சபையில் உள்ள பக்தி வைராக்கியத்தின் வெப்ப நிலையை வெளிப்படுத்துகிறதாக நம்புகிறார்கள். ஒருவேளை ஒரு சிறந்த விளக்கம், தனிப்பட்ட கிறிஸ்தவ இருதயத்தில் சத்தியத்தின் விளைவை ஆதரிக்கலாம். "குளிர்" என்பது தேவனுடைய வார்த்தையைப் படிப்பதால் வரும் " புத்துணர்வாகும்" அதே சமயத்தில் "அனல்" குணலட்சணங்களை சுத்திகரிப்பதை குறிக்கும். ஒரு வெதுவெதுப்பான கிறிஸ்தவர் புத்துணர்வையும் அடையமாட்டார், வசனங்களினால் சுத்திகரிப்பையும் அடையமாட்டார். ஆனால் அவர்களது நடையில் கவனமின்மை காணப்படும்.

சகோதரர் சி. டி. ரசலின் கைகளிலிருந்து பெற்ற, ஏற்ற கால உணவினால் ஆசீர்வதிக்கப்பட்ட, ஏழாம் கால சபைக்கு, ஆண்டவரின் வருகையின் நோக்கம் மற்றும் விதத்தைப்பற்றிய தெளிவான புரிதலை அளிக்கிறது. கி.பி 1877 ஆம் ஆண்டில் அல்லது அதற்குள், சி.டி ரசல் முழுநேர ஆவிக்குரிய அழைப்பைப் பின்பற்றவதற்கு ஆதரவாக, அவருடைய பூமிக்குரிய வியாபாரத்தை கைவிடுவதற்கு முடிவு செய்தார். அவருடைய எழுத்துக்களின் பல விவரங்களை நாம் நன்கு அறிந்திருந்தாலும், இருப்பினும், பகலின் பிள்ளைகளைப் போல கவனமாய் நடந்துகொள்ளுமாறு அவர் கொடுத்த எச்சரிக்கை மற்றும் ஊக்கம் ஆகியவற்றை நாம் நினைவில் கொள்வோமாக. வேதாகமம், ஆறு தொகுதிகள் மற்றும் மறுபதிப்புகள் நாம் வைத்திருந்தால் மட்டும் போதாது, அறுவடை சத்தியத்தின் நியமங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். விசுவாசம் கேட்பது மட்டும் அல்ல, கேட்டு அதன்படி நடக்கவேண்டும்.

பழங்கால லவோதிக்கேயா பட்டணம் ஒரு பணக்கார வங்கி மற்றும் வணிக மையமாக இருந்தது. அவர்களுக்கு எதுவும் தேவையில்லை என்று அவர்கள் உணர்ந்தார்கள். அதற்கு பதிலாக, அவர் நமக்கு எப்போதும் அவசியம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அவர் நம்மை நேசிப்பதினால், மட்டுமே நம்மை கடிந்துக்கொள்கிறார். (வசனம் 19) மேலும் அவர் வாசல் அருகே நின்று கதவை தட்டுவதினால், நேரம் நெருங்கிவிட்டது என்று நாம் அறிந்திருக்கிறோம். (வசனம் 20)

**முடிவுரை**

கடுமையான சோதனையினுடைய அழுத்தத்தின் கீழ் உண்டாகும் கிருபை மற்றும் விசுவாசத்தின் அற்புதமான வரலாற்று உதாரணங்கள் ஏழு சபையின் காலங்களில் வாழ்ந்த நம்முடைய சகோதரர்கள் மூலமாய் நமக்கு கிடைக்கப் பெறுகிறது. சுவிசேஷ யுகத்தின் வரலாற்றின் கடந்த கால நிகழ்ச்சிகளை காணக்கூடிய ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளோம், நமது நாளில் இந்த அருமையான வாக்குத்தத்தங்களின் மீதான முன் எப்போதும் இல்லாதபுரிதலை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முன்னோர்களின் மிகுந்த விசுவாசத்தை நாம் கற்றுக்கொள்ளுவோம். அவர்களுடைய வாழ்க்கைகளின் சாட்சிகளின் வழியாக அவர்கள் நமக்களிக்கும் உற்சாகத்தையும் பெற்றுக்கொள்வோம்.

விசுவாசத்தில் வலுவடையவும், நாம் அழைக்கப்பட்ட அழைப்பில் செய்ய வேண்டிய ஊழியவேலைகள் மற்றும் நற்பண்புகளின் வளர்ச்சியைப் பற்றி தெளிவான புரிதலுக்காக வேத வசனங்களை ஆராய்வதற்கு கவனமாக இருப்பதற்கும் அவர்களின் முன்மாதிரிகளை பயன்படுத்துவோம். இறுதியாக, இயேசு கிறிஸ்துவினால் குறிப்பாக நமக்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்பை எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். நம்முடைய வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் பரிசுத்த ஆவியின் வல்லமையான கிரியைகள் மற்றும் வேத வசனங்களில் வல்லமை நம்மை சுத்திகரித்து, புதுப்பித்துக்கொண்டிருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்

**வெளிப்படுத்தல் 4-5**

# இரண்டு யுகங்களும் மறைக்கப்பட்டது



Shawn Ledwinka

"ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறார்" (கொலோசேயர் *1:25* )

தேவனுடைய சிந்தைக்குள்ளான காட்சியையும், மனுக்குலசிருஷ்டிப்பு முன்பாகவே திட்டமிட்டு வைத்திருந்த அவரின் இரட்சிப்பின் திட்டத்தை பற்றிய காட்சியையும், வெளிப்படுத்தின விசேஷம் 4 மற்றும் 5ம் அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. "உலகத்தின் தோற்றமுதல் தேவனால் மறைக்கப்பட்ட மறைபொருளை" (எபேசியர் 3:9)இயேசு அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினார். இந்த வெளிப்பாட்டைக் கண்டு, அதை நமக்காக எழுதி வைக்கக்கூடிய எப்பேர்ப்பட்ட பாக்கியத்தை யோவான் பெற்றார்!

நாம் அறிந்திருக்கிறபடி காலத்தை அளவிடுவதற்கு முன், தேவன் இப்பிரபஞ்சத்தில் தன்னந்தனியாக இருந்தார். தேவனுடைய குடும்ப வட்டாரத்தின் லோகோஸ் (தேவனுடைய முதல் படைப்பாற்றல் செயல்) ஒரு துவக்கமாகவும், உண்மையில் அவரே தேவனுடைய மனமகிழ்ச்சியாகவும் இருந்தார் என்று நீதிமொழிகள் 8:23-30 ல் ஞானி கூறுகிறார். தேவன் தம்முடைய மனமகிழ்ச்சிக்காக எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் என்று வெளிப்படுத்தல் 4:11 ல், 24 மூப்பர்கள் நமக்கு அறிவிக்கிறார்கள். தனக்கு ஒரு குடும்பம் வேண்டும் என்று தேவன் விரும்பினதால், அவர் லோகோஸையும், தேவதூதர்களையும், மனுக்குலத்தையும் சிருஷ்டித்தார் என்று தெளிவாகிறது.

வேதாகமத்தில் உள்ள மனுக்குலத்தின் வரலாறு பரிபூரணத்தோடு துவங்குகிறது. ஆனால் விரைவில் பாவத்தின் துயரத்திற்குள் நகர்ந்துவிட்டது. ஆனாலும் மனித குடும்பம் தம்மிடம் திரும்புவதற்கு நம் பரலோகத் தந்தை ஒரு வழியை ஆயத்தம் செய்தார், முதலாவது ஆபிரகாம் தேவனுடைய நண்பராக மாறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது, பின்னர் கீழ்ப்படிதலின் மூலமாக இஸ்ரயேல் ஜனங்களும், அதற்குபின் அவருடைய ஒரே பேறான குமாரனின் இரத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் முழு மனுக்குலத்திற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

லோகோஸ் செய்ய வேண்டிய அனைத்திலும், அவர் தேவனுக்கு உண்மையுள்ளவராக இருந்தது போல, இந்த உலகத்தின் மனுக்குலமும் அவருடைய குமாரன் மேலுள்ள விசுவாசத்தின் வழியாக அவர்களுடைய உண்மையை காட்டுவதற்கு அவர் விரிவான ஒரு வாய்ப்பை திறந்தார். தேவன் தம்முடைய நாமத்திற்காக அழைக்கப்பட்ட ஜனங்கள், இயேசுவை போலவும், தன்னை போலவும் அதே தெய்வீக இயல்புகளோடு எழுப்பப்படுவதற்கு குறிப்பிட்ட விதிமுறைகள் மூலம் உருவாக்குகிறார்.

**வெளிப்படுத்தல் 4**

யோவான் பரலோகத்திற்கு செல்லும் ஒரு திறந்த கதவை கண்டார். மறுபுறத்தில் இருப்பதை பார்ப்பதற்கு, அதை கடந்து செல்ல விரும்பினார். யோவான் ஆவியில் நிறைந்தவராக அதற்குள் பிரவேசித்த போது, எதிர்காலத்தை பார்ப்பதற்கு அவருக்கு இயேசு கொடுத்த அழைப்பை கேட்டார். அதன்பின், சுவிசேஷ யுகத்தை ஒரு பரலோக பார்வை, யோவானுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

24 மூப்பர்கள் வெண் வஸ்திரம் தரித்தவர்களாக, தலைகள் மீது பொன்கிரீடங்கள் அணிந்தவர்களாக தேவனுடைய சிங்காசனத்தை சுற்றி சிங்காசனங்களில் உட்கார்ந்திருப்பதை யோவான் கண்டார். இந்த 24 சிங்காசனங்களும் 24 மூப்பர்களுக்கு தேவன் கொடுத்த அதிகாரத்தை அடையாளப்படுத்துகிறது. வெண் வஸ்திரம் தேவனிடமிருந்து வரும் பரிசுத்தமான செய்தியையும், பொன்னான கிரீடங்கள், தெய்வீக தூண்டுதலான எண்ணங்களை அடையாளப்படுத்துகிறது. தேவதூதர்களும் தெரிந்துகொள்ள விரும்பும் ஒரு இரகசிய செய்தியை நாம் பெற்றிருக்கிறோம் என்று கூறி, 1பேதுரு1:12 மற்றும் 2 பேதுரு1:21 ல் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களின் முக்கியத்துவத்தை பேதுரு உறுதிப்படுத்துகிறார்.

**24 மூப்பர்களின் அர்த்தத்திற்கான மற்ற கோணங்கள்:**

(1)இவைகள் முற்பிதாக்களின் வகுப்பாரை அடையாளப்படுத்தலாம். நோவா, ஆபிரகாம், மோசே போன்ற சிலர் எபிரெயர் 11ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர். முற்பிதாக்களின் எண்ணிக்கை 24க்கும் அதிகமாக இருப்பதால், 24 என்பது ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை அடையாளப்படுத்தலாம். 1நாளாகமம் 25இல் 24 இசைக்கலைஞர்களால் முற்பிதாக்கள் அடைளப்படுத்தப்படுகிறார்கள். முற்பிதாக்கள் அனைவரும் இயேசுவைப் பற்றியும், அவருடைய ஈடுபலி, வருங்கால மணவாட்டி, சபையைப் பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்.

(2)இவைகள் எபிரெய வேதாகமம் கொண்டிருக்கும் 24 புத்தகங்களை அடையாளப்படுத்தலாம். முதலில் 22 புத்தகங்கள் எபிரெய வேதாகத்தில் பரிசுத்தப் படுத்தப்பட்டது. அப்போஸ்தலனாகிய யோவான் சுமார் கி.பி 70 ல் வெளிப்படுத்துதலை பதிவு செய்தபோது, அதே எபிரெய வேதாகமத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். 2 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், எபிரெய வேதாகமம் 24 நூல்களாக பிரிக்கப்பட்டது. அதே நேரத்தில் புதிய ஏற்பாடு 27 புத்தகங்களாக தொகுக்கப்பட்டது. அந்நேரத்தில் இந்த 2 எண்கள் வேதாகமத்தில் சேர்க்கப்பட்டு, 49 என்ற பொருத்தமான எண்ணாக மாறினதை, யூத மத அதிகாரம் (இன்னும் அப்போஸ்தலர்களுடன் இயேசுவையும் அவரது செய்தியையும் சேர்த்து நிராகரித்து கொண்டிருந்தனர்)

கவனித்தது. புதிய ஏற்பாட்டை இழிவுபடுத்த, எபிரெய வேதாகமத்தில் இரண்டு புத்தகங்களைப் பிரித்தார்கள். இவ்வாறாக மொத்தத்தில் 51 என்ற ஒரு முக்கியமற்ற எண்ணை உருவாக்கினார்கள்.இந்த சூழ்நிலையில், ஒருவேளை கடைசியான இந்த நிலைப்பாட்டை இயேசு முன்கூட்டியே அறிந்திருந்ததால், வெளிப்படுத்துதல் புத்தகத்தில் அதைக் குறித்து வைக்கும்படிக்கு யோவானிடம் அவர் கேட்டுக்கொண்டார். இன்றைய வேதாகமம் 66 புத்தகங்களாக பிரிக்கப்பட்டிருப்பதை, ஆசரிப்புக் கூடாரத்தில், பரிசுத்த மேஜையின் மேல் அடிக்கி வைக்கப்பட்டிருக்கும் அவ்வாறு அப்பங்கள், மிக அருமையான அடையாளப்படுத்துவதை எண்ணி நாம் வியந்துபோகிறோம்.

24 மூப்பர்கள் முற்பிதாக்கள் வகுப்பார் அல்லது எபிரெய வேதாகமத்தின் 24 புத்தகங்களை அடையாளப்படுத்தினாலும், இவ்விரண்டிலுமிருந்த வரக்கூடிய செய்தி ஒன்றே :"யூதா கோத்திரத்தின் பால சிங்கம்" என்பதை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்.

தேவனுடைய ஏழு ஆவிகளாக இருக்கக்கூடிய ஏழு குத்துவிளக்குகள், வெளிப்படுத்துதலின் அடுத்த சில அதிகாரங்களை அறிமுகப்படுத்துகின்றன, இது அடுத்து வரும் இரண்டாயிரம் ஆண்டுகளில் சுவிசேஷம் எவ்வாறு வெளிப்படுத்தப்படும் என்பதை விளக்குகிறது. ஆவிக்குரிய நிலைப்பாட்டில், யூத யுகத்திலிருந்து, சுவிசேஷ யுக மாற்றத்தை காண்பிப்பதே வெளிப்படுத்தல் 4-5 ம் அதிகாரத்தின் நோக்கமாக இருக்கிறது. இந்த இரண்டு அதிகாரங்களும் சகல சிருஷ்டிகளும், சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகருக்கு மகிமை சேர்ப்பதோடு முடிவடைகிறது. (வெளிப்படுத்தல் 5:13)

தேவனுடைய சிங்காசனத்தை மையமாகக் கொண்டு, யோவான் சிங்காசனத்தின் மத்தியிலும், சுற்றியிலும் உள்ள நான்கு ஜீவன்களைப் பற்றி விவரிக்க துவங்குகிறார். நான்கு ஜீவன்களில் ஒன்று சிங்கம் முகம் போலவும் ஒன்று காளை முகம் போலவும், ஒன்று மனித முகத்தை போலவும், ஒன்று பறக்கும் கழுகு போன்றும் ஒத்திருக்கிறது. எசேக்கியேல் 1:10 ல் எசேக்கியேலும் இதுபோன்று ஒரு தரிசனத்தை கண்டார். இந்த நான்கு ஜீவன்களும், தேவனுடைய நான்கு முக்கிய குணநலன்களை விவரிக்கின்றன :

(1)சிங்கம், அவருடைய மிக உயர்ந்த மகத்துவத்தை அடையாளப்படுத்துகிறது (எபேசியர் 1:19-20)

(2)காளை, அவரது ஈடுபலியினால் திருப்தி அடைந்த அவருடைய நீதியை அடையாளப் படுத்துகிறது.

(3)மனித முகம், அவருடைய பேறான குமாரனை கொடுத்ததன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய அன்பை வெளிப்படுத்துகிறது.(யோவான் 3:16)

(4)பறக்கும் கழுகு, எல்லாவற்றிலும் அவருடைய மிகுந்த ஞானத்தை அடையாளப்படுத்துகிறது.

சங்கீதம் 89: 14 லும் இதே பண்புகள் குறிப்பிடப்படுகிறது.

வெளிப்படுத்துதல் 4:8-9ல் இந்த நான்கு ஜீவன்களும் தேவனை மகிமைப்படுத்தத் துவங்குகையில், 24 மூப்பர்களும் தேவனுடைய பாதத்தில் விழுந்து அவரை மகிமைப்படுத்தினார்கள். தேவனுடைய நீதியான பண்புகள், அவருடைய முக்கியமான நான்கு குணலட்சனங்களில் வெளிப்படுவதை காணும்போது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை புரிந்துகொள்ளமுடியும் என்று இந்த வரிசை தீர்க்கதரிசனமாக உரைக்கிறது.

இந்த நான்கு ஜீவன்களும் தேவனை மகிமைப்படுத்த, ஏதோ ஒன்று அவர்களை தூண்டியிருக்கவேண்டும். இன்னும் ஏதோ நிறைவேற வேண்டும். வெளிப்படுத்துதல் 4ல் உள்ள சம்பவங்கள் முழுமையானது அல்ல, ஆனால் அவைகள் அடுத்த அத்தியாயத்திற்கான மேடை அமைக்கிறது. இதுவரை உருவாக்கப்பட்ட மிக வியத்தகு படத்தின் துவக்கத்தில், "இடைநிறுத்தம்" செய்ததுபோல யோவான் நம் மனதில் ஒரு காட்சியை ஏற்படுத்துகிறார்.

**வெளிப்படுத்தல் 5**

வெளிப்படுத்தல் 5ம் அதிகாரத்தின் துவக்கத்தில், படம் துவங்குதற்கான குறியை அழுத்தி, அவருக்கு முன் காட்சியளித்த படத்தை விவரிக்க துவங்கினார். தேவன் அவருடைய சிங்காசனத்தின் மேல் அமர்ந்திருக்கையில்அவருடைய வலது கையில், ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்ட ஒரு புத்தகத்தை பற்றி யோவான் விவரிக்கிறார். தேவனுடைய திட்டம், முத்திரிக்கப்பட்ட புத்தகத்தில் எழுதப்பட்டத்தினால், அவருடைய திட்டத்தை நிறைவேற்றக்கூடிய தகுதியான "இயக்குனர்" வரும்வரை காத்திருந்தது. முத்திரிக்கப்பட்ட இப்புத்தகம், உலக தோற்றம் முதல் மறைக்கப்பட்டிருந்த தேவன் நீதியான திட்டத்தை மறைத்து வைத்திருந்ததை சித்தரிக்கிறது. (ரோமர் 16:25-26)

இந்த நாடகம் அரங்கேறுகையில், அந்த புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை அறிந்துக்கொள்ள யோவான் ஆவலாக இருந்தார். அதன் மகத்தான முக்கியத்துவத்தை அவர் உணர்ந்தவராக, அதைப் புரிந்துக்கொள்ள மிகவும் வாஞ்சித்தார். அதைப் பற்றி அறியாததினால், கசப்பான துக்கத்தோடு அழுகவும் துவங்கினார்.

24 மூப்பர்களில் ஒருவர் யோவானை ஆறுதல்படுத்துவதற்கும், நான்கு ஜீவன்கள் தேவனை மகிமைப்படுத்துவதற்கான ஒரு குறிப்பையும் கொடுத்தார். "அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரை களையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். " (வெளிப்படுத்தல் 5:5) என்று அந்த மூப்பர்களில் ஒருவர் யோவானிடம் கூறினார். இது யாக்கோபின் மரணத்திற்கு முன், அவர் குமாரனாகிய யூதாவுக்கு கொடுத்த தீர்க்கதரிசனத்திற்கு ஒத்திருக்கிறது. (ஆதியாகமம் 49:8-11) இந்த இரு இடங்களிலும்

பேசப்படும் நபரை விளக்குவதற்கு பயன்படுத்தப்படும் வார்த்தைகளை கவனியுங்கள் : யூதாவை "சிங்கத்திற்கும்", செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதில்லை".

இதைப் பற்றி யாக்கோபு மற்றொரு குறிப்பை ஆதியாகமம் 49:11 ல் கொடுக்கிறார். "அவன் தன் கழுதைக்குட்டியைத் திராட்சச்செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சச்செடியிலும் கட்டுவான்; திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சப்பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான்." பழைய ஏற்பாட்டில் இயேசு சுட்டிக்காட்டிய தீர்க்கதரிசனங்களின் மதிப்புகள், இந்த நிகழ்வுகளில் உள்ளிடப்பட்டதை யோவான் நன்கு அறிந்திருந்ததினால், அவர் நிச்சயமாக ஆறுதல் அடைந்திருப்பார். (ஏசாயா11:1-5, 19:18-22, 53:1-12, தானியேல் 9:25-27 , சங்கீதம் 22:1-31, 141:2, யாத்திராகமம் 12:1-28, சகரியா 9:9-13, மீகா5:2 )

இயேசுவை யூதா கோத்திரத்தின் சிங்கமாக யோவான் இணைத்தவுடன், அவர் தேவனுடைய சிங்காசனத்தையும் "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியை போல ஒருவரையும்" கண்டார். இறந்துபோன ஆட்டுக்குட்டி நிற்பதை நீங்கள் எப்போதாவது பார்த்ததுண்டா? இது இயேசு தான்! .எல்லாவற்றிற்கும் மேலாக, "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் ஸ்நானகன் அறிவித்ததை யோவான் கண்டிருந்தார். (யோவான் 1:29 ) தேவனுடைய வலது கையிலிருந்த சுருளைக் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை பெற்றவர், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியை சித்தரிக்கும் இயேசுவே என்று அப்போஸ்தலனாகிய யோவான் இப்போது உணர்ந்தார்.

இறுதியாக, தேவனுடைய திட்டத்தின் அடுத்த யுகத்தை, அதாவது சுவிசேஷ யுகத்தை இயக்கும் தகுதிப்பெற்ற ஒரு இரட்சகர் வெளிப்படுத்தப்பட்டார். இயேசுவின் மேலுள்ள உறுதியான நம்பிக்கையுடன் யோவான் இளைப்பாறினார். அப்படியே நாமும் இருக்கலாம். தேவ தூதர்களாக்கும் மனுக்குலத்திற்கும் தேவனுடைய நீதியும் அன்பும் நிறைந்த திட்டம் இப்போது நமது கண்களுக்கு முன்பாக படிப்படியாக வெளிப்படுத்தப் படுகிறது. "அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ள வைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும் : சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லும் போது.." (வெளிப்படுத்தல் 5:13) மிக அருமையான ஆராதனையோடு தேவனுடைய திட்டம் நிறைவடையும். இப்பொழுது தெளிவான ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் நாம் பார்க்கையில், இந்த உலகம் இன்னும் அறியாமையில் காத்திருக்கிறதை உணரலாம். "மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் (*apokalupsis*) சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது." (ரோமர் 8:19) நம்முடைய பரலோக தந்தையுடைய வல்லமைவாய்ந்த, நீதிநெறிகளையும், அன்பையும், சர்வ சிருஷ்டிக்கும் அவருடைய ஞானமுள்ள ஆழமான பார்வையையும் நமக்கு தந்ததற்காகவும் அவரை புகழுவோம், போற்றுவோம். ஆமேன்.

**முடிவுரை**

அறிவின் மிக முக்கிமான பகுதி, அதன் பிரயோகமாகும். தேவனுடைய திட்டத்தை அறிந்துக்கொள்ளவும், அதை புரிந்துக்கொள்ளும் முயற்சியில், வேதாகமத்தை ஆழமாக தோண்டி எடுத்து, "இதற்குப் பின் என்ன நடக்க வேண்டும்" என்று முயன்றாலும், மாம்சத்தின் எல்லா புரிதலையும் (எல்லா புத்திக்கும் மேலான)கடந்து செல்லும் தேவ சமாதா னத்தின் பெறும்பகுதி நமக்கு கொடுக்கப்படுகிறது. (வெளிப்படுத்தல்4:1 , பிலிப்பியர்4:7)

இந்த சமாதானத்தோடே, சுவிசேஷத்தின் உள்ளிருக்கும் வேலையை செய்வதற்கு, வேதவாக்கியங்க ளிலிருந்து நாம் கற்றுக்கொண்டவற்றை பிரயோகித்து, நம்முடைய நற்பண்புகளை மெருகேற்றலாம். இந்த முக்கியமான வேலைகளில் நாம் பெறும் இறுதியான வெற்றி, நமது பரலோக தகப்பனின் சித்தத்தை செய்வதற்கும் உதவும் - அவரது பெரிய குடும்ப வட்டத்தை நிறைவடைச் செய்யும். இப்போது இதில் அவருடைய குமாரனுடைய மகிமை அடைந்த மணவாட்டியும் அடங்குவார்கள்.

தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாக இயேசு கிறிஸ்துவும், மகிமையடைந்த கிறிஸ்துவின் மணவாட்டியும் சேர்ந்து தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவார்கள். தேவனுடைய மாபெரும் திட்டம்.

# ஏழு முத்திரைகள்



Micah Hess

"ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன்." (வெளிப்படுத்தல் *6:1*)

வெளிப்படுத்துதலின் புத்தகத்தில் சுவிசேஷ யுகத்தில் பல சித்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு சித்திரமும் வித்தியாசமான கோணத்தில் சபை வரலாற்றை காட்டுகிறது. 6:1 லிருந்து 8:1 வரை விவரிக்கப்பட்டது போல, இந்த ஐந்தில் இரண்டாம் கருத்து வெளிப்படுத்தலின் ஏழு முத்திரைகளை கண்ணோக்கு கிறது. ஏழு முத்திரைகளின் துவக்கம், ஆதி சபையில் வழங்கப்பட்ட உண்மையுள்ள தூய்மையான சத்தியத்திலிருந்து, கொள்கைகளின் உண்மைத் தன்மையின் முன்னேற்றத்தை காட்டுகிறது, இடைகாலத்தில் தொடர்ந்து அவைகள் சிதைக்கப்பட்டு, கெடுக்கப்பட்டாலும், சீர்திருத்த முடிவில், இறுதியாக சுவிசேஷ யுகம் அறுவடையின் காலத்தில் மீண்டும் தூய்மையான கொள்கைகள் வந்து சேர்ந்தது.

"புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் ?" என்று வெளிப்படுத்தல் 5ம் அதிகாரத்தில் கேள்வி எழுகிறது. அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியே, புஸ்தகத்தை திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளை உடைக்கவும் பாத்திரமாக இருக்கிறார் என்ற சத்தம் கேட்டது. ஆட்டுக்குட்டியாகிய இயேசு தன்னை தகுதியுள்ளவராக நிரூபித்ததினால், அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. மனித இனத்தின் மீட்புக்காக தேவனுடைய திட்டத்தை அறிவதற்கும், அதை நிறைவேற்றுவதற்குமான திறனும் வழங்கப்பட்டது.

### முதலாம் முத்திரை

முதலாம் முத்திரை வெளிப்படுத்தல் 6:1-2ல் சித்தரிக்கப்படுகிறது. ஆட்டுக்குட்டியானவர் முதலாம் முத்திரையை உடைத்தார். வெளிப்படுத்தல் 6:2 ல் யோவான் கண்டதை விவரிக்கிறார். "நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன். அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான், அவனுக்கு ஒரு கிரீடங்கொடுக்கப்பட்டது, அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்." வெளிப்படுத்தல் 6ல் யோவான் கண்ட நான்கு குதிரை வீரர்களில் இது முதலாவது குதிரையாகும். இந்த வெள்ளை குதிரை, வில் மற்றும் கிரீடம், தூய்மையான சத்தியத்தை சித்தரிக்கிறது. இது ஆதிகால சபையில் ஊற்றப்பட்ட உயர் தரமான சத்தியமாக இருந்தது. இந்த தூய்மையான சத்தியத்தின் வல்லமை, ஆதி சபையில் மற்றும் அப்போஸ்தலர்களின் ஊழிய வேலையிலும், அறியப்பட்ட உலகெங்கும் வேர் விட்டு பரவுவதற்கு அனுமதித்தது.

### இரண்டாம் முத்திரை

இரண்டாம் முத்திரை வெளிப்படுத்தல் 6:3ல் திறக்கப்படுகிறது. பின்னர் யோவான் ஒரு சிவப்பு குதிரையையும், அதை சவாரிச் செய்பவரையும் குறித்து விவரிக்கிறார். "இதற்கு பூமியிலுள்ள சமாதானத்தை எடுத்துபோடும்படிக்கு ஒருவரை ஒருவர் கொலைச் செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டது, ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. சபையின் இரண்டாம் நிலைக்கு கிடைக்கபெற்ற சத்தியத்தின் தரம் தூய்மையாக இல்லை என்பதை சிவப்பு நிற குதிரை சித்தரிக்கிறது. சபையில் விசுவாச துரோகத்தின் வல்லமையும், செல்வாக்கும் அதிகரித்தபோது, உண்மையான சபையின் வளர்ச்சியும் செல்வாக்கும் படிப்படியாக சரிய துவங்கியது. அப்போஸ்தலர்களின் நாளில் கூட, அழிவுகரமான தவறான கோட்பாடுகளின் தாக்கங்கள் சபையில் தங்களுடைய வேலைகளை செய்ய வழி தேடியது. (1யோவான் 4:1-3)

அப்போஸ்தலர்கள் எல்லாரும் சென்ற பிறகு, இந்த தாக்கங்களை எதிர்ப்பதற்கான திறன் கடுமையாக குறைந்தது. உண்மையான சபைக்குள்ளிருந்த சமாதானம் மோதல்களுக்கு வழிநடத்தியது. இப்படியாக, ஒரு முறை அதன் பொக்கிஷமாக ஒற்றுமை உடைந்துபோயிற்று.

இந்த காலக்கட்ட சபைக்கு கொடுக்கப்பட்ட பெரிய பட்டயமானது, வேதாகமம் முழுமை பெற்று வழி முறைப்படுத்தப்பட்டதை சித்தரிக்கிறது. ஆனால் வேதாகமத்தின் இந்த பெரிய பட்டயம், தேவ வார்த்தையை பிரசங்கிப்பதற்கு ஒன்றுசேர்க்கப்பட்ட செய்தியை காத்துக்கொள்வதற்கு பதிலாக சபையை பிரித்தது.

### மூன்றாம் முத்திரை

மூன்றாம் முத்திரை வெளிப்படுத்தல் 6:5ல் திறக்கப்படுகிறது. கருப்பு குதிரையின் மேல் சவாரி செய்யும் மூன்றாவது குதிரைவீரன் அளவுகளின் ஒரு தொகுப்பை வைத்திருப்பதாக யோவான் கண்டார். சபையின் இந்த மூன்றாவது நிலையின்போது, கான்ஸ்டன்டைன் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றப்பட்டதினால் ரோமானிய பேரரசர்களின் துன்புறுத்தல்கள் தனிந்தது. இதன் விளைவாக, சபையின் எண்ணிக்கையும் செல்வாக்கும் வளர ஆரம்பித்தது.

இது சபை பூமிக்குரிய உயர்த்துதலின் ஆரம்பத்திற்கு வித்திட்டது. இந்த உயர்வுக்கான சோதனையானது மிக அதிகமாக நிரூபிக்கப்பட்டது. அரசியலும் மதமும் ஒருமித்து அதிகாரத்தை கைப்பற்றியது. இது கருப்பு நிற குதிரைகளால் சித்தரிக்கப்படுகிறது. இப்போது செல்வாக்கை அதிகரிக்கவும், சபையின் பரப்பளவை விரிவாக்கவும் விருப்பத்தில், கொள்கைகளின் முக்கியத்துவம் இரண்டாம் தரமாக மாறியது.

எதிர்பாராதவிதமாக, கிறிஸ்தவர்களுக்கு பிரசங்கிக்கப்படும் போதனைகள், கலங்கின சத்தியத்தின் (ஊழல் நிறைந்த) புரிதலையும், எதிர்மறையான கருத்துக்களை கொண்ட போதகர்களினால் தற்போது தீர்மானிக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு எதிர்மறையான கருத்துக்களை

சகித்துகொள்ளக்கூடிய தன்மையும் இல்லாதவர்கள்.

"அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும் " ஒரு சத்தம் கேட்கப்பட்டது. பெயரளவிலான கிறிஸ்தவ அமைப்பு கொள்கைகளின் பெரும்பாலான விஷயங்களைக் கட்டளையிட அனுமதிக்கப்பட்டிருந்தால், மெய்யானச் சபையிலும் சில உண்மையான சத்தியங்களை தேவன் அனுமதிக்காத ஒரு வரலாற்று உண்மையை இது குறிப்பிடலாம். சபை அங்கத்தினருக்குள் பரிசுத்த ஆவியின் (எண்ணெய்) செயல்பாட்டின் தாக்கத்தை பெயரளவிலான கிறிஸ்தவ அமைப்புகள் அடக்கி வைக்க முடியாது.

இந்நிலையின் போது, உண்மையான சபை கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்களில் வரையறுக்கப்பட்டிருந்தாலும், அவற்றைத் தேட விரும்பியவர்களுக்கு அந்த தூய்மையான சத்தியம் கிடைத்தது. ஒரு தினாரி ஒரு நாள் கூலியாக இருந்தது, அதனால் அதன் பயன்பாட்டில் மிகுந்த பற்றாக்குறை இருந்திருக்கவேண்டும்.... அதுபோல ஒருவேளை, கிறிஸ்துவும் (வாற்கோதுமை), சபையை (கோதுமை) விட குறைவான மதிப்புள்ளவராக கருதப்படலாம்.

**நான்காம் முத்திரை**

நான்காவது முத்திரை உடைக்கப்பட்டபோது, கடைசி குதிரை வீரன் முன் கொண்டுவரப்பட்டான். சபையின் இந்த நான்காவது கட்டத்தின், பலவீனமான கோட்பாடுகளை சித்தரிக்கும் ஒரு பழுப்பு நிறமான குதிரை வெளிப்பட்டது. இந்த காலத்தின் கோட்பாடுகள், போப் அமைப்பின் ஒடுக்குமுறையில் வளர்க்கப்பட்டது. இந்த மாசுபடுத்தப்பட்ட கோட்பாடுகள் ஆவிக்குரிய வாழ்க்கையை பராமரிக்க போதுமானதாக இருக்கவில்லை. என்று எட்டாம் வசனம் கூறுகிறது. (வெளிப்படுத்தல் 6:8 ) இந்த காலகட்டத்தில் உள்ள உண்மையான சபையில் இருந்த துன்மார்க்கமான போப் அமைப்பை இது துல்லியமாக விவரிக்கிறது. இந்த அமைப்பின் மூலம் ஊக்குவிக்கப்பட்ட உபதேசங்களும், போதகங்களும் மற்றும் நடைமுறை பழக்கங்களும் ஆவிக்குரிய மரணத்திற்கு மட்டுமே வழிவகுக்கும்.

அந்த குதிரை வீரனுடைய அதிகாரமும் எட்டாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுவிசேஷ யுகத்தின் இந்த காலபகுதியில், உண்மையான சபையை துன்புறுத்துவதற்கு கிறிஸ்தவ மண்டலத்தின் குடிமக்களுடனான உறவை போப் அமைப்பு பயன்படுத்தியது. இந்த விசாரணைகள் முதல் முதலில் 1184 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த விசாரணையின் போது, உண்மையான சபை கொடூரமான துன்புறுத்தலின் போது, அடக்குமுறை செய்த போப் அமைப்பு, தன்னுடைய அசுத்தமான கோட்பாடுகளை கட்டாயமாக பின்பற்ற செய்தது. செய்யாவிட்டால் மரண தண்டனை விதித்தது. உண்மை சபை இந்த நான்காவது கட்டத்தில் மிகுந்த உபத்திரவத்தை அனுபவித்தது.

**ஐந்தாம் முத்திரை**

ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, ஒரு பலிபீடம் காட்சிக்கு வந்தது. அந்த பலிபீடத்தின் கீழ், சத்தியத்திற்கு விசுவாசமாக இருந்ததினால் உபத்திரவப்பட்ட பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களை யோவான் கண்டார். இந்த பரிசுத்தவான்கள் அழுதுக் கொண்டிருந்தார்கள்! "அவர்கள்- பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் ..." என்று அவர்கள் ஆண்டவரை நோக்கி கேட்டுக்கொண்டிருந்தார்கள். (வெளிப்படுத்தல் 6:10 ) இந்த காலத்தில் உண்மையான சபை முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தில் யூதர்களாலும், அதற்குபின் ரோமானிய குடிமக்களின் அதிகாரத்தின் கீழும் துன்புறுத்தப்பட்டது. இதை தொடர்ந்து மூன்றாம் மற்றும் நான்காம் காலகட்டங்களில் சமயக் கோட்பாடுகளுக்கு உட்படாத சபை கடுமையான உபத்திரவங்களுக்கு ஆளாக்கப்பட்டது. இந்த கசப்பான துன்புறுத்தல்கள் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ பரிசுத்தவான்களின் ஜீவனை பறித்தது. பல நூற்றாண்டுகளாக அடக்குமுறை மற்றும் உண்மையான சபையின் துன்புறுத்தல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை, இங்கு அடையாளமாக சித்தரிக்கப்படுகிறது. விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள், தாங்கள் கண்டடைந்த கையளவு சத்தியத்தை இருக்கமாக பற்றிக்கொண்டு, அதற்கு உண்மையுள்ளவர்களாக சாட்சி கொடுத்து, வாள் மற்றும் சுட்டெரிக்கப்படுவதற்கும் தங்களை ஒப்புகொடுத்தார்கள். நம்முடைய நீதியுள்ள பரலோகத் தகப்பன் இந்த நிலையை எவ்வளவு காலம் அனுமதிப்பார்?

வெளிப்படுத்தல் 6:11ல், பரிசுத்தவான்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளை அங்கி அளிக்கப்பட்டதோடு, அவர்கள் இன்னும் சிறிது நேரம் இளைப்பாற வேண்டும் என்ற செய்தியும் கொடுக்கப்பட்டது. இன்னும் வேலை செய்ய வேண்டியிருந்தது, இன்னும் சபையின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு, விசுவாசமுள்ளவர்களாக நிரூபிக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி நபர் திரையை கடந்துபின் தான், இறுதியான நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படும். அதுவரையில் சபை தேவனுடைய வாக்குத்தத்தங்களை உறுதியாக பற்றி கொண்டிருக்கவேண்டும்.

**ஆறாம் முத்திரை**

• இப்போது நாம் ஒரு வல்லமையுள்ள காட்சியினிடத்திற்கு வந்துள்ளோம். வெளிப்படுத்தல் 6:12, பல பூமியை சிதறடிக்கும் நிகழ்வுகளுடன் தொடங்குகிறது. முதலாவது ஒரு பெரிய பூமி அதிர்ச்சி, அதன்பின் சூரியன் இருளடைந்தது, சந்திரன் இரத்தத்தின் நிறமாக மாறியது. அதற்குபின் நட்சத்திரங்கள் பூமியின் மேல் விழுந்தது, அதை தொடர்ந்து வானம் சுருட்டப்பட்டது. ஒவ்வொரு மலைகளும், தீவுகளும் அப்புறமாக நகர்ந்தது. இந்த நிகழ்வுகள் பூமியின் இராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், ஆட்டுக்குட்டியானவரின் கோபத்துக்கு தப்பித்துக்கொள்ள, பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொள்ள வைக்கும். "யார் நிலைநிற்க கூடும் ? " என்ற கேள்வியோடு 6ம் அதிகாரம் நிறைவடைகிறது.

அந்த மிகப் பெரிய பூமி அதிர்ச்சி பிரெஞ்சு புரட்சி. இந்த பூகோள அரசியல் வல்லமையை சவாலிடுவதற்கு

ஜனங்கள் ஆற்றல் பெற்றபோது, ஒரு பெரும் சமூக எழுச்சி உண்டானது. அதே சமயத்தில், மதம் மற்றும் உள்ளநாட்டு அரசாங்கங்கள் கவிழ்க்கப்பட்டது! ஜனங்கள் தங்கள் தனிப்பட்ட சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் எழுந்து நின்றார்கள். தனிப்பட்ட சுதந்திரத்திற்கான இந்த விருப்பம் தடைச் செய்யப்படவேண்டியதில்லை. இந்த நாகரீக உலகில் தனிப்பட்ட சுதந்திரம் ஒரு முக்கியமான சமூகப்பிரச்சனையாக மாறிவிட்டது.

சூரியன் மற்றும் சந்திரனின் நிறங்களில் ஏற்படும் மாற்றங்கள், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழுவது மற்றும் ஒவ்வொரு மலைகளையும், தீவுகளையும் குலுக்கக்கூடிய மிக பெரிய காற்று, இவைகள் அனைத்தும், சபையை சுற்றியுள்ள சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை அடையாளப்படுத்துகிறது. சூரியன் மற்றும் சந்திரன் (புதிய மற்றும் பழைய ஏற்பாடு) தெய்வீக உந்துதலாக, உயர் விமர்சகர்களால் கருதப்படவில்லை. வேதாகமம், தேவனுடைய வார்த்தையாக இருக்கவில்லை என்ற இந்த விமர்சகர்கள் போராடினார்கள். சபைக்கு செல்பவர்கள், சபையின் அமைப்பின் மேலுள்ள நம்பிக்கையை இழக்கத் தொடங்கினார்கள்.

பிரெஞ்சுப் புரட்சியின் (மிக பெரிய பூமி அதிர்ச்சி) விளைவாக முழு ஐரோப்பாவும் அசைக்கப்பட்டு, உலகின் அரசியலையே மாற்றியது. இந்த பூமி அதிர்ச்சியின் போது, ஜனங்கள் பாதுகாப்பான புகலிடம் தேடினார்கள். போப் அமைப்பு நம்பத்தகாததாக நிரூபிக்கப்பட்டு, வெளிப்படையாக வீழ்ச்சி அடைந்தபோது, ஜனங்கள் தங்களுக்கு பாதுகாப்பை வழங்க, அவர்களுடைய அரசாங்கங்களைத் தேடத் தொடங்கினார்கள். இருப்பினும், அரசாங்கங்களும் தங்கள் நம்பிக்கைக்கு தகுதியற்றதாக நிரூபிக்கப்பட்டன.

### ஏழாம் முத்திரை

ஏழாம் முத்திரை உடைக்கப்படுவதை நாம் பார்ப்பதற்கு முன் நாம் வெளிப்படுத்தல் 7ம் அதிகாரத்தை பார்க்கவேண்டும். நான்கு தூதர்கள் நான்கு காற்றுகளை பிடித்துக்கொண்டிருக்கும் காட்சியோடு இந்த அதிகாரம் தொடங்குகிறது. தேவனுடைய ஊழியக்காரர்களின் நெற்றிகளில் முத்திரை போட்டு தீரும் அளவு, இந்த நான்கு தூதர்களும் பூமியையாவது (சமுதாயம்), சமுத்திரத்தையாவது (ஜன திரள்), அல்லது மரங்களையாவது (தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள்), சேதப்படுத்தாதபடிக்கு அந்த நான்கு தூதர்களுக்கும் சொல்லப்பட்டது. இது உண்மையான சபையின் மத்தியில் நடக்கும் அறிவார்ந்த முத்திரை போடுவதை சித்தரிக்கிறது.

மாம்ச இஸ்ரயேலை பன்னிரண்டு கோத்திரங்களாக காண்பிக்கப்பட்டது போல, உண்மையான சபை வெளிப்படுத்தல் 7:4-8 ல் காட்டப்படுகிறது. இதை தொடர்ந்து, வெளிப்படுத்தல் 7:9-17 ல் திரள் கூட்டத்தை ஒரு வகுப்பாக காட்டப்படுகிறது. பின்பு வெளிப்படுத்தல் 8:1ல், ஏழாம் முத்திரை உடைந்தது, "அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று." என்று யோவான் முடிக்கிறார். இந்த கடைசி முத்திரை உடைக்கப்பட்ட பின், சுருள் திறக்கப்பட்டது, உள்ளே எழுதியிருந்தவைகள் காணப்பட்டது - 7 எக்காளங்கள். (எசேக்கியேல் 2:9-3:3 , சகரியா 5:1-4 )

### சுருக்கம்

இந்த ஏழு முத்திரைகள், வெளிப்படுத்தலில் உள்ள "ஏழுகளில்" ஒன்றாகும். இது சுவிசேஷ யுகத்தில் உள்ள பல்வேறு முன்னோக்குகளை சித்தரிக்கிறது. இந்த ஏழு முத்திரைகளின் சித்திரமானது, சுவிசேஷ யுக கோட்பாடுகளில் உள்ள முன்னேற்றத்தை காட்டுகிறது:

(அ) ஆரம்பகால சபைக்கு தூய்மையான சத்தியம் ஊற்றப்பட்டது.

(ஆ) இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காவது கட்டங்களில், கோட்பாடு மற்றும் நடைமுறை பழக்கங்களின் ஒரு பயங்கரமான சீரழிவு தொடர்ந்தது.

(இ) சீர்திருத்தத்தின் போது படிப்படியாக மீள ஆரம்பித்த உண்மையான சத்தியங்களை, ஐந்தாம் மற்றும் ஆறாம் கட்ட சபை பின் தொடர்ந்தது. வேதாகமம் பல மொழிகளில் பரவலாக கிடைத்ததோடு கூட, தனிப்பட்ட வேத படிப்பின் பழக்கத்தை நடைமுறைக்குத் திரும்புவதற்கு இது உதவியது.

(ஈ) இறுதியாக, ஒரு முறை சுவிசேஷ யுக அறுவடையின் போது ஏழாம் முத்திரை உடைக்கப்பட்டபின், கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தின் சத்தியமும், "வெளியே வாருங்கள்" என்ற அதற்கான அழைப்பும் மற்றும் சுவிசேஷ யுகத்தின் உண்மை சபையைப் பற்றிய இரகசியமும் வெளிப்படுத்தப்பட்டது.

சுவிசேஷ யுகத்தின் முடிவில் நமக்குண்டான செய்தி என்னவெனில், நம்முடைய தனிப்பட்ட வரங்களை சகோதரர்களின் நலனுக்காக பயன்படுத்தவேண்டும். மேலும், அறுவடை செய்தியை அறிவிப்பதன் வழியாக இந்த உலகத்திற்கு விசுவாசமுள்ள ஒரு சாட்சியாக இருக்க வேண்டும். கிறிஸ்தவத்தை இழிவுபடுத்தவும், வேதாகமத்தின் மேலுள்ள நம்பிக்கையை இழக்க செய்யும் முயற்சிகள் ஏறெடுக்கப்பட்டாலும், ஏழு முத்திரைகள் உடைக்கப்பட்டபோது, சபை அனுபவிக்கக்கூடிய எல்லா போராட்டங்களை குறித்து தேவன் அறிந்திருந்தார் என்று நாம் காண்கிறோம். சபையின் ஒவ்வொரு கட்டத்திலும், பரிசுத்தமான கோட்பாட்டை கண்டுபிடிப்பதற்கும் அதை கடைப்பிடிப்பதற்கும் தேவையான உதவியையும், வழிநடத்துதலையும் தேவன் கொடுத்தார் என்பதை நாம் இப்போது உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

சுவிசேஷ யுகத்தின் முடிவில் நமக்கும் தேவன் தொடர்ந்து எல்லா உதவிகளையும் அளித்துக் கொண்டிருக்கிறார். இப்போது ஏழாம் முத்திரை உடைந்துவிட்டது, சபை இதுவரையில் அனுபவித்திராத திகைக்கக்கூடிய தெளிவான சத்தியங்களை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். வெகு சீக்கிரத்தில் முழுமையாக ஸ்தாபிக்கப்படக்கூடிய, சமாதானமான தேவனுடைய இராஜ்யத்தின் தோற்றத்தை மிக அருகாமையில் நாம் கண்டுக்கொண்டிருப்பதினால், மீதமுள்ள கோதுமை மணிகளை ஒன்று சேர்ப்பதற்கு, நாம் புறப்பட்டு போய், சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கான காலம் வந்துவிட்டது!

பதிப்பாசிரியரின் குறிப்பு - இது மிகுந்த பொதுவான கருத்தாகும். ஆனால், பிரதான ஆசாரியனின் நெற்றியில் இருக்கும் பட்டத்தைப் போல, இணையான ஆவியினால் ஜெநிப்பித்தல் கருத்தினை வேதாகமம் அறிவுறுத்தவில்லை. (கர்த்தருக்குப் பரிசுத்தம், யாத்திராகமம் 28:36, எபேசியர் 4:30 மற்றும் ஓரளவிற்கு எசேக்கியேல் 9:4)

வெளிப்படுத்தல் 8-11

# ஏழு எக்காளங்கள்



"அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள்மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து:" (வெளிப்படுத்தல் *11:16*)

*Benjamin and Gabriella Stein*

வெளிப்படுத்தல் 8-11 ல் ஒலிக்கும் ஏழு எக்காளங்கள், ஏழு தூதர்களிடமிருந்து வரும் செய்திகளைப் பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு எக்காளமும் எவ்வாறு ஒலித்தது என்றும் அந்த செய்தியின் உள்ளடக்கம் என்னவென்றும், இந்த பகுதி வெளிப்படுத்தவில்லை. அதற்கு பதிலாக, ஒவ்வொரு ஒலியின் விளைவுகளை விவரிக்கிறது. இவ்வாறு, அந்த அடையாளங்கள் ஒவ்வொரு செய்தியின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தாமல், ஒவ்வொரு செய்தியினால் உலகில் ஏற்படும் விளைவுகளை வெளிப்படுத்துகிறது.

ஏழு எக்காளங்களின் சித்திரம், ஏழு முத்திரைகளிலிருந்து முற்றிலும் வேறுப்பட்டது. ஏழு முத்திரைகள் அறிவிக்கப்பட்ட செய்தியினால், உண்மை சபையில் ஏற்பட்ட விளைவை காட்டுகிறது. அதே நேரத்தில் ஏழு எக்காளங்கள், அறிவிக்கப்பட்ட செய்தியினால் மீதியுள்ள உலகத்தின் மேல் ஏற்பட்ட விளைவை வெளிப்படுத்துகிறது. ஏழு எக்காளங்கள் தொடர்பான பகுதிகள், உலகின் கண்ணோக்கிலிருந்து எழுதப்பட்டது என்பது முக்கியமான குறிப்பாகும். இந்த செய்திகள் தன்னை தான் எவ்வாறு பாதிக்கிறது என்று இந்த உலகம் காண்கிறது. எனவே, ஏதோ மோசமான காரியங்கள் நடக்கும் போது, அது உலகின் கண்ணோட்டத்திலிருந்தும், பெயரளவிலான மத அமைப்புகளிலிருந்தும் பார்க்கும்போது மோசமானதாக இருக்கலாம்.

வெளிப்படுத்தல் 8-11 ல் உள்ள ஏழு எக்காளங்கள், இஸ்ரயேல் புத்திரர் பூர்வ நகரமாகிய எரிகோவைச் சுற்றிக்கொண்டு ஏழு எக்காளங்களை ஊதின அந்த ஏழு நாட்களுக்கு ஒத்திருக்கிறது. ஏழு முத்திரைகள் போல, கர்த்தருடைய ஜனங்கள் (இஸ்ரயேல்) எரிகோவின் அழிவைப் பற்றி, அதிலிருக்கும் ஜனங்களை விடவும் மிக வித்தியாசமான பார்வையை கொண்டிருந்தனர். ஆகையால், உண்மையான சபை, எக்காளங்களினால் ஏற்பட்ட அழிவுகரமான விளைவுகளை காண்பார்கள். அவர்கள் நீதியான தேவனுடைய நியாயத்தை சித்தரிப்பதினால் அவர்கள் மகிழ்வார்கள்.

## முதலாம் எக்காளம் (வெளிப்படுத்தல் 8:7)

முதலாம் எக்காளம் கல்மழையையும், இரத்தத்தோடே கலந்த அக்கினியையும், பூமியின் மேல் வீசப்பட்டதை கண்டது. மரங்களில் மூன்றாவது பங்கு அக்கனியால் சுட்டெரிக்கப்பட்டது. மேலும் அனைத்து பச்சை புல்லும் எரிக்கப்பட்டது. இது இஸ்ரயேல் தேசத்தின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை விவரிக்கிறது. இது சபையின் முதல் காலக்கட்டத்தில், யூதர்கள் தேவனுடைய இரக்கத்தை இழந்து, சிதறடிக்கப்பட்டார்கள். "உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கி விடப்படும்" (மத்தேயு 23:38) பச்சை நிறம் ஜீவனை அடையாளப்படுத்துவதினால், பசுமையான புல், நியாயப்பிரமாணத்தின் கீழ் நீதிமான்களாக்கப்பட்ட யூதர்களை துல்லியமாக அடையாளப்படுத்துகிறது. ஆயினும், சுவிசேஷ யுகத்திற்கு மாறும் போது, நியாயப்பிரமாணத்தின் கீழ் நீதிமானாக்கப்படுதல் பயனற்றதாக போய்விட்டது. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்." (அப்போஸ்தலர் 4:12) இவ்வாறு, யூதர்கள் தேவனுக்கு முன் நிற்கக்கூடிய தங்கள் நிலைப்பாட்டை இழந்தார்கள், புல்லும் உலர்ந்தது.

## இரண்டாம் எக்காளம் வெளிப்படுத்தல் 8:8-9

இரண்டாம் தூதன் எக்காளம் ஊதுகையில், அக்கினியால் எரியும் ஒரு மலை, கடலில் தள்ளப்பட்டது. மலைகள் அரசாங்கங்களை (இராஜ்யங்கள்) அடையாளப்படுத்துகிறது. சபையின் இந்த காலப்பகுதியில் தான் போப்பமைப்பு என்று அழைக்கப்பட்டதின் எழுச்சியினால், புறச்சமய சார்பு கொண்ட ரோமானது, தனது அழிவை காணத்துவங்கியது. கப்பல்களில் மூன்றில் ஒரு பகுதி அழிந்தது, ரோமாபுரி விழுந்தபோது, பல வணிகர்கள் வியாபாரத்தை இழந்ததை இது சித்தரிக்கலாம்.

## மூன்றாம் எக்காளம் வெளிப்படுத்தல் 8:10-11

இந்த எக்காளம் ஊதப்பட்டபோது, வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் 1/3 ஆறுகள் மற்றும் தண்ணீர்கள் மீது விழுந்தது. உண்மையான சபையின் மூன்றாவது தூதர் ஏரியஸ். இயேசுவின் இயல்பைக் குறித்த தவறான கோட்பாட்டிற்கு எதிராக உண்மையைப் பேசினதற்காக ஏரியஸ் பல முறை சபை நீக்கம் செய்யப்பட்டார். வானத்திலிருந்து விழுந்த அந்த பெரிய நட்சத்திரம் ஏரியஸாக இருக்கலாம். இங்கு வானம் மத அதிகாரங்களை அடையாளப்படுத்துகிறது. (உண்மையான வானம் அல்ல) அவர் பெயரளவிலான மத அமைப்பின் ஆதரவிலிருந்து விழுந்ததினால், அவரை வெளியேற்றிய காரியம் அவமானத்திற்குரியதாக இல்லை. அந்த மிக பெரிய நட்சத்திரமாகிய ஏரியஸ், "எட்டி" என்று இங்கு அழைக்கப்படுகிறார். எட்டி என்பதற்கு கசப்பு என்று அர்த்தம். இது ஒரு உலக கண்ணோட்டத்தில் அதாவது பெயரளவிலான கிறிஸ்தவ கண்ணோட்டத்திலிருந்து எழுதப்பட்டிருப்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஏரியஸ் பிரசங்கித்திட்ட உண்மையான போதனைகள் பெயரளவிலான மத அமைப்பின் தவறான கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரண்பாடாக இருந்ததினால், அவரையும் மற்றும் அவருடைய போதனைகளும் பெயரளவிலான மத அமைப்புக்கு மிகவும் கசப்பாக இருந்தது.

எட்டி விழுந்த கசப்பான தண்ணீரை குடித்தவர்கள் இறந்துவிட்டார்கள் என்று வேத பகுதியில் வாசிக்கிறோம். உண்மையில், ஏரியஸை பின்பற்றினவர்கள் "கிறிஸ்தவர்கள் அல்ல" என்று வளர்ந்து வந்த சக்தி வாய்ந்த சபை- அரசமைப்பு முறை கருதியது. எக்காளத்தின் செய்திகள் பெயரளவிலான கிறிஸ்த வத்தின் கண்ணோட்டத்திலிருந்து எழுதப்பட்டிருப்பதால், மரணம் அவர்களுடைய பெயரளவிலான ஆதரவாளர்களின் இழப்பை குறிக்கும். நம்முடைய நாள் வரையிலும் கூட, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள், திரித்துவத்தின் பொய்யான கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் அவர்கள் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

### நான்காம் எக்காளம் வெளிப்படுத்தல் 8:12

1/3 சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் இருளடைந்ததை நான்காம் எக்காளம் கண்டது. இது போப்பின் ஆட்சி காலத்தில், சத்தியத்தின் ஒளி, மேலும் இருளடைந்ததை அடையாளப்படுத்துகிறது. சுவிசேஷம் (சூரியன்), தீர்க்கதரிசிகள் (சந்திரன்) மற்றும் அப்போஸ்தலர்களின் (நட்சத்திரங்கள்) செய்திகள் நேர்மையை விட்டு விலகிபோனது.

### ஐயோ, ஐயோ, ஐயோ வெளிப்படுத்தல் 8:13

இந்த முதல் நான்கு எக்காளங்கள் வெளிப்படுத்தல் 6 ல் உள்ள முதல் நான்கு முத்திரைகளுக்கு ஒத்திருக்கிறது. குதிரைகள் (கோட்பாடு)ஒரு நோயுற்ற, மெலிந்த நிலையில் அதாவது சத்தியத்தின் எல்லா வழிகளும் இருண்டுவிட்டது. ஆனால் வெளிப்படுத்தல் 8:13 ம் வசனம், எக்காளங்களின் விளைவாக ஒரு மாற்றத்தை குறிப்பிடுகிறது. ஒவ்வொரு தூதர்களால் ஊற்றப்பட்ட சத்தியத்தை அவர்கள் நிராகரித்ததினால், இந்த காலக்கட்டம் வரையில், கோட்பாட்டின் சீரழிவு ஏற்பட்டது. நான்காம் முத்திரையைப் பின்பற்றியதைப் போலவே, நான்காம் எக்காளம் ஊதப்பட்டப் பின், அதன் செய்தி சில சத்தியத்தை மீண்டும் சபைக்கு கொண்டுவந்தது. ஆயினும், உண்மையான கோட்பாடு, பெயரளவிலான சபைகளினால் வரவேற்கப்படவில்லை. ஆகையால், கடந்த மூன்று எக்காளங்களும், போப் அமைப்பின் மீது ஏற்படுத்திய விளைவின் காரணமாக, அவைகள் மூன்று பெரிய "துயரங்கள்" எனக் கருதப்பட்டது. ( பதிப்பாசிரியரின் குறிப்பு: எசேக்கியேல் 2:10 ல், அதில் உள்ளும் புறமும் எழுதப்பட்டிருந்தது, அதிலே புலம்பல்களும், தவிப்பும், ஐயோ என்பதும் எழுதியிருந்தது. ஏழு எக்காளங்கள் இவைகளுக்கு ஒத்துபோகிறது: (1) புலம்பல், (2) துக்கிப்பு (3) துக்கிப்பு,(4) புலம்பல்,(5) ஐயோ, (6) ஐயோ, (7) ஐயோ. )

### ஐந்தாம் எக்காளம் வெளிப்படுத்தல் 9:1-12

மூன்றாம் எக்காளத்தைப் போல, ஐந்தாம் எக்காளம் ஊதப்படும் போது, நாம் மற்றொரு நட்சத்திரம் வானத்திலிருந்து விழுவதைக் காண்கிறோம். அதற்கேற்றபடி, வரலாற்றில் போப் அமைப்பால் நிராகரிக்கப்பட்ட ஒரு பெரிய ஆவிக்குரிய தலைவரை நாம் பார்க்கவேண்டும். இந்த தலைவர் பாதாளத்தை திறந்தபோது, அதிலிருந்து குதிரைகளைப் போன்ற வெட்டுக்கிளிகள், தேள்களைப் போல் கொட்டுகிறவைகளாக புறப்பட்டது. இந்த கோட்பாடுகள் (குதிரைகள்) போப் அமைப்புக்கு ஒரு வாதையைப் போல் இருந்ததை, இந்த வியத்தகு, அழகிய மொழி குறிப்பிடுகிறது. (இந்த வாதை விசேஷமாக, தேள்கள் கொட்டுவதைப் போல உள்ள இந்த வெட்டுக்கிளிகளை அடையாளப்படுத்துகிறது. ) வேதாகமத்தை லத்தீனிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்த விக்ளிஃபின் காலப் பகுதிக்கு இது சரியாக பொருந்தும் என்ற நியாயமான விளக்கம் கொடுக்கப்படுகிறது.

முந்தி போப் அமைப்பின் கட்டுப்பாட்டில், வேதாகமம் லத்தீன் மொழியில் இருந்தது. அதன் பின் வேதாகமத்தை விக்ளிஃப் மொழிபெயர்த்ததினால், அளவில்லாத ஆற்றல் வளமிக்க சத்தியங்கள் வெளிவந்தது. இது ஐரோப்பிய ஜனங்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தேவனுடைய வார்த்தையை ஜாக்கிரதையாய் படிப்போர், அவ்வாறு படிக்காதோர், இருவர் மீதுள்ள ஆழ்ந்த மற்றும் அளவில்லாத தாக்கத்தைக் குறிப்பதற்கு, பாதாளக்குழியில் இருந்து விடுவிக்கப்படுதலை அடையாளமாக சொல்லப்படுவது எவ்வளவு பொருத்தமாய் உள்ளது! இதற்கு மாற்றாக, இந்த ஐந்தாம் காலகட்டம் சீர்திருத்தத்தின் காலம் என்றும் ,இது 1517 லில் மார்ட்டின் லூதரின் 95 ஆய்வுரைகள் மற்றும் அதன்பின் வேதாகமத்தை ஜெர்மனில் மொழிபெயர்த்ததோடு துவங்கியது என்றும் சிலர் கருதுகிறார்கள்.

இந்த சமயத்தில், போப் அமைப்பு ஜனங்கள் மீது வலுவான வல்லமைமிக்க கட்டுப்பாட்டை கொண்டிருந்தது. மேலும் விக்ளிஃபினால் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தின் தாக்கம் ஐரோப்பா எங்கும் பரவ வில்லை. அந்த வெட்டுக்கிளிகள், ரோமானிய கத்தோலிக்க அமைப்பை, ஒரு வரையறுக்கப்பட்ட காலம் மட்டுமே அமைப்பை உபத்திரவப்படுத்தியது என்று இந்த வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆயினும், 6 ம் வசனத்தின் படி,"அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத்தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்." மரணம் ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இங்கு பல நபர்கள் கத்தோலிக்க மதத்திலிருந்து விலகி இருக்க விரும்புவதை பார்க்கிறோம், ஆனால் அவர்களால் முடியவில்லை. பலர் புரட்டஸ்டன்ட் ஆக விரும்பினார்கள், ஆனால் நேரம் இன்னும் வரைவில்லை. இவ்வாறு, இந்தக் காலப்பகுதி போப் அமைப்புக்கு பல பிரச்சனைகளை ஏற்படுத்தியது. ஆனால் அவர்களின் பிரச்சனைகள் இன்னும் மோசமடைந்தது. சீர்திருத்தத்தின் துன்பம் அடுத்த எக்காளத்தோடு வந்தது.

குறிப்பு:- எக்காளத்தைப் பற்றிய பத்திகள், உண்மையான சபையின் கருத்துக்களை அல்ல, மீதியுள்ள உலகின் கண்ணோக்கிலிருந்து எழுதப்பட்டிருப்பதை நம்முடைய பார்வையை சரிபார்க்க இந்த 4ம் வசனம் உதவுகிறது. எதிர்மாறாக தோன்றும் வெட்டுகிளிகள், பச்சையாக இருக்கும் எதற்கும் தீங்கு செய்ய அனுமதிக்கப்படாததினால், இவைகள் தேவனுடையவைகள் என்று நிரூபிக்கப்படுகிறது. (கிறிஸ்துவின் மூலம் நீதிமானாக்கப்பட்ட யாரொருவரையும்) ஆனால் "தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைப் பெறாதவர்களை" மட்டுமே தாக்குவதற்கு அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. தேவன் அவருடைய பரிசுத்தவான்களோடு இருக்கிறார்

என்பதற்கு இது ஒரு நல்ல நினைவூட்டுதலாகும். வெளிப்படுத்தலில் பல வாதைகள், வேதனைகள் மற்றும் துயரங்கள் நிறைந்திருந்தாலும், உண்மையான சபையோடு தேவன் இருக்கிறார் என்றும்அவருடைய விலையேறப்பெற்ற மந்தைக்கு தேவையான ஊட்டச்சத்தை தொடர்ந்து அளிப்பார் என்றும் நாம் உறுதிபடுத்திக்கொள்ளலாம். (சங்கீதம்23) (2புட் நோட்)

## ஆறாம் எக்காளம் வெளிப்படுத்தல் 9:13-21

நான்கு தேவதூதர்களை விடுவிப்பதன் துவக்கத்தோடு, எக்காளம் தொனிக்க, சபையின் ஆறாம் காலகட்டத்தில் சீர்திருத்தம் வந்தது. இந்த நான்கு தூதர்களும் "ஒரு மணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும் ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்தார்கள்" என்று வெளிப்படுத்தல் 9:15 ம் வசனம் நமக்கு சொல்லுகிறது. இந்த கால தீர்க்கதரிசனம் நம்மை கி.பி 1799 க்கு அழைத்து வருவதை போல் தோன்றுகிறது. (இந்த வார்த்தைகள், தானியேல் தீர்க்கரிசியின் 1,260 நாட்களுக்கு தொடர்புள்ளதாக காணப்படுகிறது.) கி.பி 1799 போப்பமைப்பின் அரசியல் அதிகாரத்தை இழந்த காலத்தை குறிக்கிறது. அந்த நேரத்திலிருந்து போப் மரித்துபோனார் மற்றும் நெப்போலியன் புதிய போப்பின் தேர்வை தடுத்தார். ஆகையால், போப் அமைப்பின் வல்லமையை தகர்க்கக்கூடிய உச்சகட்ட சம்பவத்திற்கான வேர்கள் ஆறாம் எக்காளத்தின் சத்தம் மற்றும் நான்கு தூதர்களின் விடுதலையைச் சுற்றி இருந்தது. (சிலர் வேறுவிதமாக, இந்த காலகட்டத்தை முன்பதாகவே ஆரம்பிக்கிறார்கள், என்றாலும் கி.பி 1648க்கு முன்பு அல்ல)

சீர்திருத்த காலத்தில் இந்த தேவதூதர்களை பல குதிரை வீரர்கள் சேர்ந்துகொண்டார்கள். நாம் ஏற்கெனவே பார்த்தபடி, குதிரைகள் கோட்பாடுகளை அடையாளப்படுத்துகிறது. போப் அமைப்பின் தாக்கத்தை மீறி, பல சத்தியத்தின் கோட்பாடுகள் மீண்டும் வெளிவந்ததை சீர்திருத்தம் கண்டது. கத்தோலிக்க மதத்தினால் நிறுவப்பட்ட சடங்குகள் மற்றும் மறுபடியும் செய்யப்படக்கூடிய கிரியைகளினால் அல்ல விசுவாசத்தினால் மட்டுமே ஒருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று மார்ட்டின் லூதர் அறிவித்த சத்தியமே அதில் மிக முக்கியமான சத்தியமாக இருந்தது. குதிரைகள் அல்லது கோட்பாடுகள் எவ்வாறு ஜனங்களை பாதித்து, அவர்களை கொன்றது என்பதை அடுத்த பல வசனங்கள் விவரிக்கிறது. அக்கினியால் கொல்லப்படாதவர்கள் கந்தகத்தினாலும், புகைக்கப்பட்டதினாலும் மூச்சுத்திணறலின் காரணமாக கொல்லப்பட்டார்கள்.

மீண்டும், இங்கு கொல்லப்படுவது, கத்தோலிக்க மதத்திலிருந்து உண்மையான கிறிஸ்தவத்திற்கு மாறுவதைக் குறிக்கும். பலர் மரணத்தை விரும்பினார்கள் ஆனால் மரிக்கவில்லை என்ற இந்த அனுபவம், முந்தைய எக்காளத்துடனான குறிப்பிடத்தகுந்த வேறுபாட்டை காட்டுகிறது. சீர்திருத்தத்தின் போது, பலர் மாற்றப்பட்டனர், அதேநேரத்தில் சிலர் பெயரளவிலான அமைப்பை விட்டு சென்றனர். கொல்லப்படாதவர்கள் அதாவது கொள்கைகளின் சீர்திருத்தத்தினால் மாற்றப்பட்டவர்கள் தங்களுடைய அநேக பாவங்களுக்கு மனம் வருந்தாதவர்கள் என்பதை வெளிப்படுத்தல் 9:20-21 வசனங்கள் வெளிப்படுத்துகிறது. இதேபோல், போப்பமைப்பை விட்டு வெளியேறாதவர்கள் (விசேஷமாக தலைவர்கள்) சீர்திருத்தத்தின் போது நடந்த நிகழ்வுகளினால் அவர்கள் குத்தப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக, ஜனங்கள் மீது தங்கள் அதிகாரத்தையும் ஆற்றலையும் காத்துக்கொள்வதற்கு கடினமாக போராடினார்கள்.

எனினும், 6 ம் எக்காளம் மத சீர்திருத்தத்தை பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. ஜனங்கள் தங்களுடைய சொந்த நம்பிக்கைளின் மீது கட்டுப்பாட்டைக் வைப்பதற்கு லூதரின் செய்தி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது. மேலும், போப்பமைப்பின் அதிகாரத்தை கேள்வி கேட்பதற்கு, சீர்திருத்தம் ஒரு முன்னோடியை அமைத்தது. இந்த முன்னோக்கமான காரியம் ஜனங்களிடம் பரவி, கி.பி 1780ல் பிரெஞ்சுப் புரட்சியைப் போல, இறுதியில் பூகோள அரசியல் சக்திகளுக்கு சவாலாக இருந்தது. கி.பி 1799ல், போப் சிறையில் மரித்தபோது, போப் அமைப்பின் அரசியல் கட்டுபாடு இறுதியாக நீக்கப்பட்டது. ஆகையால் ஆறாவது எக்காளம் மத உலகத்தை மட்டுமல்ல, பொதுவான பூகோள அரசியல் உலகத்தையும், சமுதாயத்தையும் பாதித்ததையும் காண்கிறோம். ஆறாவது எக்காளம் மிக விசாலமான எக்காளமாக இருந்தது. இது போப் அமைப்புக்கு ஒரு பெரிய "ஐயோ"(உபத்திரவத்தை) விளைவித்தது.

எனினும், இது ஆறாவது எக்காளத்தின் முடிவை குறிக்கவில்லை. அதற்குபதிலாக, 1800களின் தொடக்கத்தில் விவிலிய அறிவொளியின் ஒரு வெடிப்பை ஏற்படுத்தியது.

## வேதாகம அறிவொளி மற்றும் ஏழு இடி முழக்கங்கள்

தானியேல் 12:4ல், "தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு;" என்று தானியேலுக்கு சொல்லப்பட்டது. "அதற்கு அவன்: தானியேலே, போகலாம்; இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்" என்று தானியேல் 12:9ம் வசனமும் கூறுகிறது. தானியேல் தீர்க்கதரிசனங்களைக் குறித்த வாக்களிக்கப்பட்ட அறிவுரை முடிவு காலத்தில் மட்டுமே வரும்.

வெளிப்படுத்தல் 10:2 ல், ஒரு சிறிய புத்தகம் குறிப்பிடப்பட்டுள்ளது, ஒருவேளை அது தானியேலின் புத்தகத்தை குறிப்பிடலாம். தொடர்ந்து அதே வசனத்தில், ஒரு தேவதூதர் கடல் (வழக்கமாக இரு கொந்தளிக்கும் மனுக்குலத்தை குறிக்கும்) மீது தனது வலது (விருப்பமான) காலையும், பூமியின் (பூமியின் மேல் ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரத்தை அடையாளப் படுத்துகிறது) மேல் அவருடைய இடது காலை வைத்தார். அதற்குபின், ஆசீர்வாதமானது, ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரத்திலிருந்து (பூமி) ஜனங்களிடம் (கடல்)சென்ற டைந்ததை இந்த செயல் காட்டுகிறது. பல நாடுகள் புரட்சிக்கு உட்பட்டு அதிகாரம், ஜனங்களுக்கு சென்றடைந்த (முழுமையான முடியாட்சியிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சிக்கு மாற்றப்பட்டது) பிரெஞ்சு புரட்சிக்கு பிற்பாடான சரியான காலக்கட்டத்தில் தான் நாம்

உள்ளோம் என்பதை அது உறுதி செய்கிறதினால் இது மிக முக்கியமாக கருதப்படுகிறது.

இந்த அதிகாரத்தின் மாற்றமானது ஜனங்கள் தங்கள் மொழிகளில் வேதாகம தீர்க்கதரிசனங்களை படிப்பதற்கான சுதந்தரத்தை அனுமதித்தது. இது இயல்பாகவே வேதாகம தீர்க்கதரிசனத்தையும் சத்தியத்தையும் ஆழமாக புரிந்துகொள்வதற்கு வழிநடத்தியது.

அடுத்து, வெளிப்படுத்தல் 10:3 ம் வசனம் ஏழு இடி முழக்கங்களைப் பற்றி பேசுகிறது. முன்பு வரை தெரியாத வேதாகம தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்தும் படியாக, இந்த நேரத்தில் ஒரு பெரிய செய்தி வெளிவருதை வெளிப்படையாக காணலாம். அறிஞர்கள் இந்த செய்தியை அடையாளம் காண்பதற்கு மிக கடினமாக இருந்தது. ஒருவேளை இதற்கான காரணம் வெளிப்படுத்தல் 10:4ல் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். "அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுதவேண்டுமென்றிருந்தேன். அப்பொழுது: ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்!".

இடிமுழக்கம் உண்மையில் சத்தமிடும், ஆனால் அவைகள் எழுதப்படாது. இவ்வாறு, வேதாகம தீர்க்கதரிசனங்களைப் பற்றிய சத்தியங்களைக் கொண்டிருக்கும் இந்த பெரிய செய்தி இந்த நேரத்தில் வெளி வந்தது. ஆனால் அது பிரபலமடையவோ அல்லது ஜனங்களை ஆட்கொள்ளவோ இல்லை. (சிலர் சங்கீதம் 29:3-8 ல் உள்ள ஏழு சத்தங்களோடு இந்த ஏழு இடி முழக்கங்களையும் இணைக்கிறார்கள்.)

1820 களில், ஆல்பிரி மாநாட்டில் நாற்பது குருமார்களும், பல மத பின்னணிகளைச் சார்ந்த பொது ஜனங்களும் கூடினார்கள். மேலும் 1829 இல், வேதாகம தீர்க்கதரிசனங்களை குறித்து ஏழு முடிவுகள் வெளியிடப்பட்டது. இவைகளின் சம்பவித்த நேரங்களும், அதன் விளக்கங்களும் சரியாக பொருந்துவதினால், இந்த ஏழு முடிவுகளையும், ஏழு இடிமுழக்கங்களுக்கு ஒப்பிடலாம். இன்று நாம் வேதாகம சத்தியம் என கருதப்படுவதோடு இது முழுமையாய் ஒத்திருக்காமல், பெருமளவில் அவைகள் ஒத்திருந்தன! ஆல்பரி மாநாட்டின் முடிவுகள் பின்வருமாறு:

(1) தற்போதைய கிறிஸ்தவ யுகம், படிப்படியாக சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டே ஆயிர வருடத்திற்குள் கடந்து செல்லாது, ஆனால் யூத யுகம் முடிவடைந்தது போல சபை மற்றும் அரசியல் அமைப்புகளின் நியாயத்தீர்ப்பினால் அழிவில் முடிவடையும்.

(2) இந்த நியாயத்தீர்ப்பின் நேரத்தில் யூதர்கள் தங்களுடைய சொந்த தேசத்தில் குடியேறுவார்கள்.

(3) நியாயத்தீர்ப்புகள் முக்கியமாக கிறிஸ்தவ மண்டலத்தின் மீது விழும். மேலும் இது அதிகமாக கிருபை பெற்ற, தேவனுடைய சபையில் துவங்கும். ஆகவே இது மிக பொறுப்புள்ளதாகவும் இருக்கும்.

(4) இந்த நியாயத்தீர்ப்புகளுக்கு பின் ஆயிர வருட ஆட்சி நடைபெறும், அந்த காலத்தில் மனுக்குலம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படுவார்கள், மிருகங்களும் ஆசீர்வதிக்கப்படும்.

(5) இயேசுவின் இரண்டாம் வருகை, ஆயிர வருட யுகத்திற்கு முன் அல்லது ஆரம்பத்தில் துவங்கும்.

(6) 1,260 வருடங்கள், ஜஸ்டினியன் ஆட்சியின் போது துவங்கி, பிரஞ்சு புரட்சியின் போது முடிவடைந்தது. இது வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட கலசங்கள் ஊற்றப்பட்டபோது நடைபெற்றது.

(7) நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவர் வெகு சீக்கிரத்தில் காணப்படுவார்.

1874 ஆம் ஆண்டில் நமது ஆண்டவர் திரும்புவதற்கு முன்பே இந்த மனுஷர் இவ்வளவு பெரிய சத்தியத்தைப் புரிந்துகொண்டு, அதை ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஏழாம் எக்காளம் வெளிப்படுத்தல் 11:15

வெளிப்படுத்தல் 11:15ல் ஏழாவது எக்காளம் ஊதப்பட்டது. "அப்பொழுது உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாயின" என்று கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயிற்று.

சகோதரர் ரசலின் ஊழியம், கி. பி 1874 ல் இயேசுவின் திரும்புதலுக்கு ஒத்திருக்கிறது. அந்த நேரத்தில் இயேசுவின் அரசாட்சி துவங்கிவிட்டது என்ற கருத்தை காண்பிக்கும்படியாக இந்த வசனம் பொதுவாக பயன்படுத்தப்படுகிறது. இயேசு இந்த உலக இராஜ்யத்தை தகர்ப்பதற்கு தமது அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். விரைவில் இந்த பூமியின் மேல் அவருடைய சமாதானமான இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். இது 18 மற்றும் 19ம் வசனங்களில் காண்பிக்கப்படுகிறது.

24 மூப்பர்களும் தேவனை வணங்கி, போற்றினார்கள் என்று வெளிப்படுத்தல் 11:16-17 ம் வசனங்கள் விவரிக்கிறது. 24 மூப்பர்கள் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் அல்லது தீர்க்கதரிசனங்களை அடையாளப்படுத்துவதாக நம்பப்படுகிறது. மேலும் சபையின் இந்த காலப்பகுதியில், முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கு ஒன்று சேரக்கூடிய தேவனுடைய முழு திட்டத்தின் விளிம்பில் நாம் இருக்கும் போது அவர்கள் தேவனை துதிப்பார்கள். மாறாக, இவர்கள் ஆசாரியத்துவத்தின் 24 வேலைகளை அடையாளப்படுத்த வேண்டும். (1நாளாகமம் 24, ஆசாரியத்துவத்தை அதாவது சபையை குறிப்பிடுகிறது.) அல்லது இசைக்கலைஞர்களின் 24 பாடநெறிகளை குறிப்பிடலாம். (1நாளாகமம் 25, முற்பிதாக்களை அடையாளப்படுத்தும்) சுரமண்டலத்தை கைகளில் பிடித்திருக்கும் 24 மூப்பர்களும், பிந்தைய கண்ணோட்டத்தை, ஆதரிக்கலாம்.

அப்போஸ்தலர் 3:21 ல் "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள், மனுக்குலத்தை மீட்பதற்கான தேவனுடைய அன்பான திட்டத்தை அறிவித்தது.

இருப்பினும், எப்படியோ, சாத்தானின் தந்திரமான வஞ்சனையினால், மனுஷர் இந்த அன்பை புரிந்துக்கொள்ள தவறிவிட்டார்கள். மேலும் அவரை இரக்கமற்ற, பழிவாங்கும் தேவனாக சித்திரித்து விட்டார்கள். ஆனால் இப்போது, சபையின் ஏழாம் காலத்தில், அறிவு பெருகும் போது, புத்தகம் திறக்கப்படலாம், மனித இரட்சிப்புக்கான தேவனுடைய அற்புதமான திட்டத்தை காண்பிப்பதற்காக இப்போது இந்த தீர்க்கதரிசனங்கள் புரிந்துகொள்ளப்படுகிறது.

இதுவே சகோதரர் சி. டி. ரசலின் செய்தியாகும். ஆதாமுக்கு, மீட்பதற்கு இயேசுவை சரிநிகர் சமான விலையாக கொடுக்கக்கூடிய தேவனுடைய திட்டத்தை, அவர் வசனங்களின் வழியாக நமக்கு காண்பித்தார். மேலும், தேவனுடைய நீதிக்கு இசைவாக, இயேசுவின் ஈடுபலி முழு மனுக்குலத்திற்கு எவ்வாறு பயன்படும் என்பதையும் அவர் காட்டினார். சகோதரர் ரசலின் தனித்துவமான இந்த செய்தி, ஈடுபலியின் கோட்பாடுகளை மட்டும் அல்லாமல், இரண்டு விதமான இரட்சிப்புகள், பாவநிவாரணபலி, தீமையின் அனுமதி, நம்முடைய ஆண்டவரின் திரும்புதல், திரும்பகொடுத்தல் போன்ற மற்ற கோட்பாடுகளையும் வெளிப்படுத்தியது. இவைகள் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரங்களாய் இருப்பதினால் இந்த சத்தியங்களை நாம் பெரும்பாலும் இலகுவாக எடுத்துகொள்ளுகிறோம். நம் கவனத்தை எளிதாக இழந்து, அதற்கு பதிலாக வேதாகம நிகழ்வுகளின் சிக்கலான விவரங்களை கூர்ந்து கவனிப்பதனால் அதிகமாக நாம் ஒளியூட்டப்படுவோம் என்று நாம் எண்ணலாம். நம்முடைய விசுவாசத்தின் இந்த எளிய அஸ்திபாரங்கள் சி. டி. ரசலின் நாட்களின் பூமியை சிதறடித்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சபைக்கு, ஏழாம் தூதரின் செய்தி, நம்ப முடியாத அளவுக்கு புரிந்துகொள்ளுதலை நமக்கு தந்துள்ளது - ஏற்ற கால சத்தியம். இதன் விளைவாக, மிகுந்த ஒளியில் வாழ்ந்துகொண்டிருப்பதினால், நாம் அளவுக்கு மீறிய ஆசீர்வாதங்களை பெற்றிருக்கிறோம். தேவனுடைய உண்மையான நற்குணங்களை மற்றவர்கள் காணும்படியாக, அந்த ஒளி மற்றவர்கள் மீது நாம் எப்போதும் பிரகாசிக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நாம் வாழ சிலாக்கியம் பெற்றிருக்கும் இந்த தனித்துவமான காலத்தில், நமது நீதியுள்ள முன்மாதிரி, நம்முடைய பரம பிதாவை மற்றவர்கள் புகழ்ந்துரைக்க உதவி செய்யும்.

**வெளிப்படுத்தல் 12-14**

# ஸ்திரீ மிருகங்கள் மற்றும் அறுவடை



Matt Kerry

"அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது;" (வெளிப்படுத்தல் *12:1*)

புறமத ரோமானியர்கள், ஆதிகால பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தியதில் இருந்து அறுவடைய வரைக்கும் உள்ள முழு சுவிசேஷ யுகத்தில் நடந்த நிகழ்வுகளை வெளிப்படுத்தல் 12-14 அதிகாரங்கள் விவாதிக்கிறது. சபையின் உபத்திரவம், புறமத ரோமுக்கும் போப் அமைப்பின் அதிகாரத்தில் உள்ள ரோமுக்கும் உள்ள போராட்டம், இங்கிலாந்து அயர்லாந்தின் சபை உருவாக்கம் மற்றும் சுவிசேஷ யுக அறுவடை ஆகியவற்றை இந்த விவரங்கள் உள்ளடக்கியுள்ளது.

**வெளிப்படுத்தல் 12**

தீர்க்கதரிசன நிகழ்வுகளை விவரிப்பதற்கு அடையாள மொழியை பயன்படுத்துவதில் வெளிப்படுத்தல் 12 ம் அதிகாரம் தனித்துவம் வாய்ந்தது. இது சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தில், புற மதத்திற்கு எதிராக கிறிஸ்தவத்தின் வெற்றியை விவரிக்கிறது. வெளிப்படுத்தல் 20 ம் வசனம், கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட பின் பயன்படுத்தும் காரியங்களை நமக்கு நினைவுபடுத்துகிறது. ஆயினும், கிறிஸ்தவத்தின் இந்த ஆரம்பகால வெற்றி, ஊழலுக்கு வழிவகுத்தது. மேலும் போப்பமைப்பு உயர்த்தப்பட்ட காலத்திலும், உண்மையான சபை பாதுகாப்பிற்காக "வனாந்திரத்திற்கு " ஓடிய காலத்தில், அதாவது 1260 ஆண்டுகள் (539 முதல் 1799 வரை) பரிசுத்தவான்கள் பட்ட உபத்திரவத்தை இது விவரிக்கிறது.

கி.பி 313, சபை இன்னும் விசுவாசத்தை காத்துக்கொண்டிருந்தது. அது புறமத ரோமினால் பல கடினமான துன்புறுத்தல்கள் வழியாக கடந்தது. இது மிகவும் கடுமையான உபத்திரவமாக இருந்ததினால், கி.பி 303 லிருந்து கி.பி 313 வரை "பெரும் துன்புறுத்தலின்" காலம் என்று கூறப்படுகிறது. இந்த பத்து வருடங்கள், வெளிப்படுத்தல் 2:10 ல் "பத்து நாள்" உபத்திரவம் என்று குறிப்பிடப்படுகிறது. வெளிப்படுத்தல் 2,3 ம் அதிகாரங்களில் உள்ள மற்ற சபைகளுக்கு ஆண்டவராம் இயேசு அநேக குறைகளை சுட்டிகாட்டியிருந்தாலும், வேதனைக்குரிய இந்த சபைக்கு அவர் எந்த குறைகளையும் சொல்லவில்லை.

வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம், சபையை அடையாளமாக விவரிக்க துவங்குகிறது. அதில் ஒரு ஸ்திரீ, சுவிசேஷத்தை சூரியனாக அணிந்திருந்தாள், சந்திரன் (நியாயப்பிரமாணத்தின் நிழல்களும், போதனைகளும்) அவள் பாதங்களின் கீழ் இருந்தது. 12 அப்போஸ்தல "நட்சத்திரங்களை" கொண்ட கிரீடத்தை (போதகர்களாக) தன்னுடைய சிரசின்மேல் வைத்திருந்தாள். ஆரம்பகால கிறிஸ்தவ சமுதாயம் சீக்கிரத்தில் வல்லமைப் பெற இருந்தது. அது பெரும் வேதனையோடு "பிறந்தது". துன்புறுத்துபவன் ஒரு "சிவப்பு வலுசர்ப்பமாக" அடையாளப்படுத்தப்படுகிறான். "சிவப்பான பெரிய வலுசர்ப்பம்" துன்புறுத்துகிறவர் போன்று குறிக்கப்பட்டுள்ளது. அதாவது புறச்சமயசார்பு கொண்ட ரோமானது, பிசாசின் முகவர் போன்று, பிள்ளைபெற்றவுடனே, பிள்ளையைப் பட்சித்து போடும்படிக்கு வகைத் தேடியது.

"அது வானத்தின் சேனைபரியந்தம் வளர்ந்து, அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது." என்று தானியேல் 8:10 ல் சொல்லப்படுவது போல"அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது." (வசனம் 4) சொல்லப்படுகிறது. இது தனிப்பட்ட கிறிஸ்தவர்களை படுகொலை செய்வதில், சாத்தானின் தீவிரத்தைக் குறிக்கும்.

ஆயினும், பரலோக தலையீட்டினால் ஆரம்பகால கிறிஸ்தவ சமுதாயம் காக்கப்பட்டது. "சகல ஜாதிகளையும் இருப்பு கோலால்" ஆட்சி செய்ய, பாதுகாப்பிற்காக பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது. (வெளிப்படுத்தல் 12:5, வெளிப்படுத்தல் 2:27 யையும் ஒப்பிட்டுப்பார்க்கவும்) ஆனால், அந்த ஸ்திரீ வனாந்திரத்திற்கு தப்பி ஓடும்படி, அதிகமான கஷ்டங்கள் தொடர்ந்தது. இந்த குறிப்பு வெளிப்படுத்தல் 12:6ல் சொல்லப்படுகிறது. மேலும் 14ம் வசனத்தில் மீண்டும் தொடர்கிறது. இதற்கு இடையில், 7ம் வசனத்திலிருந்து 13ம் வசனம் வரை, பிந்தைய துயரத்திற்கு வழிவகுக்கும் சூழ்நிலைகள் விவரிக்கப்படுகிறது.

கிறிஸ்தவரிடத்திற்கும் (மிகாயேலும் அவர் தூதர்களும்), புறமதத்தினருக்கும் (வலுசர்ப்பமும் அவனுடைய தூதர்களும்) இடையில் நடக்கும் போராட்டத்தை, "பரலோகத்தில் ஒரு யுத்தம்" நடப்பதை போல 7 ம் வசனம் சித்தரிக்கிறது. இவைகள் ஒவ்வொன்றும், ரோம சாம்ராஜ்யத்தில் செயல்படும் ஆவிக்குரிய தாக்கங்களை ஆளுவதற்கு முயற்சித்தது. கான்ஸ்டன்டைன் காலத்தில் கிறிஸ்துவம் பரவியது, இதனால் இறுதியில் புறமதத்தின் கட்டுப்பாட்டை திசைத் திரும்பியது. பின் வந்த, ஜூலியன் ("அப்போஸ்டேட்" என்ற புனைப்பெயரிடப்பட்டவன்) 361லிருந்து 363வரை அவனுடைய குறுகிய ஆட்சியில் புறமத அமைப்பை புதுப்பித்தான், ஆனால் அவர் தான் கடைசி கிறிஸ்தவர் அல்லாத இராஜ்யத்தின் இராஜா ஆவார். இவ்வாறாக, "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்." (வசனம் 9)

வெளிப்படுத்தல் 12:10-12 ல்,

கிறிஸ்தவத்தின் வெற்றி உயர்வான மதிப்புமிக்க வார்த்தைகளினால் விவரிக்கப்படுகிறது. எனினும், கிறிஸ்தவம் விரைவில் சீர்குலைந்தது. 1,260 வருடங்கள் உண்மையான சபை வனாந்திரத்திற்கு தப்பியோடும்படியாக, போப் அமைப்பின் ஆட்சியின் உயர்வுக்கு வழிவகுத்தது. (வசனம் 14) அந்த பாம்பு அதாவது வஞ்சகனாக இருக்கக்கூடிய சாத்தான், தவறான போதனைகளை "தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது". ஆனால் கிறிஸ்துவ சமுதாயம் எந்த விதமான பாதிப்பில்லாமல், அந்த போதனைகளை உறிஞ்சி விட்டதினால், அந்த ஸ்திரீ பாதுகாக்கப்பட்டாள். அந்த வலுசர்ப்பத்தின் மேல் "அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று." (வெளிப்படுத்தல் 12:17)

**வெளிப்படுத்தல் 13**

539 முதல் 1799 வரை, 1260 ஆண்டுகள், போப் அமைப்பு, துன்புறுத்தும் அதிகாரமாக்கத்தில் வளர்ச்சி அடைந்தது. இது 13ம் அதிகாரத்தின் துவக்கத்தில் அடையாளங்களினால் குறிப்பிடப்படுகிறது . 10 கொம்புகளை கொண்ட ஒரு மிருகத்தை போலவும், ஒரு சிறுத்தை, கரடி மற்றும் சிங்கத்தை போலவும் போப் அமைப்பு விவரிக்கப்படுகிறது. தானியேல் ஏழாம் அதிகாரத்தில் ரோம், கிரேக்கம் மேதோ-பெர்சிய மற்றும் பாபிலோனைப் பற்றி குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட அடையாளங்கள் இவைகளே. முறைப்படி கடைசியிலிருந்து முதல் வரை போப் அமைப்பு முன்சென்ற பேரரசுகளின் மீது கட்டப்பட்டது (பண்பாட்டுரீதியாக) என்பதை இது குறிக்கிறது. இந்த மிருகத்தின் ஏழு தலைகளும், தானியேலிலுள்ள மிருகங்களின் ஒட்டுமொத்த ஏழு தலைகளை நமக்கு நினைவூட்டு கிறது. தானியேல் ஏழாம் அதிகாரத்தில் அந்த நான்கு மிருகங்களை போல, இந்த மிருகமும் கடலிலிருந்து ஏறிவந்தது.

ரோம சாம்ராஜ்யம் பெயரளவிலான, கிறிஸ்தவத்திற்கு மாறியப் பின்னர், போப் அமைப்பு அதன் அதிகாரத்தை ரோமனிடமிருந்து பெற்றுகொண்டது. ஜஸ்டினியல் காலத்தில் தான், பிறகு கான்ஸ்டான்டி நோபிளில் மையம் கொண்ட ரோம இராஜ்யமானது, ரோமிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் அரசியல் செல்வாக்கோடு சட்ட அதிகாரத்தை போப்பிற்கு நிர்ணயித்தது. இந்த விஷயங்களை, " Studies in the Scriptures ", மூன்றாம் தொகுப்பில், *Thy Kingdom Come* மூன்றாம் அதிகாரத்திலும், காணலாம். கூடுதலான தகவல்களுக்கு, ஆர்வமுள்ள வாசகர்கள், " A Little Horn," August 1992, *Beauties of the Truth* " ஐ கலந்தாலோசிக்கலாம்.

இந்த மிருகத்தின் 10 கொம்புகளும், ரோம பேரரசின் அதிகாரத்தை அங்கீகரித்த 10 பழங்குடியினர்களிடமிருந்து வந்த ஐரோப்ப நாடுகளின் அரசியல் அதிகாரத்தின் பிரிவுகளை வெளிப்படையாக அடையாளப்படுத்துகிறது. இதனிமித்தமாக இந்த தரிசனத்தில் கொம்புகள் மீது கிரீடங்கள் மற்றும் தூஷனமான வார்த்தைகள் இருப்பதாக சித்தரிக்கப்படுகிறது. முந்தைய அதிகாரத்தில் உள்ள 3½காலங்கள் அல்லது வருடங்கள் 42 மாதங்களுக்கு சமமானதாகும். இது வெளிப்படுத்தல் 13:6 ல், போப் அமைப்பின் வல்லமையின் காலம் குறிப்பிடப்பட்டுள்ள அதே காலப்பகுதியாகும்.

தானியேலில் சொல்லப்பட்டது போல, இந்த தீர்க்கதரிசனங்களில், ஒரு நாள் ஒரு வருடமாக கணக்கிடப்படுகிறது. போப் அமைப்பின் இந்த காலப்பகுதி 539 லிருந்து 1799 வரை நடைப்பெற்றது. கி.பி 539இன் போது, போப்பின் எதிராளிகளான (ஆஸ்ட்ரோகோத்ஸ்) ரிவ்வென்னாவில் அடக்கப்பட்டனர். மேலும், பேளிசேரியஸ்,என்னும் கான்ஸ்ண்டிநோபிலிருந்து ஜஸ்டினியனின் படைதளபதி வெற்றிகரமாக பின்வாங்கினார். மேலும் போப் விஜீலியசை ஜஸ்டினியனின் அதிகாரத்தை குறிப்பதாக இராஜ்யத்தின் மேற்கு கிளையில் வைத்துவிட்டு வந்தார். 1799 ஆம் ஆண்டில் போப் பயஸ் சிக்ஸஸ் பிரான்சில் நெப்போலியனின் சிறை கைதியாக மரித்தார். போப் அமைப்பு தற்காலிகமாக தலைமை இல்லாமல் விட்டுவிடப்பட்டது. முந்தைய ஆண்டுகளில் அதன் அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தினது போல இனி ஒரு காலம் பயன்படுத்த முடியாது.

மிருகத்தின் தலைகளில் ஒன்றில், ஏற்பட்டிருந்த சாவுக்கேதுவான காயமானது, அதிகாரத்தின் மையம் கான்ஸ்ண்டிநோபிலுக்கு மாற்றப்பட்டபின் ரோமின் மீது வரம்பு மீறின ஆஸ்ட்ரோகோத்ஸின் கையினால் வாங்கின காயமாக இருந்தது. ஆயினும்கூட, ரோம் மீண்டும் போப் அமைப்பின் கீழ் உயிர்த்தெழும். போப் அமைப்பின் முடக்க முடியாத வல்லமையை 4ம் வசனம் வெளிப்படுத்துகிறது. "மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்." இதன் வல்லமையின் காலம் 42 மாதங்கள் என்று 5ம் வசனத்தில் சொல்லப்படுகிறது. அதனுடைய அக்கிரமத்தின் அளவு, தூஷனமான வார்த்தைகள் என்று 6ம் வசனத்தில் விவரிக்கப்படுகிறது. அது பரிசுத்தவான்களை துன்புறுத்தலை, "பரிசுத்தவான்களோடு யுத்தம்" எனவும், அதன் பரந்த செல்வாக்கை (பெயரளவிலான கிறிஸ்தவ) பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்" என்று 8ம் வசனம் குறிப்பிடுகிறது. "பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்" என்று 9, 10 வசனங்களில், இயேசுவின் உண்மையான சீஷர்களுக்கு எச்சரிப்பு வழங்கப்படுகிறது.

**இரண்டு கொம்புள்ள மிருகம்**

வெளிப்படுத்தல் 13:11ல் இரண்டாவதாக ஒரு மிருகம் எழும்புகிறது. இந்த மிருகம் "பூமியிலிருந்து" (பெயர் கிறிஸ்தவம்) வருகிறது. இந்த மிருகம் இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து சபையை அடையாளப்படுத்துவதாக பல சகோதரர்கள் எண்ணுகிறார்கள். 1534 இல் அரசனாகிய ஹென்றி VIII ஆல் ரோம சபையிலிருந்து இது பிரிக்கப்பட்டது. அதற்கு ஆட்டுக்குட்டியைப் போல் இரண்டு கொம்புகள் இருந்தன. இது நம்முடைய கர்த்தராகிய இயேசுவை அடையாளப்படுத்துவதாக அர்த்தப்படுத்தலாம், அல்லது "பாதிப்பில்லாத ... காயப்படுத்த விரும்பாத..." என்றும் அர்த்தப்படலாம். (R5349:2)

அது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மூலம் அரசியல் அதிகாரத்தை செயல்படுத்திக் கொண்டிருப்பதை அடையாளமாக குறிக்கும் ஒரு வலுசர்ப்பமாக பேசப்படுகிறது. தேவனுடைய அதிகாரத்தையும், நியாயத்தீர்ப்பையும் அடையாளப்படுத்துவதாகக் கூறி, "வானத்திலிருந்து ... அக்கினியை வருஷித்து" பெரிய அடையாளங்களை இது செய்தது. (1இராஜாக்கள் 18:38, லேவியராகமம் 9:24)

இந்த அதிகாரத்தின் இறுதியில் பிரபலமான "அறுநூற்றறுபத்தாறு" என்னும் இலக்கம் பதிவிடப்படுகிறது. அது மனுஷனுடைய இலக்கமாக இருந்தது. இலக்கத்தை தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கு இருந்தது. சத்தியத்தை பரப்புவதில் ஏற்படுத்தப்பட்ட இந்த கட்டுப்பாடு, புதிதாக வந்தவர்கள் புரிந்துகொள்ள முடியாததாக இருக்கலாம் அல்லது உபத்திரவத்தின் காரணமாக சத்தியத்தை பரப்புவதற்கு முடியாமல் இருக்கலாம் என்பதையே இது குறிப்பிடுகிறது. கையில் அல்லது நெற்றியின் மீதான முத்திரை, போப் அமைப்போடு ஒத்துழைக்கும் செயல்கள் அல்லது எண்ணங்களைக் குறிக்கிறது. ரோமாபுரியின் பண்டைய கிரேக்க வார்த்தை லாட்டினோஸ் (***lateinos***), (கிரேக்கில் எழுத்தபட்ட எழுத்துக்கள்), கூட்டப்படும்போது 666 என்ற எண்ணை தருகிறது. மத்தேயு சுவிசேஷத்தை தவிர புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்கள் கிரேக்கில் எழுதப்பட்டது. அதனால் மற்ற மொழிகளில் எண்கள் குறைவாக மதிப்பிடப்படுகிறது.

வெளிப்படுத்தல் 13:14, 15, ஒரு "மிருகத்தின் சொரூபத்தை" அறிமுகப்படுத்துகிறது, அதாவது அது அந்த மிருகம் அல்ல, அசல் மிருகத்தின் "ஒரு சொரூபம்". இது கத்தோலிக்க திருச்சபை போல, ஜனங்களின் மனதில் ஒரு ஐக்கிய முன்னணியாக அதிகாரத்தை பெறும் "புரோடெஸ்டான்ட்" பிரிவுகளின் கூட்டணியை இது குறிக்கலாம். ஒரு கோணத்தில், இது 1946ல் ஆரம்பகால அட்வென்டிஸ்ட் இயக்கத்திற்குப் பின்னர், இவாஞ்சலிக்கல் கூட்டணியாக இருக்கக்கூடும். அல்லது, பெரும்பாலும், இங்கிலாந்தின் இராஜா, ரோம சபையின் உருவத்தில், ஆங்கிலிகன் சபையை உருவாக்கியதை இது குறிக்கும்.

### அதிகாரம் 14

மிருகத்தின் அடையாளத்திற்கு மாறாக, சீயோன் மலை மீது "தங்களுடைய நெற்றிகளின் மேல் பிதாவின் நாமம் தரித்திருந்த" 144,000 பேர்கள் ஆட்டுக்குட்டியானவரோடும் நிற்க கூடிய தரிசனத்தை வெளிப்படுத்தல் 14:1 ம் வசனம் அறிமுகப்படுத்துகிறது. உண்மையான சபை தேவனுக்கும் அவருடைய நல்லொழுங்குகளுக்கும், வெளிப்படையாக ஒத்துழைக்காமல், முழு மனதோடு அவருக்கு இசைந்திருப்பது மிக அவசியம். தேவனுடைய நாமம் அவர்களின் நெற்றிகளில் எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கான பொருள் என்னவெனில், இவர்கள் அழைக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட, உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அதாவது பிதாவின் நாமம் நெற்றிகளில் எழுதப்பட்டிருப்பதினால், இவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தின் ஒரு பகுதியாவார்கள். (வெளிப்படுத்தல் 3:12 ) சீயோன் மலையின் மேல் நிற்கக்கூடிய காட்சி, ஒரு பரலோக காட்சியாகும். ஒபதியா 21ம் வசனத்தோடு ஒப்பிடலாம்.

இவர்கள் மணவாட்டி வகுப்பினர். இவர்கள் ஆயிரவருட ஆட்சியில், மனுக்குலத்தை உயர்த்துவதற்கு, கிறிஸ்துவுடன், ஆசாரியர்களாக இருந்து ஆட்சி செய்வார்கள். (வெளிப்படுத்தல் 20:6 ) இவர்கள் குற்றமற்றவர்களும், உண்மையுள்ள கன்னிகைகளும், பூமியிலிருந்து மீட்கப்பட்ட முதற்பலனானவர்கள். 12 ம் அதிகாரத்தில் இருந்த சித்திரங்களை முடிப்பது போல சுத்திகரிக்கப்பட்ட பரிசுத்தமுள்ள, முழுமையான மகிமை அடைந்த, இந்த வகுப்பாரை பற்றிய விவரிப்பு வெளிப்படுத்தல் 14:5 ல் தொடர்கிறது.

### அறுவடை

6 ம் வசனம் முதல், 14 ஆம் அதிகாரத்தின் மீதமிருக்கும் பகுதிகள் வரை, அறுவடையின் அல்லது சுவிசேஷ யுகத்தின் முடிவு காலத்தைப் பற்றிய சித்திரத்தை நாம் பெற்றிருக்கிறோம். மூன்று தேவதூதர்கள், ஒவ்வொருவரும் முக்கியமான செய்தியை அறிமுகப்படுத்துகிறார்கள். முதல் தூதன் "நித்திய சுவிசேஷத்தை" உடையவராக இருந்தார். இரண்டாவது தூதன் பாபிலோனின் வீழ்ச்சி அதாவது "நியாயத்தீர்ப்பின் .... வேளையைப் பற்றிய அறிவிப்பை கொடுத்தார், மூன்றாவது தூதர் மிருகத்திற்கும், அதன் சொரூபத்திற்கும் அதன் அடையாளத்திற்கும் எதிராக பரிசுத்தவான்களை எச்சரிக்கிறார்.

கடந்த இருண்ட காலத்தின் தீங்கிழைக்கும் பிழைகள் இல்லாமல், தேவனுடைய திட்டமாகிய "நித்தியமான சுவிசேஷத்தை" தெளிவாக புரிந்துகொள்ளும்படிக்கு, சுவிசேஷ யுகத்தின் தற்போதைய அறுவடை காலத்தில், பரிசுத்தவான்கள் அழைக்கப்படுகிறார்கள். இது பரிசுத்தவான்களுக்கு அறிவொளியூட்டும் அற்புதமான நேரம். ஆனால், கிறிஸ்தவமண்டல அமைப்புகளுக்கு எதிரான தீர்ப்புகளிலும் இதுவும் ஒன்று. நாம் கடந்த காலத்தின் காரியங்களை விட்டு பிரிந்து, இப்போது இருக்கும் நித்திய சுவிசேஷத்தை பற்றி கொள்வதற்கு காலமானது.

இந்த தூதர்கள் வானத்தின் மத்தியிலே தற்கால "வானம் மற்றும் பூமியின்" மீது பறப்பார்கள். அறுப்பின் ஆரம்பம் துவங்கி , ஆவிக்குரிய சிந்தையுடையவர்களை நோக்கி செயல்படுவர். ( R474:5, 304:1) இங்கு பாபிலோன் பெயரளவிலான கிறிஸ்தவ மண்டலத்தை குறிக்கிறது, அதே நேரத்தில், பரிசுத்தவான்கள் முழுமையான பக்திக்கும், அர்ப்பணிப்புக்கும் அழைக்கப்படுகிறார்கள். பெயரளவிலான கிறிஸ்தவமண்டல அமைப்புகளுடன் இணைந்திருப்பவர்கள் பரிசுத்தவான்களுக்கு அளிக்கப்படும் சமாதானத்தையும், மன அமைதியையும் காணமுடியாது. (வசனம் 11) இது வரையில் சொல்லப்பட்டதை காட்டிலும், அறுவடையின் காலத்தின் போது இன்னும் பொறுமையோடும் விசுவாசத்தோடும் இருப்பதற்கு 12ம் வசனம் நமக்கு அறிவுறுத்துகிறது. அறுவடையின் காலத்தின் போது தங்கள் ஓட்டத்தை முடிக்கும் பரிசுத்தவான்கள் உடனடியாக வெகுமதியைப் பெற்றுக்கொள்ள திரையை கடந்து செல்கிறார்கள் என்று 13ம் வசனம் கருதுகிறது.

**வசனம் 14-20**

வெளிப்படுத்தல் 14:14-20 ல் "அறுவடைக்" குரிய அடையாளங்களை அறிமுகப்படுத்தப்படுகிறது. 14 ம் வசனத்தில், இயேசு மனுஷகுமாரனுக்கொப்பானவராக வெண்மையான மேகத்தின் மேல் அமர்ந்து, தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுடையவராக காணப்படுகிறார். 15ம் வசனத்தில்,"பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் " என்று தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வந்த வேறொரு தூதன் மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார். ஒருவேளை, இந்த "தூதன்", அறுவடையின் ஏற்ற நேரத்தை குறிப்பிடும், காலத்தீர்க்கதரிசனத்தின் குரலாக இருக்கலாம். (தானியேல் 12:12) இல்லையென்றால், இந்த "தூதன்" கிறிஸ்துவை இயக்கும் அதிகாரம் உள்ளவரா ? சத்தியத்தின் "அரிவாளை" கொண்டு, பரிசுத்தவான்களை அறுவடை செய்யும் முழு செயலும், 16ம் வசனத்தில் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது."".

அதற்குபின் வேறொரு தூதன் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான். ஒருவேளை, வெளிப்படுத்தல் 19:17 ல் "ஒரு தூதன் சூரியனில் நின்று" இதே பணியைச் செய்தது போல, இந்த தூதனும் மகிமை அடைந்த முழு சபையை அடையாளப்படுத்தலாம். "இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா."(சங்கீதம் 149:9)

பின்பு, வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டு, வந்து, இது "பலிபீடத்தின் கீழே" பழிவாங்குதலுக்காக காத்திருக்கும், கொல்லப்பட்ட பரிசுத்தவான்களின் நீதிக்காக ஏறெடுக்கப்பட்ட மகா சத்தத்தை நமக்கு நினைவூட்டுகிறது. (வெளிப்படுத்தல் 6:9) அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை (கிறிஸ்தவ மண்டல அமைப்புகள்) அறுத்து, தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான். அந்த ஆலையிலிருந்து ஆயிரத்து அறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டு பெருகிவந்தது.

யோயேலில் தீர்மானிக்கிறபடி, இந்த ஆலை இஸ்ரயேலில் உள்ளது. ஆகவே "பட்டணம் இல்லாத" கிறிஸ்தவமண்டலம், அவர்களின் வீழ்ச்சிக்காக பழைய அமைப்புகள் கூட்டிச்சேர்க்கப்பட்டது. 1,600 என்ற எண் 40 x40 ஆகும். (40 x40 = 1,600) இது முழு அளவிலான நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. இந்த இரத்தம் "குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகிவந்தது". இது வேதாகமத்தின் ஆசீர்வாதமான கோட்பாடுகளை, பழைய முறைமைகள் இனி ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்று கருதுகிறது. அதன்பிறகு, கடிவாளங்கள், "கர்த்தருக்கு பரிசுத்தம்" ஆக இருக்கும். (சகரியா14: 20 ) இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் பின்தொடரும்.

இந்த வசனங்களிலிருந்து நாம் கற்றுகொள்ளும் பாடங்களில் ஒன்று, என்னவெனில், பொய்யான திராட்சை செடியின் (அதாவது அர்மெகதோன்) அறுவடை கூடிய முன்னேற்றைத்தை நாம் காணும் வரை, உண்மையான திராட்சை செடியின் அறுவடை முழுமை அடையாது.

தேவன் தாமே நம்மை சரியான புரிந்துக் கொள்ளுதலில் வழிநடத்துவாராக.

வெளிப்படுத்தல் 15-16

# கடைசி ஏழு வாதைகள்



James Parkinson

"பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது." (வெளிப்படுத்தல் *15:1*)

யாத்திராகமம், எரிகோவின் அழிவு, சாலொமோனின் ஆலயத்தின் பிரதிஷ்டை ஆகிய இவைகள், கோபாக்கினையின் நாளை (செப்பனியா 1:14-18) அதாவது இந்த உலகத்தின் நியாயத்தீர்ப்பை எவ்வாறு அடையாளப்படுத்துகிறது என்பதை, கடைசியான ஏழு வாதைகளை கொண்ட அதிகாரங்கள் (வெளிப்படுத்தல் 15-16) வெளிப்படுத்துகிறது.

**சாலொமோனின் ஆலயம் (1 இராஜாக்கள் 8)**

சாலொமோனின் ஆலயம் 7வது மாதத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டாலும், 8ஆம் மாதம் வரை அது நிறைவு செய்யப்படவில்லை. இந்த பிரதிஷ்டை மரணத்தில் நித்திரை அடைந்திருந்த பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு பின் பல வருடங்கள் சென்றும் விசுவாசமுள்ள சபை நிறைவடையாமல் இருந்தாலும், இந்த உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் நடைபெற்றது. ஆகையால், வெளிப்படுத்தல் 15:5,8 ல் "ஆலயத்தின்" திறப்பு விழாவாவை, சபை முடிவடைவதற்கு முன்னதாகவே, ஏழு வாதைகளும் ஊற்றப்பட்டதாக விவரிக்கப்படுகிறது. "ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது" (வெளிப்படுத்தல 16:17) என்று விவரிக்கப்படுகிறது. பிரதிஷ்டையின் தினத்தன்று, ஆசாரியர்கள் பணிபுரிய முடியாதபடிக்கு ஆலயத்தை புகை நிரப்பிற்று. (1இராஜாக்கள் 8:10-11) "அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது."(வெளிப்படுத்தல் 15:8 ) என்று சொல்லப்படுகிற வாக்கியத்திற்கு இது ஒத்திருக்கிறது. கிறிஸ்துவின் சபை இந்த உலகிற்கு புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை ஆரம்பிக்க, நித்திரையில் இருக்கும் பரிசுத்தவான்களின் (நிழலான ஆசாரியர்கள்) உயிர்த்தெழுதல் மட்டுமே போதாது என்பதை இது குறிக்கிறது. அதாவது ஆசாரியத்துவம் முழுமையாக நிறைவடைய வேண்டும்.

**எரிகோவின் 7 நாட்கள் மற்றும் கடைசி நாளில் 7 முறை (யோசுவா 6)**

முதல் நாளில் யோசுவா எழுந்தருளி, இராணுவங்களோடும், ஆசாரியர்களோடும் அந்த நகரத்தை 7 நாட்களும், கடைசி நாள் அன்று 7 முறை சுற்றி வந்தனர். பட்டணத்தின் கடைசி சுற்று முடிவடைந்தபோது, இஸ்ரயேலர்கள் கூச்சலிட்டார்கள், பட்டணம் அழிக்கப்பட்டது. நிழலான இந்த 7 நாட்கள், இயேசுவின் உயிர்த்தெழுதலோடு துவங்கியது. இது சுவிசேஷ யுகத்தின் 7 காலங்களுக்கு ஒத்திருக்கிறது. "கடைசி நாள்" (அறுவடை) 7 பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. இந்த 7 பகுதிகள், எல்லா விதமான மனித அமைப்புகளையும் இறுதியாக அழிவுக்கு வழிநடத்தும் கடைசி 7வாதைகளுக்கு தொடர்புடையதாக உள்ளது.

**யாத்திராகமத்தின் கடைசி 7 வாதைகள் (யாத்திராகமம் 7:14-11:10)**

முதல் மூன்று வாதைகள் எகிப்தியர்கள் மற்றும் இஸ்ரயேல்கள் மேலும் வந்தது, ஆனால் கடைசி 7 வாதைகள் எகிப்தியர்கள் மேல் மட்டும் வந்தது. (அதற்குபின் அவர்களை நிர்வாகிக்க, மோசே ஆட்சி பொறுப்பை எடுத்துகொண்டார்.) "கடைசி நாளில்" நடந்த ஏழு சம்பவங்கள், யாத்திராகமத்தின் கடைசி 7 வாதைகளில் சில விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு யாத்திராகமத்தின் வாதைகள், முக்கியமான உலகத்தில் சம்பவிக்கும் நிகழ்வுகளையும், வெளிப்படுத்தலின் கடைசி 7 வாதைகள், சுவிசேஷ யுகத்தின் "கடைசி நாளில்" பெயர் சபை அமைப்புகளில் (பாபிலோன்) மேலுள்ள அதன் விளைவுகளை நமக்கு காட்டப்படுவதாக கருதப்படுகிறது. இந்த கடைசி 7 வாதைகளும் உலகத்தின் மீது அழிவுகரமான விளைவுகளை கொண்டுவந்த போதிலும், இஸ்ரயேலை தங்களது சொந்த நாட்டிற்கே திரும்பச் செய்வதற்கான பயனுள்ள விளைவுகளை ஒவ்வொன்றும் கொண்டு வந்தன:

ஆசாரியர்கள் தங்களை சுத்திகரிப்பதற்காக ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு "கண்ணாடி கடலை", வெளிப்படுத்தல் 15ம் அதிகாரம் அறிமுகப்படுத்துகிறது. யாத்திராகமம் 15ல், மோசேயின் சங்கீதம், "கொஞ்ச காலத்திற்கு" பின் சாத்தான் மேல் கிறிஸ்துவுக்கு கிடைக்கும் இறுதி வெற்றியை அடையாளப்படுத்துகிறது. அதன்பின், யெகோவா தேவனே மறுபேச்சிற்கு இடமின்றி "யுகங்களின் இராஜா" - வாக இருப்பார், உலகத்தில் உள்ளோர் யாவரும் அவரை என்றென்றும் துதிப்பார்கள்.

வெளிப்படுத்தலின் முதல் வாதை பூமியில் ஊற்றப்பட்டது, இது பணக்காரரையும் சக்தி வாய்ந்தவர்களையும் குறிக்கிறது. மத ரீதியான ஜனங்கள் - மிருகத்தையும், அதன் சொரூபத்தையும் வணங்குபவர்கள் அல்லது அதன் அடையாளத்தை பெற்றவர்கள் மோசமாக காயப்பட்டார்கள். நீண்ட பொருளாதார மந்தமான காலத்தில், பல அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், சமயமத குழுவின் சமய நம்பிக்கையிலிருந்தும் அவர்களது அமைப்புகளிலிருந்தும் விலக வேண்டும் என்னும் அழைப்பை உணர்ந்தனர், அதே நேரத்தில் பரிணாமவாதிகள் மற்றும் சுதந்திரவாதிகள் பல பிரிவுகளில் எழுந்தார்கள்.

வெளிப்படுத்தலின் இரண்டாம் வாதை கடலில் ஊற்றப்பட்டது - இது பொதுவான ஜனங்களை பாதிக்கக்கூடிய ஒரு உலகப் போரை பரிந்துரைத்தது. இந்த முதலாம் உலகப் போரில் 16 மில்லியன் ஜனங்கள் கொல்லப்பட்டனர். மத ரீதியான தேசங்களாகிய ரஷியா, ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா உடைந்தது.

வெளிப்படுத்தலின் மூன்றாம் வாதை நதிகள் மற்றும் ஊற்றுகளிலும் ஊற்றப்பட்டது, அவைகள் இரத்தமாக மாறியது. இந்த வாதை குறிப்பிட்ட சமய நம்பிக்கை கொண்டிருப்போரின் தனிக் குழுக்களிலும், அவர்களுடைய கருத்தரங்கங்களிலும் இருக்க வேண்டும். இந்த மிகப் பெரிய மன சோர்வில், புரட்டஸ்டன்ட், பெரும்பாலான பிரிவினரை ஆதிக்கம் செலுத்தியது. வேதத்தை விசுவாசித்த பலரை மதவெறியர்கள் என்று நிராகரித்த அடிப்படைவாதிகள், இப்போது அவர்களே மதவெறியர்கள் என்று கருதப்பட்டார்கள்.

சுவிசேஷம் போதிப்பதை அடையாளமாக காட்டும்படிக்கு, வெளிப்படுத்தலின் நான்காம் வாதை, சூரியனில் ஊற்றப்பட்டது. மனுக்குலம் ஒரு அமைதியான சமுதாயமாக உருவாகவில்லை என்பதை இரண்டாம் உலகப் போர் காட்டியது. (அவர்களுடைய கோட்பாடுகள் பெரும்பாலும் சமரசமாக "புதிய மரபுவழி" கோட்பாடாக மாற்றப்பட்டிருந்தாலும்) தாராளவாதிகள் தோற்கடிக்கப்பட்டனர்.

வெளிப்படுத்தலின் ஐந்தாம் வாதை மிருகத்தின் சிங்காசனத்தின் மேல் ஊற்றப்பட்டது. (தானியேலி ல் சொல்லப்பட்ட கடைசி மிருகம் ரோமானிய பேரரசுக்கு அடையாளமாக பலரால் காண்பிக்கப்படுகிறது.) ரஷ்யாவின் எழுச்சி, அதன் பாரம்பரியங்கள் மற்றும் போதனைகளினால் கத்தோலிக்கத்தை மிகுதியாக சேதப்படுத்தியது.

வெளிப்படுத்தலின் ஆறாம் வாதை ஐபிராத் நதியின் மேல் ஊற்றப்பட்டது. (இதன் மீது பாபிலோனின் செல்வம் சார்ந்திருக்கிறது) உலகெங்கிலும், ரோமன் கத்தோலிக்க திருச்சபை பல டிரில்லியன் மதிப்புள்ள சொத்துக்களை கொண்டிருப்பதாக கருதப்படுகிறது. எனவே, பொறுப்புகளும் பெரிதளவில் உள்ளது. ("சூரியோதயத்திலிருந்து வரும் இராஜாக்கள்", கிறிஸ்துவும் அவருடைய உண்மையுள்ள சபையுமாவர்.)

வெளிப்படுத்தலின் ஏழாம் வாதை ஆகாயத்தில் ஊற்றப்பட்டது. இஸ்ரயேலுக்கு வெளியே உள்ள தேசங்களுக்கு, அர்மெகதோன் பேரழிவை தரும், அதனால் அவர்களது ஒழுங்கமைக்கப்பட்ட மதங்களும் தோல்வியடையும். ("கல் மழை" அணுவாயுதங்களை அடையாளப்படுத்தக்கூடும் என்றாலும், நாம் காத்திருந்து பார்க்க வேண்டும்)

கடைசி ஏழு வாதைகளும் அவைகளின் நோக்கங்களும் சுருக்கமாக இந்த பாடத்தின் முடிவில் காணலாம்.

**20 ஆம் நூற்றாண்டு முதல்**

இரண்டாம் உலக போருக்குபின், "மேற்கு காற்று" மேலோங்கி இருக்கும் வரை நாற்பத்தி நான்கு ஆண்டு காலமாக கத்தோலிக்கம் மற்றும் மேற்கு சோவியத் இடதுசாரிகள் பாதித்தது. எகிப்தின் மூன்று நாட்கள் காரிருள் மற்றும் யூப்ரடிஸ் நதியின் வற்றிபோகுதல், இவ்விரண்டுமே இனிவரக்கூடிய மகா ஆபத்தான உலகளாவிய வாதையாக தோன்றுகிறது. "தகர்ந்து போகும் சீட்டுக்கட்டாலான வீடு". 2008 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஹவுஸிங் பபிள் (வீடுகளின் விலை முதலில் குமிழி போல் பெரிதாகி பிறகு அது உடைவது போல் திடீரென குறைந்து போவது) ஆனது வரப்போகும் நடுக்கத்திற்கான முன் அதிர்வாகும்.

ஒரு கண்ணாடியில் நாம் பார்த்தாலும், பேராபத்தை சந்தித்தால் என்னவெல்லாம் நாம் சிந்திக்கலாம். இது அதிகப்படியான பணவீக்கம் மூலம் முன்னறிவிக்கப்பட்டிருக்கலாம். (ஜெர்மனியில் 1923 ல் நடந்ததுப் போல்) ஜனங்கள் கடன் பெற்றிருந்தாலும், அவர்களின் வங்கிக் கணக்குகள் பயனற்றதாயிருக்கும். (1930 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் நடந்தது போல) தொழில் சரியலாம், சம்பளத்திற்குரிய வேலைகள் குறையலாம். அச்சிடுதல் மற்றும் ஊடகங்கள், "பொது நலன்" என்ற பெயரில் ஆட்சியாளர்களால், கைப்பற்றப் படலாம். ஜனங்கள் என்று கருதப்படும் பெயரில் அதிகாரமான அதிகப்படியான அரசாங்கங்கள் அதிகாரத்தை அபகரிக்கும். நேர்மையாக சம்பாதிக்கக்கூடிய பணம் அரிதாகிவிடும், குறிப்பாக கிறிஸ்தவர்களின் பலியின் ஜீவியம் இன்னும் கடினமாகிவிடும்.

உலகில் ஆதிக்க சக்திகளாக இடதுசாரி, இஸ்லாமியம், மற்றும் நிர்வாகமாக்கப்பட்ட கிறிஸ்தவமே இருக்கும் (முந்தின இரண்டும் ஒன்றிணைந்து மூன்றாவதை எதிர்க்கும்) "யூதர்களை பழியுங்கள்" மற்றும் "இஸ்ரயேலை பழியுங்கள்" அதேசமயம் "கிறிஸ்தவர்களை பழியுங்கள்" என்கிற அழைப்பு மிகவும் தீவிரமடையும். (நாம் அதை கவனிப்போம் பார்ப்போம்) ஆனந்தமான காலம் வெளிப்படுத்தின் விசேஷத்தின் கடைசி மூன்று அதிகாரத்தில் காத்திருக்கிறது.

**நாம் என்ன செய்ய வேண்டும்?**

(1) கடனை விட்டு வெயியேறவேண்டும்

(2) கடன் வாங்காமல் இருக்கவேண்டும்.

(3) உலகிற்கு சாட்சியை முன்வைப்பதற்காக புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்துங்கள், நமக்கு முடியும் போதே, புது தொழில்நுட்பத்தை உபயோகப்படுத்தி உலகத்திற்கு சாட்சியை உருவாக்கிட வேண்டும்.

(4) யூதர்களுக்கு விரோதமாக, இஸ்ரயேலுக்கு விரோதமாக, காரியங்கள் துரிதப்படுத்தப்படும்போது, அதை தடுத்து நிறுத்தவேண்டும்.

அந்த நாளின் அரசியல் தத்துவங்களை அல்ல, கிறிஸ்துவின் வார்த்தையை அறிவிப்பதே கிறிஸ்தவரின் கடமையாகும்.

காரண விளக்கம் : (1) கடனிலிருந்து வெளியேறும்போது, நமக்கு ஏற்படும் மனசோர்வுக்கு, நம்முடைய கர்த்தர் அல்ல, நாமே அதற்கு காரணம். (2) டி.வி, இண்டர்நெட் மற்றும் கான்பிரன்ஸ் கால்ஸ் (conference calls) கிடைக்கும் போது, தேவனுடைய வார்த்தையை பகிர்ந்துக்கொள்ள அவைகளை பயன்படுத்திகொள்ளவேண்டும். (3) இஸ்ரயேலை மீண்டும் தங்கள் தேசத்திற்குக் கொண்டு வர யெகோவா தீர்மானித்திருக்கிறார் (ஆமோஸ் 9:14- 15) ஆகவே, அதற்கு தடையாக இல்லாமல், அவர்களை ஊக்குவிக்கவேண்டும். (4) அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவர், இந்த உலகத்தை தேவனோடு ஒப்புரவாக்குவதற்கு, ஆயிரவருட ஆசாரியத்து வத்திற்காக பயிற்சி பெற்றுகொண்டிருக்கிறார். எனவே அவர் இவ்வுலகத்திற்குரிய காரியங்களில் சிக்கிக்கொள்ளகூடாது. (2தீமோத்தேயு 2:4)

## யாத்திராகமத்தில் கடைசி ஏழு வாதைகள்

### இஸ்ரயேல் மீதான வாதைகள் விளைவுகள் மற்றும் இஸ்ரயேல் மீது தாக்கத்தை ஏற்படுத்திய உலக தேதிகள்

| வாதை | உலகத்தின் மீதான விளைவு | தேதிகள் | இஸ்ரயேல் மீதான விளைவு |
|---|---|---|---|
| *1* | வண்டுகள் போன்ற நீண்ட பொருளாதார மந்தமான காலம் | *1873-1890* | *1878,* அக்டோபரில் பாலஸ்தீனத்திற்கு திரும்புதல் துவங்கியது |
| *2* | மகா கொடிதான கொள்ளைநோயான* முதலாம் உலகப்போர்* | *1914-1918* | யூதர்களுக்கான பால்போர் பிரகடனம், *1917* நவம்பர். *02* |
| *3* | எரிபந்தமான கொப்புளங்களான மகா பொருளாதார மந்தமான காலம் | *1929-1939* | யூதர்கள் குற்றம் சுமத்தப்பட்டு, ஜெர்மனியில் இருந்து பாலஸ்தீனத்திற்கு தப்பிப் போயினர் |
| *4* | கல்மழையான* இரண்டாம் உலகப்போர்* | *1939-1945* | மத்திய ஐரோப்பாவிலிருந்து பாலஸ்தீனத்திற்கு யூதர்கள் தப்பிப் போயினர் |
| *5* | வெட்டுக்கிளிப்* போன்ற கிழக்கிற்கு எதிராக மேற்கு* | *1945-1989* | கிழக்கு ஐரோப்பாவிலிருந்து இஸ்ரயேலுக்கு யூதர்கள் தப்பிப் போயினர் |
| *6* | காரிருளான ஆழ்ந்த பொருளாதார மந்தமான காலம் | *?* | மேற்கு மற்றும் அமெரிக்காவிலிருந்து யூதர்கள் இஸ்ரயேலுக்கு தப்பிப் போயினர் |
| *7* | தலைப்பிள்ளை சங்காரமான* அர்மகெதோன்* | *?* | இஸ்ரயேலை காப்பாற்றக்கூடிய ஒரே தேவன் அவர்களை இரட்சிப்பார் |

### கடைசி ஏழு வாதைகள் மற்றும் அவைகளின் நோக்கமுள்ள விளைவுகள்

| | |
|---|---|
| 1. பூமியின் மேல் | "பாபிலோனை விட்டு வெளியே வா" |
| 2. சமுத்திரத்தின் மேல் | கிறிஸ்தவ சபை அமைப்புகளை சேதப்படுத்தியது |
| 3. நதிகள் மற்றும் நீரூற்றுகளின் மேல் சேதப்படுத்தியது | புரோட்டஸ்டன்ட் அடிப்படைவாதத்தை |
| 4. சூரியன் மேல் | புரோட்டஸ்டன்ட் தாராளவாதத்தை சேதப்படுத்தியது |
| 5. மிருகத்தின் சிங்காசனத்தின் மேல் | கத்தோலிக்கத்தையும், விசேஷமாக அதன் பாரம்பரியத்தையும் சேதப்படுத்தியது |
| 6. ஐப்பிராத் நதியின் மேல் | சமயப்பிரவற்ற சொத்துக்களை தேசதப்படுத்தியது |
| 7. ஆகாயத்தின் மேல் | ஜனங்களின் ஆதரவை அழித்தது |

# பாபிலோன் பாவங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு



David Rice

"மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது." (வெளிப்படுத்தல் *17:5*)

வெளிப்படுத்தல் மூன்று முக்கிய பிரிவுகளில் காணப்படுகிறது - சுவி சேஷ யுகம் (1-13 அதிகாரங்கள்), அறுவடை (14-19 அதிகாரங்கள்), மற்றும் இராஜ்யம் (20-22 அதிகாரங்கள்) இவை ஒவ்வொன்றிலும் நான்கு துணைப்பிரிவுகள் உள்ளன. புத்தகத்தின் ஒட்டுமொத்த திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒரு சிறிய முறிவு காணப்படுகிறது. அறுவடை சுவிசேஷ யுகத்தின் முடிவு பகுதியாக இருப்பதால், இந்த பிரிவுகளுக்கு இடையில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக (overlapping) காணப்படுகிறது.

**வெளிப்படுத்தலின் கட்டமைப்பு**

**சுவிசேஷயுகம்**

*முன்னுரை (அதிகாரம் 1)

*ஏழு ( கலசங்கள், முத்திரைகள், எக்காளங்கள்., அதிகாரங்கள் 2-11)

*உண்மையான ஸ்திரீயின் செயற்பாடு (அதிகாரம் 12)

*பொய்யான சபையின் செயற்பாடு (அதிகாரம் 13)

**அறுவடை**

*முன்னுரை (அதிகாரம் 14)

*ஏழு (வாதைகள், அதிகாரம் 15,16)

*பொய்யான ஸ்திரீயின் நியாயத்தீர்ப்பு (அதிகாரம் 17)

*பொய்யான சபையின் நியாயத்தீர்ப்பு (அதிகாரம் 18,19)

**இராஜியம்**

*முன்னுரை (அதிகாரம் 20)

*உண்மையான ஸ்திரீ உயர்த்தப்படுதல் (அதிகாரம் 21)

*புதிய எருசலேமைப் பற்றிய விவரங்கள் (அதிகாரம் 22)

*இறுதி (22 ன் முடிவு)

**வெளிப்படுத்தல் அதிகாரம் 17**

"ஏழு கலசங்களை உடைய ஏழு தூதர்களில் ஒருவர்", "திரளான தண்ணீர்கள்மேல் (ஜாதி ஜாதியான ஜனங்களை ஆதிக்கம் செலுத்தியது) உட்கார்ந்திருக்கிற மகா வேசிக்கு (போப் அமைப்பு).... வருகிற ஆக்கினையை உனக்கு காண்பிப்பேன் என்று சொல்லி", இந்த அதிகாரத்தை துவங்குகிறார். கலசங்களை கொண்ட "ஏழு தூதர்களும்" ஆலயத்திலிருந்து வெளியே வருகின்றனர். (வெளிப்படுத்தல் 15:6 ) இது 2நாளாகமம் 7:2 ம் வசனத்தில், சாலொமோனின் ஆலயத்தின் பிரதிஷ்டையின் போது உள்ள ஆசாரியர்களுக்கு ஒத்திருக்கிறது.

அறுவடையின் போது, நித்திரை அடைந்த பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலில், பிரதிஷ்டை செய்யும் அந்த காட்சி நிறைவடைகிறது. பரலோக மகிமையின் நிலையிலிருந்து தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் சபை வகுப்பை இந்த ஏழு தூதர்களும் அடையாளப்படுத்துகிறார்கள். "எழுதப்பட்ட நியாயத்தீர்பபை அவர்கள் பேரில் செலுத்தவும்...இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" (சங்கீதம் 149:7,9)

அறுவடையின் ஆரம்பத்தில் இருந்து, அந்த தீர்ப்புகள் தொடர்ந்து செயல்படுகின்றது. அந்த தீர்ப்புகள் முழுமையாக ஊற்றப்படும் போது, எல்லா பரிசுத்தவான்களும் திரைக்கு அப்பால் சென்றிருப்பார்கள். எனினும், முந்தைய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, அந்த தீர்ப்புகள் அறுவடையின் ஆரம்பத்திலிருந்தே செயல்பாட்டில் உள்ளன. ஏற்கெனவே எழுந்திருந்த பரிசுத்தவான்கள், கொஞ்ச காலத்திற்கு அவர்களோடு சேர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறார்கள்.

வெளிப்படுத்தல் 17:1 ல் சிறப்பிக்கப்பட்ட தூதன் யாராக இருக்கக்கூடும் ? அவர் தான் லவோதிக்கேயா சபைக்காலக் கட்டத்தில் அதை எழுப்புவதற்கு வழிகாட்ட வந்த தூதனாக இருக்கலாம், முடிந்த அளவிற்கு இரண்டாம் வருகையின் போதே வெளிப்படுத்துதல் அதன் தீர்க்கதரிசன கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. (வெளிப்படுத்தல் 1:10 ஒப்பிடவும்) வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இந்த தேவதூதர் ஏழாவது தூதனாக அல்லது சபையின் துாதனாக எங்காவது விவரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

**போப்பமைப்பு மறுபரிசீலனை**

இந்த ஸ்திரீயைப் பற்றிய வரலாறு முதல் 10 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மற்ற எட்டு வசனங்கள் அவளுடைய வீழ்ச்சியையும், துயரத்தையும் விவரிக்கிறது. ஒன்றிலிருந்து ஆறு வசனங்கள் அவளுடைய துயர் மிகுந்த காலத்தை விவரிக்கிறது. அவள் ஆவிக்குரிய பாபிலோனின் பங்கை நிறைவேற்றுவதால் அவள் "பாபிலோன்" என அழைக்கப்படுகிறாள். பண்டைய பாபிலோன், மாம்ச இஸ்ரயேலர்களை துன்புறுத்தி, சிறைபிடித்து சென்றது. ஆவிக்குரிய பாபிலோன் கி.பி 539 முதல் கி.பி 1799வரை உள்ள 1260 வருடங்கள்,ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை துன்புறுத்தி, சிறைபிடித்தது.

ஒருங்கிணைந்த ஜனங்களையும், அரசாங்கங்களையும் ரோம திருச்சபை ஆதீக்கம் செலுத்தியது. இது ஏழு தலைகளையும், 10 கொம்புகள் உள்ள ஒரு "மிருகத்தை" போல அடையாளப் படுத்தப்படுகிறது. "மிருகம்", அதன் தலைகளிலிருந்து வேறுபடுவது போல், அந்த மிருகத்தின் உடல், ஜனங்களை ஆதீக்கம் செய்த போப்பமைப்பு என்று தெளிவாக குறிப்பிடப்படுகிறது.

ஏழு தலைகளின் விளக்கம் சகோதரரகளிடையே வேறுபடுகிறது. இந்த ஏழு தலைகளும், சுவிசேஷ யுகம் முழுவதிலும் தன்னுடைய வல்லமையைச் செயலாற்றின. போப்பமைப்பிழ் கீழ் ரோம ஜனங்களை ஆட்சி செய்த ஏழு அரசாங்கங்கள் என்று நாம் புரிந்துகொள்கிறோம். இவர்கள் ஜஸ்டினியன், சார்லிமேன், ஓட்டோ தி கிரேட், சார்லஸ் V, நெப்போலியன், விக்டர் இம்மானுவேல் மற்றும் ஹிட்லரின் பாசிஸ் கூட்டணி என்று நாம் கருதுகிறோம்.

இந்த 10 கொம்புகள், சில காலம் ஏழு "தலைகளின்" பொதுவான தாக்கத்தின் கீழ் இருந்தாலும், அதற்குபின் சுயாதீனமாக, ஆட்சி செய்த ஐரோப்பாவின் வல்லமைகளை இது அடையாளப்படுத்துகிறது. இருப்பினும், ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளும் நவீன காலங்கள் வரை ஐக்கியப்பட்ட கட்டமைப்பை அடையவில்லை, தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. அவர்களில் சிலர் ஒரு பொதுவான நாணயம், யூரோவை பகிர்ந்து கொள்கின்றனர், மேலும் சில வகையான அரசியல் ஒன்றிணைவுகளுக்கு ஒப்புக்கொள்கிறார்கள். இந்த தீர்க்கதரிசனத்தின் இறுதி அனுபவங்கள் வரவிருக்கும் வரையில் இது அதிகரிக்கும் என்று நாம் நினைக்கிறோம்.

**வசனம் 10**

இந்த காட்சிக்கான நேரத்தை இது கருதுவதால் இந்த வசனம் முக்கியமானது. "அவைகள் ஏழு இராஜாக்களாம், (பரவலாக செல்வாக்குமிக்க இராஜ்யங்கள், ஒற்றை கொம்புகள் அல்லது தனிப்பட்ட மாநிலங்களிலிருந்து வேறுபடுகின்றது) இவர்களில் ஐந்துபேர் வி ழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை, வரும்போது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்கவேண்டும்.

இந்த விவரிப்பில் "தற்போதைய" காலம், 1874 ல் அறுவடையின் துவக்கத்தை குறிக்கக்கூடும் என்று நாம் எண்ணுகிறோம். வேசியின் அழிவு எதிர்காலத்தில் வைக்கப்படுகிறது. "...அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்." (வசனம் 16) அதே சமயம், சில வசனங்களுக்குப்பின், "மகா பாபிலோன் விழுந்தது...என் ஜனங்களே அவளைவிட்டு வெளியே வாருங்கள்." என்று வெளிப்படுத்தல் 18: 2,4ல் பரிசுத்தவான்கள் பாபிலோனிலிருந்து வெளியே வர அழைக்கப்பட்ட "தற்போதைய" ஒரு காலப்பகுதியைப் பற்றி விவரிப்பதாக பேசப்படுகிறது.

வெளிப்படுத்தலில் வரும் இந்த "கால அமைப்பு" வெளிப்படுத்ததுல் 1-9,10,12 ல் பரிந்துரைக்கப்பட்ட கால அமைப்பின் ஒரு நன்கு அறியப்பட்ட பயன்பாட்டோடு இது இசைவானதாக இருக்கும். "யோவானாகிய நான் ....கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன், அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்ததைக் கேட்டேன்...." இங்கு யோவான், கிறிஸ்துவின் பிரசன்னத்தின் போது, யுகத்தின் முடிவில் வாழ்ந்து கொண்டிருக்கும் விசுவாசிகளை அடையாளப் படுத்துகிறார். (யோவான் 21:22) "கர்த்தருடைய நாள்" (2பேதுரு 3:10 ஒப்பிட்டு பார்க்கவும்) இந்த விஷயத்தில் வெளிப்படுத்தல் 17:1 ல் சொல்லப்பட்ட தூதன், ஏழாம் தூதனை அடையாளப்படுத்தலாம்.

இது சரி என்றால், விக்டர் இம்மானுயேல் அறுவடை ஆரம்பத்தில் இருந்த ஆறாவது தலையாக இருந்திருக்க வேண்டும் அவர் 6வது நூற்றாண்டின் முதல் ஐக்கயிப்பட்ட இத்தாலியின் முதல் அரசர். (விக்கிபீடியா) ஏழாவது, ஒரு "குறுகிய இடைவெளிக்கு" மட்டுமே அதிகாரத்துடன் ஹிட்லரும் அவருடைய கூட்டாளிகளும், குறிப்பாக இத்தாலிய, முசோலினி, ரோமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்தனர். அதன் பின்னர் -

( "இருந்ததும் (பிரெஞ்சு புரட்சியில் தீவிரமாக செயல்பட்டது இராததுமாகிய (அறுவடை ஆரம்பத்தில் தொந்தரவாக இருக்கும்) மிருகமே (ஜனங்கள்) எட்டாவதானவனும், (ஒரு அரசியல் தலை அல்ல, மாறாக முன்னர் அவர்கள் மீது சவாரி செய்த வேசிக்கு எதிராக மக்களின் எழுச்சி)அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப் போகிறவனுமாயி ருக்கிறான்." இருந்ததும் (பிரெஞ்சுபுரட்சியில் செயல்பட்ட), இராததுமாகிய (அறுவடையின் துவக்கத்தில் செயல்பட்ட அல்லது தொல்லைக் கொடுத்த) மிருகமே (மக்கள்) எட்டாவதானவனும் (அரசியல் தலை அல்ல, முன்பு தங்கள் மேல் ஏறியிருந்த வேசியை உட்கொள்ளும் மக்களின் எழுச்சி), அவ்வேழிலிருந்து (நெப்போலியனின் காலங்களைநினைவூட்டுகிற ) தோன்றுகிறவனும் (பிற்பாடு), நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான்" ஒரு துடிப்பான, நாசகரமானசக்தியாக (வெளி 17:11)

12ம் வசனத்தின் 10 கொம்புகள் எழக்கூடிய இந்த ஜனங்களோடு இராஜாக்களாக "ஒரு மணிநேரம்" அதிகாரம் பெறுகிறார்கள். 13ம் வசனத்தில், இவர்கள் தங்களுடைய பலத்தை ஜனங்களின் எழுச்சிக்கு அளித்து வருகிறார்கள். இந்த நேரத்தில், "(வசனம் 16) இதுவே தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்று 17ம் வசனம் கூறுகிறது. 18ம் வசனம் ரோமாபுரியை குறிப்பிடுகிறது. "நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் இராஜாக்கள்மேல் இராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான்." ரோம் ஏழு மலைகளை கொண்ட பட்டணமாகும். (வசனம் 9)

**ஆட்டுக்குட்டியானவரோடு யுத்தம் செய்தல்**

ஏனெனில், போப் அமைப்புக்கு எதிரான இந்த நியாயத்தீர்ப்பில், "தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும்," (வசனம் 17) அவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள், ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி காத்தரும் இராஜாதி இராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார், என்று 14 ம் வசனத்தில் நாம் வாசிப்பது மிக ஆச்சரியமாக இருக்கலாம். கொம்புகளும், மிருகமும் தேவனுடைய கட்டளைகளைச் செய்தால், ஆட்டுக்குட்டியானவருக்கு எதிராகவும் அவர்கள் எவ்வாறு போர் செய்வார்கள்?

இந்நேரத்தில், மணவாட்டி வகுப்பினர் இயேசுவோடு மகிமையில் இருப்பார்கள். "இவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப் பட்டவர்களும், உண்மையுள்ளவர்களும் ஆவர்."(வசனம் 14) அப்பொழுது எசேக்கியேல் 38 மற்றும் 39ம் அதிகாரங்கள் நிறைவடையும். அதாவது இஸ்ரயேலுக்கு விரோதமாக கோகின் தாக்குதல். பெர்சியா (ஈரான்), எத்தியோப்பியா அல்லது கூஷ் (ஒருவேளை வடக்கு இஸ்லாமிய கருப்பர்கள் (ஆபிரிக்கா) அல்லது ஏமன் போன்ற பண்டைய கூஷ் பகுதியாக இருக்கலாம்) லிபியா, கோமர் மற்றும் டோஜர்மா (துருக்கி) ஆகியவை கோகின் கூட்டாளிகளாவார்கள்.

கோமரை கவனியுங்கள். யார் அவர் ? விக்கிபீடியா

(கோமர் கீழ்) பின்வரும் கருத்தை கொண்டுள்ளது. "டால்மட்டில் யோமா என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையின் படி, கோமர், நவீன ஜெர்மனியர்களான கோமர்மியர்களின் மூதாதையர் என அடையாளம் காணப்படுகிறது." மற்ற சாத்தியக் கூறுகளும் உள்ளன. ஆனால் டால்மடில் சொல்லப்பட்ட இந்த கருத்தைப் பின்பற்றினால், மேற்கு ஐரோப்பாவை பல நூற்றாண்டு முன்பிருந்தே, ஜெர்மானிய கோத்திரத்தார் குடியேறியிருப்பதை பார்த்தால், கோமர் மேற்கு ஐரோப்பிய கண்டத்தைக் குறிப்பதாக இருக்கலாம். (ஃபிராஞ்க்ஸ்"ம் கூட, பிரான்ஸின் பெயர் வந்தது அங்கிருந்து தான், ஒரு ஜெர்மானிய கோத்திரமே. ஐரோப்பிய ஒன்றியமானது, பிரிட்டிஷை வேராக கொண்ட மிக மேற்கில் உள்ள அமெரிக்கா மற்றும் வேறு பல நாடுகளை விடவும் பாலஸ்தீனியர்கள் என்று அழைக்கப்படுவோருக்கு பாரபட்சமாக உள்ளது. இஸ்ரயேல் ஏற்றுக்கொள்ள ஒன்றை தங்களது விருப்பத்தின்படி தீர்வாக திணிப்பதன் மூலம் கான்டினென்டல் ஐரோப்பா மத்திய கிழக்கில் பிரச்சனைகள் தீர்க்க பொதுவான காரணியாக ரஷ்யாவுடன் இணைக்கப்படலாம். மேலும் மேற்குலகின் அதிகாரங்கள் எதிர்க்கப்படும், ஆனால் வெளிப்படையாக இராணுவத்தில் தலையிடாது.

இஸ்ரயேல் பல ஜனங்களின் அனுதாபங்களை பெற்றிருந்தாலும், தேவையான நேரத்தில், ஒரே இரட்சகராகிய இயேசு, அதாவது அவர்களது மேசியா மட்டுமே அவர்களுக்காக இருப்பார். இந்த அர்த்தத்தில், ஐரோப்பிய ஒன்றியம், "ஆட்டுக்குட்டி" மற்றும் அவரது காரணம் ஆகியவற்றிற்கு எதிராகப் போரிடலாம். ஆனால் ஆட்டுக்குட்டியானது வெற்றிபெற்று, திரும்ப சீர்படுத்தப்பட்ட இஸ்ரயேலோடு இராஜ்யம் ஸ்தாபிக் கப்படும்.

**"ஒரு மணி நேரம்"**

வெளிப்படுத்தல் 17:12 ன் "ஒரு மணி நேரம்", மீண்டும் வெளிப்படுத்தல் 18:10 ல் சொல்லப்படுகிறது. "அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று: ஐயையோ! பாபிலோன், மகா நகரமே! பலமான பட்டணமே! ஒரு மணி நேரத்தில் உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள்." வெளிப்படுத்தல் 18ம் அதிகாரத்தின் விவரம், அறுவடை ஆரம்பத்திலிருந்து துவங்குகிறது.

அறுவடை காலத்தில் போப்பமைப்புக்கு துயரங்களும் பிரச்சனைகளும் உருவானபோதும், "ஏன் ஆச்சரியப்படுகிறாய் ? இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையுமுடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன்" (வசனம் 7) என்று தொடர்ந்து அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும், 8ம் வசனத்தில், மூன்று தீவிரமான துயரங்கள் சுருக்கமான காலப்பகுதியில், அதாவது "ஒரே நாளில்" இறப்பு, துக்கம் மற்றும் பஞ்சம் நேரிடும் என்று நமக்கு உறுதியளிக்கிறது.

பிறகு, "பூமியின் இராஜாக்கள்" அவள் கடந்து சென்றதற்காக புலம்புவார்கள். ஜனங்களின் தடுமாறும் கருத்துக்களுக்கு அவர்கள் வழிவகுத்திருக்கலாம், ஆனால் முன்னாள் காலத்தின் ஸ்திரத்தன்மைக்கு அவர்கள் ஏங்குவார்கள். மரணம், துக்கம் மற்றும் பஞ்சம் என்று அழைக்கப்படும் வாதைகளை, 15 மற்றும் 16ம் அதிகாரங்களின் ஏழு வாதைகளுடன் குழப்பிக்கொள்ளக்கூடாது. வெளிப்படுத்தல் 18ல் அவர்கள் எண்ணிக்கையில் ஏழாக இல்லாமல் மூன்றாக இருப்பர். வெளிப்படுத்தல் 16ல் வரும் ஏழாம் வாதையில் வரக்கூடியவற்றின் முன்று விரிவுரையாகும்.

பின்னாக பாபிலோனுக்கான புலம்பல், வெளிப்படுத்தல் 18:11-16ல் ஒரு நீண்ட விளக்கங்களை உள்ளடக்கியுள்ளது. இதை தொடர்ந்து அவளின் மரணம். "ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப்போனாள்!" (வசனம் 19). ஆயினும், அவளால் உபத்தரவப்படுத்தப்பட்ட பரிசுத்தவான்கள், "அவளைக்குறித்துக் களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே! என்று தூதன் சொன்னான்." (வசனம் 20)

21ம் வசனத்தில், கடலில் ஒரு பெரிய எந்திரகல் கடலில் வீசப்பட்டது. இது வரக்கூடிய திடீர் நியாயத்தீர்ப்புக்கு மற்றொரு உருவகமாகும். 22 மற்றும் 23ம் வசனங்கள் அதன் விளைவுகளை அடையாளமாக விவரிக்கிறது. பின்பு அவளுடைய மிகுந்த வேதனையுள்ள பாவங்களை 24ம் வசனம் தொகுக்கிறது - "தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான் களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான்."

**நமதுடைய பொறுப்புகள்**

தீர்க்கதரிசனத்தில் கிறிஸ்துவின் இலக்கு எங்கே குறிக்கப்பட்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும், அவரின் இலக்கோடு நமது அபிப்பிராயத்தையும் ஒன்றிணைக்கவேண்டும். கடந்த காலத்தில் நம் சகோதரர்கள் போப்பமைப்பின் கீழ் மிக கொடூரமாக உபத்திரவப்பட்டது போல நாம் துன்பப்படுவதில்லை. ஆனால் அவர்களின் இரத்தம் இன்னும் தரையிலிருந்து அழுகிறது.

பெயரளவிலான அமைப்புகளின் உழைப்பின் வழியாக இராஜ்யம் வராது. இஸ்ரயேல் தண்டிக்கப்பட்டு, மனந்திரும்பும், மீண்டும் கூட்டிசேர்க்கப்படும். அதன்பின், கிறிஸ்துவினால், இஸ்ரயேலில் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அந்த நேரத்தை நாம் எதிர்பார்த்து வாஞ்சிக்கிறோம்.

# ஒரு அற்புதமான மாற்றம் சமீபத்தில் உள்ளது



*Joseph Dolan*

"இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா. இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். " (வெளிப்படுத்தல் *19:1*)

சுவிசேஷ யுகத்தின் முடிவை பரிசுத்தவான்கள் எவ்வாறு காண்கிறார்கள் என்று இரண்டு அருமையான அதிகாரங்கள் விவரிக்கிறது. மனுக்குலத்திற்கு சாத்தியமாக நிறைவேற்றப்பட்ட சகலமும் தேவனுடைய மகிமைக்கு முன் விழுந்துபோனது என்று நம்முடைய கண்ணோட்டத்தில் காண்கிறோம். (ரோமர் 3:23 )வாய்வழி பாரம்பரியம், பதிவு செய்யப்பட்ட வரலாறுகள் மற்றும் தொல்பொருளியல் அனைத்தும், மனுக்குலம் நாகரீகத்தில் அடைந்த பல்வேறு தோல்விகளின் மைல்கற்களையும், காலத்தையும் வரலாறுகளையுமே சாட்சியிடுகின்றன.

ஜலப்பிரளயத்தின் காரணமாக முடிவுக்கு வந்துள்ள ஒரு உலகம் இருந்தது என்று வேத வசனங்கள் நமக்கு கற்பிக்கிறது. (2பேதுரு3:5-6 ) "முன்னிருந்த உலகத்தை" இரண்டு யுகங்கள் தொடர்ந்தது. அதில் தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை அனுப்புவதற்கு , ஒரு ஜனத்தை தேர்வு செய்து ஆயத்தப்படுத்தினார். இஸ்ரயேலின் மூப்பர்களால் இயேசு புறக்கணிக்கப்பட்ட போது அந்த காலம் முடிவுக்கு வந்தது. (ஆமோஸ் 3:2 , லூக்கா13:35 ) " கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். " (மத்தேயு 23:39 )என்று அந்த மூப்பர்களை பார்த்து இயேசு கூறினார்.

யூத தலைவர்கள் இயேசுவை நிராகரித்ததிலிருந்து கிட்டத்தட்ட 2,000 வருடங்கள் கடந்துவிட்டது, இப்போது சுவிசேஷ யுகம் விரைவில் முடிவதை நாம் காண்கிறோம். சுவிசேஷ யுகத்தின் முடிவிலும், ஆயிர வருட யுகத்தின் துவக்கத்திலும், தேவன் செய்யக்கூடிய காரியங்களை பற்றிய விரிவான தகவல்களை வெளிப்படுத்தல் 19-20ம் அதிகாரங்கள் நமக்கு வழங்குகிறது.

ஒரு அற்புதமான மாற்றம் மிக சமீபத்தில் உள்ளது!

**அதிகாரம் 19**

வெளிப்படுத்தல் 19ம் அதிகாரம் இவற்றை நமக்கு தெரிவிக்கிறது:

(1)தற்போதைய பூமிக்குரிய நிறுவனங்களின் மீது இறுதி தீர்ப்பின் நேரம் வந்துவிட்டது என்ற ஒரு பிரகடனம்,

(2)ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் முடிந்தது என்ற ஒரு பிரகடனம், மேலும்

(3)பூமியிலுள்ள தற்போதைய சமூக ஒழுங்கு எவ்வாறு முடிவடையும் என்பதற்கான ஒரு தீர்க்கதரிசனமும் அடையாளமான விளக்கமும்.

இது ஒரு மாற்றத்திற்கான நேரம் என்று வெளிப்படுத்தல் 19:1-6 அறிவிக்கிறது ! பாபிலோனின் அழிவை தொடர்ந்து, பரலோக சேனைகள், பரலோகத்தின் தேவனைத் துதிக்கிறார்கள். இறுதியாக எல்லாவற்றையும் மீட்பதற்கு நேரம் வந்துவிட்டது. பூமியை கெடுத்து, பரிசுத்தவான்களைக் கொன்ற பெரும் ஊழலுக்கு எதிராக தேவனுடைய நீதியான நியாயத்தீர்பபை இப்போது அனைத்து சிருஷ்டிகளும் காண்பார்கள். தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கும் எதிர்கால ஆசீர்வாதங்களுக்கான புகழ்ச்சியின் மற்றொரு சத்தம் கேட்கப்படுகிறது. வரவிருக்கும் யுகங்கள் முழுவதிலும் தொடர்ந்து தேவனை புகழ்வார்கள் ! (எபேசியர் 2:4-7)

தடையின்றி தந்தையின் பண்புகளை பிரதிபலிக்கும் சபை, நிறைவடைவதை யோவான் கண்டு தேவனை புகழ்கிறார். அல்லேலூயா, சிருஷ்டிகருக்கே புகழ் ! இது சிறியவன் முதல் பெரியவன் மட்டும், அனைவரும் தேவனை துதிக்கும் நேரம் என்று சிங்காசனத்திலிருந்து வந்த சத்தத்தை யோவான் கேட்டார். (எரேமியா 31:34 , ஏசாயா9:6-7 ) இடி முழக்கமாகவும், கடலத்தனையான பாடலான அல்லேலூயா என்பது இப்பொழுது அவரின் அனைத்து ஊழியக்காரர்கள், அவருக்கு பயப்படும், சிறியோர் மற்றும் பெரியோர்கள், பரிசுத்த பிரபஞ்சத்தில் உள்ள அனைவரிடமிருந்து தொனிக்கும்" (Streeter, page 549 [original V2, page 413], ரோமர் 8:19, சங்கீதம் 19:1-6)

இது மகிழ்வதற்கான நேரம் என்பதற்கான காரணத்தை வெளிப்படுத்தல் 19:7-10 விளக்குகிறது. ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் வந்துவிட்டது ! இயேசுவின் சபையாகிய அவருடைய மணவாட்டி நிறைவடைந்த காலத்திற்கு, "ஆட்டுக்குட்டியானவரின் திருமணமே" அடையாளமாக இருக்கிறது. அப்போது அவர் பரலோக மணிகளை முழுவதையும் தன்னுடைய களஞ்சியத்தில் சேர்த்திருப்பார். (யோவான் 14:2-3 ) ஒரு ஆவிக்குரிய குடும்பத்தையும், ஆபிரகாமுக்கு கொடுத்த அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் ஒரு

ஆசாரியத்துவத்தையும் வளர்ப்பதற்கான சுவிசேஷ யுகத்தின் நோக்கத்தை இப்போது அனைவரும் "பார்த்து" அல்லது கற்றுக்கொள்வார்கள். (1பேதுரு 2:9,10) இதற்காக தேவன் ஒரு உறுதிமொழி அளித்தார். (சங்கீதம் 110:4, எபிரெயர் 5:8-10) இப்போது அவருடைய சபை அழியாமையை பெற்றிருந்தது. அவர்கள் அவரைபோல் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலைகள் அவர்களை தொடர்ந்தது. (1யோவான் 3:2-3) இவர்கள் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள். இப்போது அவர்கள் மனுஷரை சொஸ்தமாக்கி, பாழடைந்த மனுக்குலத்தின் பாரம்பரியத்தை மீண்டும் நிலைநாட்டுவார்கள். (ஏசாயா 49:8)

ஆட்டுக்குட்டியானவரின் மனைவியை பின்பற்றுபவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், தேவனுடைய வார்த்தை மெய்யானது. இந்த திரளான ஜனங்கள் தங்களுடைய உரிமைகளை விட்டுகொடுத்து வாழ்ந்தவர்கள். கிறிஸ்துவின் இந்த சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டு, இயேசுவுக்கு உண்மையாகவும், ஆட்டுக்குட்டியானவர் எங்கே சென்றாலும், அவரை பின்தொடர்ந்து வரும்படி அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் இருந்ததைவிட விசுவாசத்தில் குறைந்தவர்களாக நிரூபிக்கப்பட்டார்கள். (வெளிப்படுத்தல் 14:4, சங்கீதம் 45:13-14, வெளிப்படுத்தல் 7:14)

இந்த காரியங்களை யோவானுக்கு காண்பித்த தூதனுக்கு முன்பாக அவர் பணிந்தார். "தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே " என்று மாற்கு 10:18ல் இயேசு சொன்ன வார்த்தைகள் நம் நினைவுக்கு வருகிறது. ஆகையால், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறதை நன்கு அறிந்த நாம் அவருக்கு முன் தாழ்மையோடு வணங்குவோம். (யாக்கோபு 1:17)

திருமணத்திற்குப்பின், கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் இந்த உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டு, தொடர்ந்து தேவனுடைய மகத்தான திட்டத்தை நிறைவேற்றுவதை யோவான் காணக்கூடிய ஒரு கட்டத்திற்கு வெளிப்படுத்தல் 19:11-16 நம்மை கொண்டுவருகிறது. இப்போது கிறிஸ்துவின் அப்போகாலிப்ஸ்கான (*apokalupsis*) நேரம், அவர் தன்னை தான் இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தும் காலம். லூக்கா 13:35 ம் வசனத்தின் கடைசி பகுதி இப்போது நிறைவேறும் போது, அவரை குத்தின இஸ்ரயேலர்கள் அவரை காண்பார்கள். (சகரியா 12:10)

அலங்கரிக்கப்பட்ட மகுடம் அல்லது தலையை சுற்றி அணியக்கூடிய ஒரு பரிவட்டம், ஆட்சித் தலைமை உரிமைக்கு அடையாளமாக இருக்கிறது. உலகின் இரட்சகராக இயேசு இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கான நேரம் இதுவே ! அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதித்ததினால் அவருடைய வஸ்திரம் "இரத்தத்தினால்" கறைபடிந்தது. (வெளிப்படுத்தல் 19:15) இப்போது எதிராளியை சரிக்கட்டுவதற்கு, யூதா கோத்திரத்தின் சிங்கத்திற்கு நேரம் வந்தது. (ஏசாயா 63:3, யூதா 14,15)

வேதவசனங்களினாலே, அவருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளை எல்லாரும் கேட்பதற்கு இதுவே காலம். தீமை அகற்றப்படும், இந்த உலகின் துவக்கத்திலிருந்து தேவனுடைய தீர்க்கதரிசிகளின் வாயிலிருந்து பேசப்பட்ட, தூய மொழியை புரிந்துகொள்வதற்கும், கீழ்ப்படிவதற்கும், ஜனங்களை தடை செய்யும் அனைத்து தடைகளையும், அவருடைய இருப்புகோல் நொறுக்கிப்போடும். (அப்போஸ்தலர் 3:21, சங்கீதம் 2:8, 9)

முந்தைய உலகின் "வெற்றியாளர்கள்" போல இந்த உலகம், கிருபையிலும் அறிவிலும் வளர்ந்து வரும் நிலையில், "இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா" (வெளிப்படுத்தல் 19:16 ) என்ற பெயரில் அவர்கள் இயேசுவை அறிந்துகொள்ளும். இந்த இராஜா பூமியில் உள்ள அனைத்து குடும்பங்களும் தாங்களே ஆசீர்வாதம் அடைய இயலச் செய்வார். (ஆதியாகமம் 12:3, 28:14 , 22:16-18)

வெளிப்படுத்தல் 19:17 ல் யோவான், "ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டார்". இது தேவனுடைய இராஜ்யத்தில் (மத்தேயு 13:43 ) சூரியனை போல பிரகாசிக்கிற, மகிமை அடைந்த சபை வகுப்பாரின் மற்றொரு அடையாளமாகும். இப்போது சுவிசேஷ யுகத்தை முடிவுக்கு கொண்டுவரும் மகா உபத்திரவ காலத்தின் உச்சக்கட்டத்திற்கான காலம். (ஒரு பதிப்பாசிரியர் வெளிப்படுத்தல் 19:17இல் வரும் "ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்" என்பது வாக்குத்தத்த உடன்படிக்கையின் மகனான இயேசுவைக் குறிக்கிறது என அறிவுறுத்துகிறார். அவர் மேலும் வெளிப்படுத்தல் 20 ஆம் அதிகாரம் நான்கு பாகங்களாக பிரிந்திருப்பதையும், ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சிக்கு தொடர்புடையதாகக் காண்கிறார் : (1-3) சாத்தான் கட்டப்படுதல். (4-6) முதலாம் உயிர்த்தெழுதல், (7-10) சாத்தான் சிறிது காலம் விடுதலையாக்கப்படுதல், (11-15) பொதுவான இரட்சிப்பு.)

ஒரு சரீரத்தை, மாம்சம் இயங்குவதற்கு உதவிசெய்யும், ஆனால் இப்போது உலகத்தின் அமைப்புகளை இயங்க செய்யும் "மாம்சம்", குறிப்பாக கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு எதிரானவைகள் அழிக்கப்படவேண்டும். மிருகம் மற்றும் கள்ள தீர்க்கதரிசிகள், உண்மை என்று கூறும், தவறான பிரகடனங்களை சத்தியம் (இயேசுவின் வாயிலிருந்து புறப்படுகிற இருபுறமும் கருக்கக்குள்ள பட்டயம்) முடிவுக்கு கொண்டுவரும். போப்பமைப்பும் அவளுடைய குமாரத்திகளும், அவர்களின் பிழைகள் மீது அனுதாபம் கொண்ட அனைவரும், முற்றிலும் அழிக்கப்படுவார்கள். (செப்பனியா 3:9)

அறுவடை காலம், இரண்டு வேலைகளை நிறைவேற்றும் என்று 19ம் அதிகாரம் காட்டுகிறது : அறுவடை செய்த கோதுமை மணிகளை மகிமைக்கும், பெயரளவிலான, "பூமியின் திராட்சை பழங்களை"

(வெளிப்படுத்தல் 14:19) தேவனுடைய கோபாக்கினை யென்னும் பெரிய ஆலையிலே போடுவதற்கும் அறுவடை செய்யப்படுகிறது.

**அதிகாரம் 20**

20ம் அதிகாரம் நம்மை முன்னோக்கி நகர செய்கிறது. 2016 ஜூன் மாதம், BibleStudents Daily.com என்ற பிரதியில் வெளியிடப்பட்ட " Revelation, A 2016 Perspective." ல் ஒரு அழகான சுருக்கம் காணப்படுகிறது.

"உண்மையான பிசாசும் மற்றும் அவனுடைய பொய்களின் மீது கட்டப்பட்ட அமைப்புகளாகிய அடையாளமான பிசாசும் கட்டப்படும் என்று 1-3 வசனங்கள் காட்டுகிறது. இவ்வாறு சமாதானமுள்ள இராஜ்யத்தின் வழியிலிருக்கும் எல்லா இடறல்களும் அகற்றப்படும். உண்மையான பிசாசை கட்டுவதற்கு மட்டும் அல்ல, மனித வாழ்க்கையை இவ்வளவு கடினப்படுத்தின இந்த மிருகத்தனமான அரசாங்கங்களின் தாக்கங்களையும் அழிப்பதற்கும் இதுவே காரணமாகும். (தானியேல் 2:35-44, சங்கீதம் 2:8,9, வெளிப்படுத்தல் 2:26,27 )

(1)கிறிஸ்துவோடு ஆட்சி செய்யும் உண்மையான சபைக்கான பரிசு, (2) ஆயிரவருட ஆட்சியின் முடிவில் இந்த உலகத்தை சோதிக்கும்படியாக, சாத்தானுக்கு கொடுக்கப்படும் கொஞ்ச காலம் - மனுக்குலத்தின் கல்வியின் காலம் முடிவுபெறும், (3) சாத்தான், அவனை பின்பற்றுபவர்கள், ஊழலான சமுதாயம் மற்றும் மத அமைப்புகள் நித்தியமாக அழிக்கப்படும்." என்று 4-11 வசனங்கள் காட்டுகிறது.

" மேசியாவின் ஆட்சியின் முடிவில், பூமியின் பில்லியன் கணக்கான ஜனங்களின் இறுதி தீர்ப்புகளை 12-15 வசனங்கள் காட்டுகிறது. தேவனுடைய பரிபூரண சட்டத்திற்கு முழுமையாக ஒத்துழைப்புடன் இல்லாத அனைவரையும் அழிக்கக்கூடிய இந்த நித்திய அழிவே, வரலாற்று நிகழ்வுகளில் கடைசி தீர்ப்பாக இருக்கும். "மரணமும், நரகமும் அக்கினி கடலில் தள்ளப்படும்..." (வெளிப்படுத்தல் 20:14 )"

திருமணத்தைத் தொடர்ந்து, இயேசுவும் அவருடைய மணமகளும் ஒன்றாக இருக்கிறார்கள். உயிர்த்தெழுந்த சபை, முதலாம் உயிர்த்தெழுதலின் விளைவாக இருக்கிறது. (வெளிப்படுத்தல் 14:4, யாக்கோபு1:17-18) அவர்கள் அழியாதவர்களாக, தேவன் இருக்கும் நிலையிலேயே, அவரை தரிசிப்பார்கள். ஒரு தலை சரீரத்தை நடத்துவது போல, இயேசு மகிமை அடைந்த சபையை நடத்துகிறார். அவர்களும் அவருடைய வழிக்காட்டுதலுக்காக காத்திருக்கிறார்கள். எல்லா தீமையின் மூலத்தையும் அகற்றுவதே முதன்மையான காரியமாகும், அதற்கான ஒரு நிலையும் தயாராக உள்ளது. இவ்வாறாக, ஏவாளை வஞ்சித்த பழைய பாம்பு 1000 வருடங்களுக்கு கட்டப்படுகிறது.

சுவிசேஷ யுக அறுவடையின் முடிவில், சபை நிறைவடைவதோடு, ஆறாயிர வருடங்களாக இருந்த பாவம், துக்கம் மற்றும் மரணம் முடிவடைந்து. அதை மேசியாவின் யுகம் பின் தொடரும். பாவத்தில் பிறந்த அனைவரும், மீண்டும் எழுந்து மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பதற்கான வாசல் திறக்கப்படும். (யோவான் 5:25-29) ஆதாமின் அனைத்து பிள்ளைகளுக்கும், இயேசுவின் ஈடுபலி (அனைவருக்கும்) இராஜ்யத்திற்கான நம்பிக்கையை அளிக்கிறது. (ஏசாயா 9:6)

தேவனுடைய பரலோகத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படும்படிக்கு, இயேசுவும் அவருடைய மணவாட்டியும் இந்த பூமிக்குரிய அவருடைய இராஜ்யத்தின் எல்லா காரியங்களையும் வழிநடத்துவார்கள். சபை முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதை நாம் காண்கிறோம். (வெளிப்படுத்தல் 14:4, யாக்கோபு 1:17-18) அவர்கள் அழியாமையைப் பெற்று, தேவன் இருக்கிறவண்ணமாகவே அவரை தரிசிப்பார்கள்.

7 ஆம் வசனத்தில், கொஞ்ச காலத்தில், மனித குடும்பத்திற்காக காத்திருக்கும் சோதனை அனுமதிக்கப்படும், ஆனால் அதற்குள்ளாக அனைவரும் தீமையின் விளைவுகளின் அனுபவத்தை பெற்றிருப்பார்கள். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் என்று நாம் வாசிப்பது போல பெரும்பாலானோர் நீதி வாசம் செய்யும் இராஜ்யத்தில் நித்தியமாக வாழக்கூடிய வாழ்க்கையை எதிர்நோக்குவார்கள். இயேசு வனாந்திரத்திலிருந்து வரும் போது, (மத்தேயு4:4,7,10) சோதனைக்காரனுக்கு பதில் அளித்த அதே விதத்தில், தேவனை பின்பற்றுபவர்களும் அவனுக்கு பதில் அளிப்பதற்கு இது சாத்தியமாக்கும். அதற்குபின், சாத்தானும் அவனுடைய தூதர்களும் "அக்கினி கடலில்" தள்ளப்படுவார்கள், அதாவது நித்தியமாக அழிக்கப்படுவார்கள். தீமையின் அனுமதி முடிவடையும், அதன்பின்னர் மீதமுள்ள நித்தியத்திற்கும் அது ஒரு கற்றுக்கொள்ளும் உரைகல்லாக இருக்கும்.

எல்லா சமூக மற்றும் ஆவிக்குரிய விவகாரங்களிலும் இயேசு தன்னுடைய மணவாட்டியோடு, முழு கட்டுப்பாட்டில் இருப்பதை இந்த பெரிய வெள்ளை சிம்மாசனம் காட்டுகிறது. இவர்களின் ஆட்சி பரிசுத்தத்தையும், தூய்மையையும், நீதியையும், நியாயத்தையும், சத்தியத்தையும், சமாதானத்தையும் பிரதிபலிக்கும். ஒரே வார்த்தையில், அன்பின் செயல், பூமி எங்கும் பரவிவிடும். (ஏசாயா 25:6- 9, மத்தேயு 25:31-46 )அந்நாளில், பழைய மற்றும் புதிய ஏற்பாடு எல்லா ஜனங்களிடமும் பேசும், மற்றொரு "புத்தகமும்" இருக்கும். இராஜ்யத்தை பொருத்த வரையில், ஒவ்வொரு நபரின் அனுபவங்களும், கிரியைகளையும் குறித்து ஒரு பதிவு (தேவனுடைய மனதில்) வைக்கப்பட்டிருக்கும். பிறகு, நமது தற்போதைய விசுவாசத்தின் வாழ்க்கையைப் போலல்லாமல், ஜனங்கள் தங்களுடைய விசுவாசத்தின் வளர்ச்சியை (அவர்களின் நடத்தையில் பரிபூரணத்தினால்) காட்டக்கூடிய திறனை மீண்டும் பெறும் அளவுக்கு சீர்பொருத்தப்படுவார்கள். ஆயிரவருட ஆட்சி (கிரியைகள்) இந்த உலகின் மனுக்குலத்திற்காக, சுவிசேஷ யுகம் (விசுவாசத்தினால்) சபைக்காக - முழு மனுக்குலத்திற்கு வருங்கால ஆசாரியத்துவம்.

அழிக்கப்படவேண்டிய கடைசி சத்துரு மரணம். (1கொரிந்தியர் 15:26 , வெளிப்படுத்தல் 21:4) பாவத்தின் சம்பளம் மரணமாகும். முதல் மரணம் ஆதாமின் பாவத்திற்கான தண்டனை. இரண்டாம் மரணம் ஒவ்வொரு நபரின் பாவத்திற்கான தண்டனையாகும். முதல் மரணம் ஒரு நித்திரை, அதேநேரத்தில் இரண்டாம் மரணம் நித்திய அழிவு. மரணம் (ஆதாமிடமிருந்து சுதந்தரிக்கப்பட்ட மரண நிலை) மற்றும் நரகம் அல்லது பாதாளம் (மரித்தோர் நித்திரை செய்யும் இடம்) அழிக்கப்படவேண்டும்.

எந்த ஒரு இரண்டாம் மரணத்திற்கு முன்னதாக, இரண்டாம் பாவம் இருக்கும். எந்த ஒரு இரண்டாம் பாவத்திற்கு முன்னதாக இரண்டாம் நியாயத்தீர்ப்புக்கான படிநிலை இருக்கும். எந்த ஒரு இரண்டாம் நியாயத்தீர்ப்புக்கு முன்னதாக இரண்டாவது வாழ்க்கை இருக்கும். அதாவது முதல் மரணத்திலிருந்து (ஆதாமின்) ஒரு நிவாரணம் இருக்கும். ஆயிரவருடத்தின் முடிவில், ஒவ்வொரு நபரின் கிரியைகளும் நன்கு அறியப்பட்டிருக்கும். அப்போது யார் ஒருவர் தங்களுடைய இருதயத்தில் பெருமையையும், சுயநலத்தையும் வளர்த்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் தேவனுடைய நீதியுள்ள இராஜ்யத்தில் இடம் பெறமாட்டார்கள். (2பேதுரு 3:11,13,17,18)

**காலம் சமீபம்**

நாம் இப்போது அறுவடைக்கு ஒரு அல்லது இரு தலைமுறைக்குள் வாழ்கிறோமா ? என் தாய், ஒரு குழந்தையாக இருந்தபோது, குதிரை வண்டிகளில் சவாரி செய்தாள். இன்று அவள் பாட்டியாக தன் பேரப்பிள்ளைகளோடு நார்வேவில் உள்ள உறவினர்களை சந்திக்க பறந்து சென்றாள். இன்று நம் பிள்ளைகளில் சிலர் விரைவில் உலகின் சுத்திகரிப்புகளையும் (அர்மகெதோன்) மற்றும் எல்லாவற்றும் திரும்பி கொடுக்கப்படும் காரியங்களை பார்க்கமாட்டார்களா ? நம் இலக்கை நோக்கி விரைந்து செல்ல முயலுவோம். எஞ்சியிருக்கும் காலத்தில் எல்லா விதத்திலும் தளரா ஊக்கம் காட்டுவோம். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கெடுக்க நாம் தகுதியுள்ளவர்களாக காணப்படுவதற்கு நாம் நம்மை துரிதப்படுத்துவோம். (லூக்கா 13:24, சங்கீதம் 150)

**வெளிப்படுத்தல் 21-22**

# ஆயிற்று



Joseph Ledwinka

"அவர் என்னை நோக்கி: ஆயிற்று, "(வெளிப்படுத்தல் *21:6*)

பரிசுத்த வேதாகமத்தின் கடைசி இரண்டு அதிகாரங்கள், தேவனுடைய இராஜ்யத்தின் இரண்டு அருமையான விளக்கங்களை கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் சமாதானம், நீதி, உயிர்த்தெழுதல், மறுசீரமைப்பு மற்றும் அனைத்து நாடுகளின் ஜனங்களை குணப்படுத்துவதற்கான நேரத்தை விவரிக்கிறது. இந்த அழகான பரந்த காட்சி, தேவனுடைய ஜனங்களின் மற்ற மிகுந்த நம்பிக்கைகள் அதாவது தேவனுடைய புத்திரர்கள் வெளிப்படுவதற்காக ஏங்கி கொண்டிருந்த நம்பிக்கைகளை (அறியாமலையே) படம் பிடித்துள்ளது. (ரோமர் 8:19)

தேவனுடைய நீதியினால் நிறைந்திருக்கும் ஒரு புதிய பூமி வாக்களிக்கப்பட்டுள்ளது. நன்மை தீமைக்கு இடையிலான வரலாற்றுப் போர் முடிந்துவிடும். ஒவ்வொரு மனித இருதயமும் நியாயமான, அன்பான, ஞானம் மற்றும் வல்லமையுள்ள சிருஷ்டிகரைப் பற்றிய முழுமையான மற்றும் துல்லியமான அறிவினால் நிரப்பப்படும். (1தீமோத்தேயு 2:4)

புதிய வானம், தேவனுடைய மகத்தான சிருஷ்டிப்பை கொண்டிருக்கும் - புதிதாக முழுமையான, அழிவற்ற புதிய சிருஷ்டியாகிய புதிய எருசலேம். சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகருக்கு கீழ்படிவதன் மூலமாக நெருங்கிய உறவைத் தேர்ந்தெடுக்கும் அனைவருக்கும் ஒரு பரிபூரணமான நித்தியமும் உள்ளது. (2பேதுரு 3:13)

ஆதாமின் கீழ்ப்படியாமையின் பாவத்திற்குபின், மனுக்குலத்தின் ஒவ்வொரு தலைமுறையினரும் பாவம் சார்ந்த சுயநலத்தினால் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்று, சுவிசேஷ யுகத்தின் முடிவில், அமைதியற்ற மனுக்குலம் முன்னிருந்ததை காட்டிலும் தேவனைவிட்டு மிகவும் விலகியிருப்பதை காண்கிறது.

ஒரு தேடலுக்கு பிறபாடு, ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்திற்காக காத்திருப்பதே, கர்த்தருக்குள்ளான விசுவாசிகளுடைய நம்பிக்கையின் நோக்கமாக ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்துள்ளது.(ஆதியாகமம் 22:18)

வெளிப்படுத்தல் 21

அடையாளமாள அர்த்தமுள்ள "கடல்" மறைந்துபோனதுப் போலவே, வெளிப்படுத்தல் 21:1 ல் மனுக்குலத்தின் அமைதியற்ற நிலை முடிவை குறிப்பிடப்பட்டுள்ளது. பாவத்தின் சாபத்தில் இருக்கும் அமைதியற்ற மனுக்குலத்தை குறிப்பிடுவதற்கு வேதாகமத்தில் பல இடங்களில் பொதுவாக கடல் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, "உபத்தரவத்தின் காலத்தை"(லூக்கா 21:5-36) பற்றி நம்முடைய ஆண்டவர் விளக்கும் போது, ஜாதிகள் மத்தியில் ஏற்படும் பெரும் கலக்கத்தைப் பற்றி பேசுகிறார். மனுஷருடைய இருதயத்தை ஆண்டு கொள்ளும் பயத்தையும், தேசங்கள் படும் வேதனைகளையும், "கடலின் கொந்தளிப்பின் முழக்கத்திற்கு " ஒப்பிட்டு பேசுகிறார். (லூக்கா 21:25, 26)

சங்கீதம் 46ல், மிகுந்த ஆபத்து காலத்திலும், பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும்" தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், அனுகூலமான துணையுமானவர்" என்று அடையாள மொழியில் ஒரு திடமான வாக்குறுதி மறுபடியும் உறுதிப்படுத்தப்படுகிறது. (சங்கீதம் 46:1-3 )

இருமனம் உள்ளவர்களை காற்றினால் அடிப்பட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாக யாக்கோபு விவரிக்கும் போது, இந்த விஷயத்தை இன்னும் துல்லியமாக விவரிக்கிறார். (யாக்கோபு 1:6) "துன்மார்க்கர், அமர்ந்திருக்கக்கூடாத கொந்தளிக்கும் கடலை போல் இருக்கிறார்கள்" (57:20)என்று ஏசாயா கூறுகிறார். வெளிப்படுத்தல் 21ன் துவக்கத்தில், அமைதியற்ற, இருமனம் உள்ள மனிதர்கள் (சந்தேகமுள்ள) இப்போது அமைதியாக இருக்கிறார்கள், ஏனெனில் "கடல்" இனி இருப்பதில்லை. (வெளிப்படுத்தல் 21:1 )

கடல் சென்றுவிட்டதால், இந்த புதிதான அமைதி நிலை, வரலாற்றில் மிகுந்த எழுச்சியூட்டும் நிகழ்வுக்கான அரங்கத்தை (மேடையை) அமைக்கிறது. புதிய சிருஷ்டியின் அறிமுகம் - அதிக தூய்மையான, அதிக மதிப்புமிக்க, அதிக புத்திசாலியான, மற்றும் இதுவரை காணாத அளவுக்கு பிரமிக்கத்தக்கதாக இருக்கும். இந்த மகத்தான சிருஷ்டிப்பை "புதிய எருசலேம்" என வெளிப்படுத்தல் 21:2 லிலும், "பரிசுத்த நகரம் (எருசலேம்)" என்று 10 ம் வசனத்திலும் பெயரிடப் பட்டுள்ளது.

புதிய எருசலேமை விவரிக்க, இந்த வசனங்கள் ஒவ்வொன்றும், ஒரு தனிப்பட்ட மற்றும் குறிப்பிட்ட உருவகத்தை வழங்குகிறது. 2ம் வசனம் "தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைபோல" விவரிக்கிறது. 1,44,000 பேர்களாகிய மணவாட்டி (வெளிப்படுத்தல் 14:1,3) தேவனுக்கும், ஆட்டுக்குட்டிய னவருக்கும், குற்றமற்ற முதற்பலன்களாக, கிறிஸ்துவோடு கூட அவருடைய பங்காளிகளாக ஆயிர வருடங்கள் ஆட்சி புரிவார்கள். (ரோமர் 8:17 , வெளிப்படுத்தல் 20:4) வியக்கத்தக்க ஒப்புரவாக்குதலின் வேலைகளை அவர்கள் பெற்றிருப்பார்கள். மேலும் அவைகளை செய்வதற்கு நம்பமுடியாத அளவுக்கு அதிகாரம் வழங்கப்படும். பேராவலுள்ள இந்த வேலை,

எடுக்கப்படும் முடிவுகள் மற்றும் தொடர்ந்து வரும் புதிய உண்மைகள், அனைத்தும் வெளிப்படுத்தல் 21:3-8 ல் அழகாக விவரிக்கப்படுகிறது.

புதிய எருசலேமை உருவாக்கிய ஒவ்வொரு நபர்களாகிய, பரிசுத்தவான்களின் அனுபவங்கள் மற்றும் அவர்களின் நற்பண்புகளைப் பற்றி புத்தகங்கள் எழுதப்படும். (மல்கியா 3:16)அவர்களுடைய நீதியும், தெய்வீகமான தனித்துவமான குணங்களும், அவர்களின் பாவத்தை விட்டொழிப்பதற்காக அவர்களின் சொந்த போராட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இது உலக மனுக்குலத்தின் பார்வைக்கு ஏற்றதாக இருக்கும். ஏனெனில், அவர்களின் சொந்த போராட்டங்களுக்கு சபையின் தயவு அவர்களுக்கு மிக அவசியமாக தேவைப்படும்.

வேறு ஒரு கண்ணோட்டத்திலிருந்து "புதிய எருசலேமின்" இரண்டாவது விளக்கம், வெளிப்படுத்தல் 21: 12-21 ல் விவரிக்கப்பட்டுள்ளது. புது சிருஷ்டியின் அங்கமாக இருக்கும் ஒவ்வொரு தனிநபரையும் எமது சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர் எவ்வளவு மதிப்பளிக்கிறார் என்று இந்த வசனங்கள் விவரிக்கிறது. யெகோவா தேவனின் புதிய எருசலேமை காட்சிப்படுத்த பயன்படுத்திய மகிமையான உளக்காட்சியின் பயன்பாடு, தன்னுடைய தெய்வீக குடும்பத்தின் பேரில் அவர் வைத்துள்ள அளவில்லாத அன்பு மற்றும் ஆழ்ந்த பராமரிப்பிற்கு ஆதாரமாகியது.

புதிய எருசலேமின் வடிவம் சதுரமாக இருந்தது, அதின் ஒவ்வொரு பக்கங்களும் பன்னீராயிரம் ஸ்தாதியாக இருந்தது. (வெளிப்படுத்தல் 21:16) அதனுடைய மதில்கள் 144 முழமாயிருந்தது. (வசனம் 17) மற்றும் நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாயிருந்தது. (வசனம் 18)அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது. (வசனம் 11) நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (வசனம் 19) நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது. (வசனம்23)

அதின் விகிதாசாரத்தை புரிந்துக்கொள்ள, உலகில் உள்ள தங்கத்தினுடைய அளவின் மிகுந்த தாராளமான அளவீடோடு இதில் பயன்படுத்தின தங்கத்தின் அளவினையும் ஒப்பிட்டுப்பார்க்கலாம். ஆறு கால்பந்து மைதானத்தில் ஒவ்வொன்றிலும் 18 அங்குலம் அளவிற்கு சொக்கத்தங்கம் நிரப்ப போதுமான அளவு தங்கம் இந்த உலகில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாறாக, புதிய எருசலேம் பூமியின் முழு மேற்பரப்பையும் ஒரு 18 அங்குல (1அலகு) அடுக்கை மூடுவதற்கு போதுமான தங்கத்தைப் பெற்றிருப்பதாக உள்ளது, அநேகமாக, இந்த மாபெரும் சதவிகிதமானது, அந்த அடையாள நகரத்தில் இருக்கப் போகும் தனிநபருக்காக மற்றும் மனுக்குலத்தை இரட்சிக்கவும் திரும்பவும் பரம பிதாவோடு மனந்திரும்பி ஒப்புரவாக்குதல் என்னும் அவர்களின் வேலைக்காக நமது பரம பிதா வைக்கப்போகும் உன்னத மதிப்பு மற்றும் மகிமை ஆகும். முழு மனுக்குலத்தை இரட்சிப்பதை செய்து முடிக்க வல்லவர்களாய் அவர்கள் உருவாக்கப்பட்டதின் அவர்களின் கிரியைகள் மதிப்பு மற்றும் அழகில் அடங்கும்.

நகரத்திலிருந்து பிரகாசிக்கும் அந்த நிரந்தரமான ஒளி, வனாந்தரத்தில் இஸ்ரயேலின் ஆசரிப்பு கூடாரத்தின் ஷெக்கினா மகிமையை நமக்கு நினைவூட்டுகிறது. வழிநடத்தக்கூடிய இந்த ஒளி, பூர்வ இஸ்ரயேலை, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் மட்டுமே வழிநடத்தினாலும், புதிய எருசலேமின் ஒளி (உலகத்தை வழி நடத்தும் ஒளி) அமெரிக்காவின் பாதி அளவான இடம் பரப்பின் மீது பிரகாசிக்கும் ! அப்போஸ்தலர் யோவானின் தரிசனத்தில், இந்த அருமையான ஒளியானது நகரத்தின் பொற்சுவர்களின் ஊடாக, மகிமையுடன் முடிவில்லா பலவருணங்களோடு அலை அலையாக வந்தது. நகரத்தின் ஆதாரத்தை அலங்கரித்த விலைமதிப்பற்ற கற்களின் மேல் பிரதிபலிக்கப்பட்டு வந்த அந்த பிரகாசத்தையும் வண்ணங்களின் வேறுபாடுகளையும் சற்றே யோசித்துப்பாருங்கள்!

புதிய எருசலேமின் சித்திரத்தில், மனிதகுலம் புரிந்துகொள்ள முடியாத அளவான பூமியின் மிக மதிப்பு வாய்ந்த வளங்களை தேவன் குவித்திருந்தார். இந்த எழுச்சியூட்டும் தரிசனம், ஒப்புரவாக்குதலின் உன்னத கிரியைகளோடு சேரும் போது, இந்த குறிப்புகளெல்லாம், புதிய எருசலேமின் உறுப்பினர்களுக்காக காத்திருக்கும் அற்புதமான மகிமையின் சிறு காட்சியின் தடயத்தையே நமக்கு கொடுக்கிறது. அப்போஸ்தலர் பவுல் நமக்கு நினைவுகூருவது யாதெனில், "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்க ஆயத்தம் பண்ணினவை களைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை".(1கொரிந்தியர் 2:9)

**வெளிப்படுத்தல் 22**

கிறிஸ்து மற்றும் அவருடைய மணவாட்டி செய்யக்கூடிய மறுசீரமைப்பு வேலைகளைப் பற்றியும், ஒப்புரவாக்குதலைப் பற்றியும் வெளிப்படுத்தல் 22ம் அதிகாரம் தெளிவாக விவரிக்கிறது. புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் உண்மையுள்ளவர்கள் என்று பரலோகத்தில் அவர்கள் நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடு காணப்பட்டபின், வெளிப்படுத்தல் 21-22ல் விவரிக்கப்பட்ட இந்த அற்புதமான ஒப்புரவாக்குதலின் வேலை துவங்கும். அந்த தூதன், "ஜீவ தண்ணீர் ஓடும்" அடையாளமாக ஒரு நதியை யோவானுக்கு காண்பித்தார். அது ஆதாமின் மரண சாபத்திலிருந்து அனைவரையும் விடுவித்து, முழுமையாக தேசங்களை குணப்படுத்தியது. மனுக்குலத்தை குணப்படுத்துவது என்பது, ஒவ்வொருவருடைய கண்ணிலிருந்தும் கண்ணீரை துடைப்பதும் அதில் அடங்கும். இனி மரணமுமில்லை, துக்கமுமிலலை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை. (வெளிப்படுத்தல் 21:4)

இத்தகைய மகிமையான தரிசனத்தில், பாவத்தில் ஊறிக்கொண்டிருந்த, வரலாற்றின் தொடர்ச்சியான துயரங்களின் தலைகீழான மாற்றம், அதாவது அற்புதமாக உலகளாவிய அளவில் ஏற்படும் மாற்றங்களை ஏற்படுவதை கண்ட யோவான், இந்த தரிசனத்தை காண்பித்த தூதனை வணங்கும்படிக்கு இரண்டு முறை அவர் பாதத்தில் விழுந்தார். (வெளிப்படுத்தல் 19:10, 22:8)


அந்த தூதனை யோவான் ஏன் வணங்கினார் ? ஒருவேளை அவர் தரிசனங்களின் மகிமையால் மூழ்கியிருக்கலாம் அல்லது தேவனுடைய மகத்தான திட்டத்தை காணக்கூடிய பாக்கியத்தை அவர் பெற்றிருந்ததால், அவருடைய நன்றியுணர்வை அவர் இப்படியாக வெளிப்படுத்தியிருக்கலாம். இரண்டு முறை தேவதூதனை வணங்குவதன் மூலம் யோவான் இந்த தவறை செய்தார். இந்த தவறு, அதற்கான தூதனுடைய திருத்தம், இவ்விரண்டுமே, ஒப்புரவாக்குதலின் அற்புதமான செய்தி நம் அனைவரின் கவனத்தை பெற தகுதியுள்ளது, மாறாக அதை கொடுக்கும் தூதுவர்களை அல்ல என்ற ஒரு அறிவுரை அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுக்கப்படலாம்.

இருமுறை தேவதூதன், பரலோக தகப்பனை வணங்கும்படி யோவானை வழிநடத்தினார். இப்படியாக நாமும் தூது கொடுக்கக்கூடிய தூதுவர்களை வணங்குவோமானால், இது நமக்கும் ஒரு தெளிவான நினைவூட்டலாக இருக்கட்டும். புது சிருஷ்டியின் அங்கத்தினராக மாறக்கூடிய வாய்ப்புள்ள காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக நாம் இருக்கிறோம் ! இந்த வாய்ப்பு இனி ஒருபோதும் வழங்கப்படமாட்டாது.

சபை நிறைவடைந்தவுடன் "முடிந்தது" என்று இயேசு அறிவித்தார். "எல்லாம் முடிந்தது" என்று அவர் சிலுவையின் மீது சொன்ன வார்த்தைகளுக்கு ஒத்திருக்கிறது. (யோவான் 19:30 ) இந்த மகிமையான அறிவிப்பை நம்முடைய கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்து அறிவிக்கும்போது, நாம் அவருடைய பிரசன்னத்தில் இருக்கும்படியாக, நம்முடைய அழைப்பில் உண்மையோடு, சர்வ ஜாக்கிரதையோடு முன்னேறுவோம் !

கூட்டவோ குறைக்கவோக்கூடாது

# ஆலோசனையின் முடிவு



Leonard Griehs

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்." (வெளிப்படுத்தல் *22:21*)

வெளிப்படுத்தலின் இறுதி வார்த்தைகள் ஒரு அறிவுரையையும், ஒரு ஆசீர்வாதத்தையும் கொண்டுள்ளது. யோவானின் கடுமையான எச்சரிப்பு, வேதாகமத்தின் இறுதி புத்தகத்தோடு இணைக்கப்பட்ட இந்த முக்கியத்துவத்தை காட்டுகிறது. "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்." (18,19 வசனங்கள்)

சிலர் யோவானின் இந்த எச்சரிப்பு முழு வேதாகமத்துக்கும் பொருந்தும் என கோருகின்றனர், ஆனால் அது சாத்தியமில்லை, ஏனெனில், வேதாகமத்தின் 66 புத்தகங்களும் அவைகள் எழுதப்பட்டு நெடுநாள் பிறகு தான் ஒரே சாட்சியாக தொகுக்கப்பட்டது. இந்த "புத்தகம்" என்று ஒருமையில் சொல்லப்பட்ட வார்த்தையானது, இந்த தரிசனத்திற்கும், தீர்க்கதரிசனத்திற்கும் மட்டுமே யோவான் குறிப்பிட்டார் என்று பொருள்படுகிறது. பத்மு தீவில் யோவான் அவருடைய வெளிப்பாட்டிற்கு பிறகு அல்லது நெருங்கியோ அவரது சொந்த நிருபத்தை எழுதியிருக்கவேண்டும். "நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் ","நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம். (உபாகமம் 4:2, 12:32 )என்ற மோசேயின் நியாயப்பிரமாணத்தை இந்த எச்சரிப்பு எதிரொலிப்பது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

நியாயசாஸ்திரிகளாகிய நியாயப்பிரமாணத்தை போதிப்பவர்கள் மேல் வரும் நியாயத்தீர்ப்பை இயேசு அறிவித்தபோது, பிரமாணத்தோடு "சேர்த்திருக்கும்" இருக்கும் அர்த்தத்தை இயேசு அடையாளம் காட்டினார். "அதற்கு அவர்: நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, சுமக்க அரிதான சுமைகளை மனுஷர்மேல் சுமத்துகிறீர்கள்; நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச் சுமைகளைத் தொடவும்மாட்டீர்கள்" (லூக்கா11:46)

வெளிப்படுத்தலின் தரிசனம், ஒரு விசேஷித்த தூதன் வழியாக நம் பரலோக தந்தையிடமிருந்து நேரடியாக இயேசுவின் வழியாக யோவானுக்கு ஒளிபரப்பப்பட்டது. (வெளிப்படுத்தல் 1:1) முன்னதாக, அவர் திரும்பி வருவதைப் பற்றி கேட்டபோது, இரண்டாம் வருகையின் காலத்தை பற்றி இன்னும் அவர் அறிந்திருக்கவில்லை என்று இயேசு சொன்னார். (மாற்கு 13:32) ஒருவேளை இயேசு தானியேல் புத்தகத்தை மனப்பாடமாக அறிந்திருப்பார் என்பதற்கான முக்கிய குறிப்பாக இது இருந்தது. ஆயினும் இன்று, முடிவு காலத்தை பற்றியும் இயேசுவின் இரண்டாம் பிரசன்னத்தை பற்றியும் புரிந்துகொள்வதே இன்று நம்முடைய ஆதாரமாக இருக்கிறது. அவர் மகிமை அடைந்தபின், சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு கொண்டு செல்லும் நிகழ்வுகள் மற்றும் அதன் காலத்தை பற்றிய புரிந்துகொள்ளுதல் இயேசுவுக்கு முழுமையாக கொடுக்கப்பட்டது. இதை இங்கு, அவர் யோவான் மூலம் பகிர்ந்துகொள்கிறார். பரிசுத்தவான்கள் விளக்குவதற்கும், நீடிய பொறுமையோட காத்திருப்பதற்கும் மற்றும் தீர்க்கதரிசியாகிய ஆபகூக் (2:3)விவரித்த முடிவில்லா தாமதித்தலின் காரணத்தை புரிந்துகொள்வதற்கும் இந்த செய்தி மிக உதவியாக இருக்கும். இதற்கு இடையில் சென்று மாற்றத்தை ஏற்படுத்தக்கூடாது!

### மோசம் போக்கும் முயற்சிகள்

புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களின் ஒருங்கிணைந்த வெளியீட்டிற்கு முன்பு, அப்போஸ்தலர்களின் நூல்கள் தனித்தனியாக சபைகளில் விநியோகிக்கப்பட்டது. என்றாலும், இயேசுவின் சீஷர்களுக்காக தனிப்பட்ட கடிதங்கள் மற்றும் எழுத்துக்களின் தொகுப்பை யெகோவா தேவன் ஏற்பாடு செய்வார் என்பதை பேதுரு அறிந்திருந்ததை போல் தோன்றுகிறது. (2பேதுரு 3:15,16)

அத்தகைய பட்டியல்களில் முதன்மையானது தி முராடோரியன் ஃபிராக்மென்ட், (The Muratorian Fragment) அதில் 170 கி.மு வரை எழுதப்பட்ட ஆவணம் அடங்கியுள்ளது. மத்தேயு, மாற்கு, எபிரெயர், யாக்கோபு, 1பேதுரு மற்றும் 2பேதுரு மற்றும் 3யோவான் புத்தகங்களோடு வெளிப்படுத்தலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தகமாக தோன்றுகிறது. விட்டுவிடப்பட்ட பகுதிகள், கிழிந்த துண்டு பகுதியில் பட்டியலிடப்பட்டிருக்கலாம். கி.பி 193ல் "புதிய ஏற்பாடு" என்ற வார்த்தை முதல் முறையாக அறியப்படாத எழுத்தாளரின் படைப்புகளில் தோன்றுகிறது.

யூதா, 2பேதுரு, எபிரெயர் மற்றும் வெளிப்படுத்தல் ஆகிய சில கடிதங்கள் சுழற்சியிலிருந்து நீக்கப்பட்டதாக 4ம் நூற்றாண்டில் யூசிபியஸ் (Eusebius)எழுதினார். புதிய வெளிப்பாடுகள் அவர்களிடம் வந்துள்ளன என்று நாஸ்டிஸ் (Gnostics) குழுவின் கூற்றுக்களை யூசிபியஸ் விவாதித்தார். இந்த வாதங்களை எதிர்ப்பதற்கு, மற்றொரு கிறிஸ்தவ எழுத்தாளர் அத்தனசியஸ் கி.பி 367 ல் தனது 39 வது கடிதத்தை (paschal letter) வெளியிட்டார், அதில் அவர் எமது தற்போதைய புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் உள்ளது என்று எழுதியிருந்தார். கி.பி 382 ல் ரோமானியரால் அத்தனசியஸின் பெயரால் அந்த கிறிஸ்தவ சட்டம் நியமிக்கப்பட்டது மேலும் கி.பி 405 ல் போப்பமைப்பின் பிரகடனத்தால் அது உறுதி செய்யப்பட்டது. இந்த புத்தகங்களின் நிலைப்பாட்டை தீர்மானிப்பது போப்பின் வேலை இல்லை. ஆரம்பகால சபையில், இந்த எழுத்துக்களின் மேல் உள்ளார்ந்த அதிகாரத்தையும், வல்லமையையும் பெற்றிருந்ததாக சாட்சிப்பெற்றவர்கள் இதற்கான முடிவுகளை எடுத்தார்கள்.

"எந்த இடைக்கணிப்புகளாலும் அல்லது மாற்றங்களினாலும் இந்த புத்தகம் சிதைக்கப்படுவதற்கு எதிராக அதை பாதுகாப்பதற்காக (யோவானின்) அச்சுறுத்தும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த அச்சுறுத்தல், நிச்சயமாய், முதன் மூலப்பிரதியாக அப்போஸ்தலர் யோவான் மூலமாய், எவர்களுக்கு கொடுக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்ட ஏழு சபைகளுக்கு கொடுக்கப்பட்டதோடு தொடர்புடையதாய் உள்ளது. திருத்தி எழுதும்போது, வேவ்வேறு மூல பிரதிகளில் இடைக்கணிப்புகள் உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதில் எந்த சந்தேகமும் இல்லை, மேலும் சிலகாரியங்கள் விடப்பட்டும் இருக்கலாம். முன்னது, தற்போது புழக்கத்தில் உள்ள பழைய மூலப்பிரதியோடு ஒப்பிட்டுப் பார்த்து நிரூபித்தது. நடைமுறையில் உள்ள கிங்ஜேம்ஸ் மொழிபெயர்பான பொதுவான பதிப்பு பழைய மூலப்பிரதியோடு சார்ந்து எழுதப்படவில்லை. .. எச்சரிக்கையின் வார்த்தைகள் வெளிப்படுத்தல் புஸ்தகத்திற்கு தான் பொருந்தும், ஆனாலும் அந்த கொள்கையானது முழு முழு வேதாகமத்திற்கும் மிகச் சரியாக பொருந்தி வரும் (page 725, 2016 edition) ஆல்பர்ட் பார்னஸ் என்கிற வேதாகம உரையாசிரியர், எழுதுகிறார் - "சில நபர்கள் சில பகுதிகளை பொருத்தமற்றது என நீக்க எத்தனிக்கலாம், அல்லது அந்திக்கிறிஸ்து பற்றி விளக்கும் பகுதிகளை இன்னும் எதிர்க்காலத்திற்குரியதாய் இருக்கும்போது, எவர்களுக்கு அது ஒத்துப்போகிறதோ, பரிசுத்த தொகுதியிலிருந்து அதை அப்புறப்படுத்தி நீக்கி விடவோ, அல்லது அதை கெடுத்துவிடவோ செய்யலாம் என யோவான் உணர்ந்திருக்கக்கூடும்"

நமது நாட்களில் கூட, சில கிறிஸ்துவ குழுக்கள், வெளிப்படுத்தலை கள்ளப்போதனை என நிராகரிக்கின்றனர். "கிறிஸ்துவர்கள் கடைசிக் காலராப்ட்சர் கோட்பாடுகள் பற்றியோ,அந்திக்கிறிஸ்து பற்றியோ, அர்மகெதோன் பற்றியோ சிந்திக்காமல் ஒருபுறம் வைத்துவிட்டு, அனுதினமும் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்ற கவனம் செலுத்த வேண்டும்.. புதிய ஏற்பாட்டின் முதல் இருபத்தியாறு புத்தகங்களோடு வெளிப்படுத்தல் புத்தகத்தோடு ஒப்பிட எண்ண வேண்டாம்.. "வெளிப்படுத்தல்" - ஐ கவனமாய் படிக்கும்போது, அது முன்னிருந்த இருப்பதியாறு புத்தகங்களோட மறுத்துரைப்பதாய் உள்ளது. அவ்வாறு, அது இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் கருத்துகளுக்கு எதிராக போதிப்பதால் அது கள்ளப்போதனையாகும்.. பெரும்பாலும் பத்மோசில் யோவான் கண்ட மாயத்தோற்றம் அனைத்தும் இயேசுவின் வார்த்தைகள், வழிகள் மற்றும் போதனைகளில் சுவிசேஷத்திற்கு எதிராக உள்ளது. (*www.paradisecafediscussions.net/ showthread.php?tid=2367*) இந்த ஆய்வறிக்கை பொய்யானது, ஏனெனில், வெளிப்படுத்தல் உண்மையானது.

## வெளிப்படுத்தலின் விளக்கங்கள் புத்தகத்தோடு சேர்ப்பதா?

"இந்த கருத்து ஆதாரப்பூர்வமாக உள்ளதென்று என்று நாங்கள் நம்புகிறோம் - யாதொருவன் வெளிப்படுத்துதலின் வாக்கியங்களைத் திரித்தோ, அங்கு சொல்லப்படாத மற்றும் உளங்கொளாத கருத்துக்களை அவ்வாக்கியங்களின் அர்த்தங்களோடு இணைத்தாரானால், அல்லது பரிசுத்தமற்ற முறைகளால் அதினின்று எடுத்துப் போட்டாரானால், அதின் தாக்கத்தையும் அதின் செய்திகளையும் குதர்க்கமாக அர்த்தப்படுத்த நேரிடுகிறது. பல தெளிவுரையாளர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளான - தவறாக அர்த்தங்கொள்ளவும் அப்போஸ்தல செய்திகளை தவறாக பொறுத்தி, அழகான சத்தியங்களை கணிசமான அளவிற்கு பாழ் செய்து, அதினால் அனுமதியில்லாத விளக்கங்களும் முடிவுகளும் எடுக்க நெரிட்டதற்ச குற்றமுள்ளவர்களாய் உள்ளனர்" என்று சகோ. ஸ்ட்ரீ எழுதுகிறார்.(ஆப்சிட், பக்கம்726, 2016 பதிப்பு)

யுகத்தின் முடிவில் வாழும் சகோதரர்களுக்கு, வெளிப்படுத்தலின் சரியான தெளிவுரை முக்கியமாகவுள்ளது என்று பாஸ்டர் ரசல் கருதினார் என்பது ஆதாரப்பூர்வமாக உள்ளது. 1909 இல், வெளிப்படுத்தல் 20 - ஐ பற்றி ஒரு கேள்வி கேட்கப்படடபோது, "வெளிப்படுத்தலில் சில விஷயங்கள் என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை, அதினால் தான் நான் ஏழாம் தொகுதியை (வேதாகம ஆய்வுகள்) எழுதவில்லை. அதினால் நான் எந்தவித அனுமானங்களையும் கொடுக்க விரும்பவில்லை. எப்பொழுது நான் வெளிப்படுத்தல் புத்தகத்தைப் பற்றிய ஏழாம் தொகுதியை எழுதப்போகிறேனோ, அப்புத்தகத்தைப் பற்றிய திருப்திகரமாகமானபுரிதலை பெற்றிருப்பேன். அதுவரைக்கும், நான் எழுதப்போவதில்லை." என்று அவர் கூறுனார். (பாஸ்டர்ரசல் என்ன கூறினார், பக்கம்645)

பாஸ்டர் ரசல் அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து, வாட்சடவரின் புதிய பதிப்பாசிரியர் நிறைவுற்ற இரகசியம் என்பதை பதிவிட்டார், பாஸ்டர் ரசல் அவர்களின் மரணத்துக்குப் பின்னான வேலையான, இதுதான் ஏழாம் தொகுதி என்று கூறினார். ஆனால், அதன் உள்ளடக்கங்கள் வெளிப்படுத்துதலின் சின்னங்களைப் பற்றின மேம்பட்ட விளக்கமல்ல. உதராணமாக, எவ்வகையான நாட்டுப்பற்றும் (கொடியை பறக்கவிடுதல் உதாரணமாக) தவறான நம்பிக்கையும் மற்றும் கொலைக்கு சமம் என்றும் அப்பதிப்பு கூறியது - இது பாஸ்டர் ரசல் என்றும் கூறவில்லை. இந்த புத்தகம் கனடா

அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. மற்றும் 1918 இல், அமெரிக்க அட்டர்னி ஜெனரல் வாட் கிரி கோரிநிறைவுற்ற இரகசியத்தை "ஆபத்தான பிரச்சார உதாரணங்களின் ஒன்றாகும்.. .. மிகவும் அறுதியான மத மொழியில் எழுதப்பட்டதும் அதிகபட்டியான எண்ணிக்கையில் விநியோகிக்கப்பட்டதுமாகும்." என்று கண்டனம் செய்தார், பல வேத மாணவர்கள் இந்த சமயத்தில் வாட்ச்டவரில் இருந்து தங்களை விடுவித்துக்கொண்டனர்.

அநேகமாக, மற்றெல்லா புத்தகத்தை விடவும் - அண்மை வருடங்களில், வெளிப்படுத்தலுக்கான அநேக விளக்கவுரைகள் தனிப்பட்ட வேத மாணவர்களிடமிருந்து வந்துள்ளது. தேவச்செய்திகளும் தீர்க்கத்தரிசன பயன்பாடுகளும் மாநாடுகளிலும் வேத மாணவர்கள் பத்திரிகைகளிலும் அடிக்கடி தோன்றியுள்ளன. இவையனைத்தும், தற்கால சத்திய வெளிச்சத்தில் அதின் செய்தியை விளக்க எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளே. இந்த விழிப்பூட்டப்பட்ட செய்திகளின் தோற்றம், சுவிசேஷயுக அறுவடையின் மிக இறுதியில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்களின் வாழ்வை தயார்ப்படுத்த இந்த வெளிப்படுத்தல் செய்திசிறப்பானதாய் உள்ளது என்பதற்கான அடையாளங்களாகும் என்று பலர் கூறுகின்றனர்.

"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத்தீர்க்கரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் *4:12,13*) சரீர அங்கங்களை சீர்ப்படுத்தவும் கட்டப்படவும் இந்த கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு "சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்தல்" (2தீமோத்தேயு*2:15*) மற்றும் ஏற்கனவே புரிந்துக்கொள்ளப்பட்ட சத்தியத்தின் அடிப்படையின் மீதாக கட்டப்பட்ட விளக்கங்களை வழங்குதல் அவசியமாகும். இந்த புத்தகங்களின் ஒன்றின் முன்னுரையில், "இந்த புத்தகத்தின் நோக்கம் சத்தியத்தை உண்மையாய் தேடுவோருக்கு வெளிப்படுத்தலைப் பற்றி சரியாக தியானம் செய்ய உதவிட அதினால் உண்மையான பொருத்தமான, வேதாகம் அடிப்படையில் மற்றும் வரலாற்று அர்த்தத்தில் அதின் விளக்கங்களை அளித்திடவுமே தான்" என்று விளக்கப்பட்டுள்ளது. (வெளிப்படுத்தின விசேஷம் - எப்படி படித்து புரிந்துக்கொள்வது)

"இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர் - மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்." (வெளிப்படுத்தல் *22:20-21*)

புத்தகத்தின் இறுதி வார்த்தைகளில், இயேசு யோவானிடத்தில் தான் கூடிய விரைவில் வரப்போவதாக கூறியுள்ளார். எவ்வாறு இது சாத்தியம், இரண்டு பிரசன்னங்களுமே 1800 வருடங்கள் இடைவெளியில் நிகழ்ந்தது? நித்திய பார்வையில் இந்த இடைவெளியை கண்நோக்குதல் வேண்டும். கடந்த 20 நூற்றாண்டுகளாக, பூமியின் ஜனத்தொகை பாவம் மற்றும் தீமையின் ஆட்சியின் கீழாக போராடியுள்ளது. இந்த முடிவில்லா பயணமாய் தோன்றுகிறதின் இறுதிக்கு மனுக்குலம் நெருங்கி வருகிறது. அது நீதியாக புதிய பூமிக்கு இட்டுச் செல்லும். கடந்த நூறு வருட அறிவின் வளர்ச்சி பெரும்பாலும் மனிதனின் மாபெரும் ஆற்றல் மற்றும் வல்லமைக்கு பங்காய் உள்ளதே, தவிர, இயேசுவின் அமைதியான கண்ணுக்குத் தெரியாத வருகையினால், அவரின் இராஜ்யத்திற்கான ஆயத்தங்களுக்கு பங்காய் இல்லை. எனினும், வேதாகம நோக்கில் காண்போருக்கும், இந்த வளர்ச்சி, கிறிஸ்துவின் வருகை மற்றும் புது யுக துவக்கத்தின் தீர்க்கதரிசன நிலை வேறு விதமாக எச்சரிக்கிறது. அவர்கள் மற்றவர்களையும் அழைத்தனர். இந்த வாழ்நாள் ஒரு நித்தியத் தன்மையுடன் ஒப்பிடப்படும் போது, அது ஒரு கண் சிமிட்டலே. நம்முடைய கர்த்தருடைய இராஜ்யத்தில் ஒரு இடத்தை அடைவதற்கு நம் நேரம் குறைந்து வருகிறது. இயேசுவோடு இருக்கப்போகும் காலம், விரைவாக வந்துவிடும், வாழ் நாள் விடவும் நீடித்ததாய் இராது.

இயேசு தன் முதல் வருகையின் போதிருந்த பின்னடியார்களை பூமியுள்ள உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சோத்து வைக்கவேண்டாம், முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், என்று அறிவுறுத்தினார். (மத்தேயு*6:19, 33*) (யூதாஸ் இந்த சத்தியத்தை கடினமான முறையில் கற்றுக்கொண்டார்.)கி.பி 70 ல் எருசலேமின் அழிவு, யூதர்களுக்கு அவர்களின் அனைத்து பூமிக்குரிய பொக்கிஷங்களும் முடிவுக்கு கொண்டு வந்தது. யாதொருவர் இயேசுவைப் பின்பற்ற தன்னுடைய ஆஸ்தியையும் செல்வாக்கையும் விட்டுவிட இயலவில்லையோ, அப்படி செய்வதற்கான வாய்ப்பினை தவறவிட்டனர். மாணவர்களாகிய நமக்கு வெளிப்படுத்தல் நிகழ்வுகள், இப்போதிருக்கும் யுகம் முடிவுக்கு வரும்போது, பூமியில் இருக்கும் பொக்கிஷங்கள் மதிப்பற்றதாய் போய்விடும், என்று காண்பிக்கின்றன. பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கும் வாய்ப்பு கடந்தக்காலத்திற்கு உரியதாய் போய்விடும். ஆதலால், நாம் நமது நேரம், தாலந்து மற்றும் ஆற்றல்களைக் கொடுக்க அர்ப்பணிப்போமாக, அதினால் அவர் நம்மை உண்மையுள்ளவர்கள் (வெளி *2:10*) என்று கண்டு நம்மை வரவேற்கத்தக்கதாய் நாம் பெருகுவோமாக. நாம் தயாராய் இருப்போமாக. யோவானின் இறுதி வார்த்தைகளை எதிரொலிப்பவர்களாய் இருப்போம் :"ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்."

வெளிப்படுத்தின விசேஷத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட விளக்கங்கள்

ரண்டோல்ஃப் எல்வுட்ஸ்ட்ரீடர், இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தல், பாஸ்டோரல் பைபிள் இன்ஸ்டிடியூட், 1923,1924 (தற்போது ஒரே தொகுதியாக மறுபதிப்பு போடப்பட்டது). ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் பல்வேறு கண்ணோட்டங்களைக் கருத்தில் கொண்ட புத்தகம்.

பிராங்க்ஷைலிய, வெளிப்படுத்தலின் திறவுகோல்கள், வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆராய்ச்சி அறக்கட்டளை, இங்க்., 1993. அதிகாரவாரியாக, வசனவாரியாக விளக்கம் கொண்டுள்ளது. 700 பக்கங்களுக்கு மேலாக உள்ள விளக்கவுரை.

டான் பைபிள் ஸ்டுடன்ட்ஸ் (ஜே. பார்கின்சன்), தானியேல், சகரியா மற்றும் வெளிப்படுத்தலை எவ்வாறு படிப்பது, 40 பக்கங்கள்.

# உலக நிதி நெருக்கடி 10 ஆண்டுகள் கழித்து

"பூமியின் வர்த்தகர்களும தங்கள் தங்கள் சரக்குகளாகிய பொன்னையும், வெள்ளியையும்.... சிங்காரிக்கப் பட்டிருந்த மகா நகரமே, ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே, என்று சொல்லி, அழுது துக்கிபார்கள்." (வெளிப்படுத்தல் *18:11, 12, 17*)

"உலக வரலாற்றிலேயே, 2008 செப்டம்பர் மற்றும் அக்டோபர் தான் நிதி நெருக்கடி மற்றும் பெரும் ஆபத்து நிறைந்த காலம்" என்று நவம்பர் 2009ல் நிகழ்விற்கு பின் ஒரு வருடம் கழித்து, அமெரிக்காவின் பேட்ரல் ரிசர்வ் U.S. Federal Reserve தலைவராய் இருந்த பென் பெர்னான்கே Ben Bernanke மிகவும் மிகைப் படுத்தி கூறியுள்ளார். 10 வருடங்களுக்க பிறகு இந்த நெருக்கடியை கூர்ந்து கவனிக்கையில், இந்த நவீன உலகில், தொழில்நுட்ப ரீதியாக நடக்கவிருக்கும் உலகளாவிய நிதி நெருக்கடிகள் மிக வேகமாக நெருங்கி கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் இராஜ்யம் இந்த பூமியில் ஸ்தாபிக்கப்படும் முன்பு, உலகளாவிய நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி நடைபெறும். அந்த நெருக்கடிக்கு இந்த பூமியில் எந்த வித தீர்வும் காணப்படாது.

## வரலாற்று அழிவுகள்

1893ஆம் ஆண்டு, மிக கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்த அமெரிக்கா மிகுந்த பீதியில் ஆழ்ந்தது 1873ஆம் ஆண்டு நடந்தது போலவே தொடர்ந்து பல வங்கிகளில் பொருளாதார சரிவுகள் ஏற்பட்டது. பொருளாதார சந்தை சீர் அழிந்து வெள்ளி மற்றம் தங்கத்திற்கும் ஒரு தேடல் வேட்டை நடந்தது. 93ல் அமெரிக்க மக்கள் அடைந்த பீதி மக்களின் மனச்சோர்வை அதிகரித்தது. அதன் பிறகு 1930 ல் மீண்டும் நடந்த பொருளாதார சீரழிவால் மக்கள் சோர்வடைந்தனர். இந்த நெருக்கடியின் போது பல வங்கிகள் தோல்வியுற்ற போதிலும், அவர்களது சரிவு நான்கு வருட காலப்பகுதியில் பரவி, மிகவும் குறைவான சொத்துக்களை பாதித்தது. 2008ஆம் ஆண்டு அதன் அளவு மற்றும் வேகம் மிகவும் துரிதமானது. மூலதனப் பற்றாக்குறை 2007 மற்றும் 2008 க்கு இடையே 90சதவீகிதம் குறைந்து கொண்டே வந்தது.

1970 களில் பிரிட்டன் மற்றும் அமெரிக்க நாடுகளில் ரியல் எஸ்டேட் கடன் நெருக்கடிகள் இடம் பெற்றன. இதையே "பெரும் ஆபத்து" என்று அழைத்தார்கள். 1980களில் குறைவான வளர்ச்சி அடைந்த நாடுகளின் அரசாங்கங்களின் கடன்கள் தள்ளுபடி செய்யபட வேண்டும் என்ற உலகளாவிய நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன் 1982 மற்றும் 1992க்கு இடையில், 2808 குறிப்பிடத்தக்க அமெரிக்க நிதி நிறுவனங்கள் தோல்வியடைந்தன. 1990 களில் மெக்ஸிக்கோ, ரஷ்யா மற்றம் ஆசிய நாடுகளில் தொடர்ச்சியான சர்வதேச நிதி நெருக்கடிகள் ஏற்பட்டது. 2000ம் ஆண்டு துவக்கதில் சர்வதேச சந்தையில் அமெரிக்கா மிகவும் வீழ்ச்சியுற்றது. 2000 ம் ஆண்டுகளில் அவை ஒன்றில்லாமல் ஆனது.

2000ம் ஆண்டுகளில் பல தேசிய அளவிலான குழப்பங்கள், ஐரோப்பாவின் கடன் நெருக்கடிகள் மற்றும் இன்னும் ஒரு "பெரும் பின்னடைவு" ஏற்பட்டது. நிதி வரலாற்றாசிரியர் சார்ல்ஸ் கின்டெல் பெர்கள், நான்கு நூற்றாண்டு கால வங்கி நிகழ்வுகளை ஆய்வு செய்து, நிதி நெருக்கடி சராசரியாக ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் நிகழ்கிறது என்று முடிவு செய்தார். இதே போல, முன்னால் ஃபெடரல் ரிசர்வா் தலைவர் பால் வோல்கர் " கடந்த 50 ஆண்டுகள்ாக, ஒவ்வொரு 10ம் ஆண்டிற்கு பிறகும் மிகப்பெரிய நெருக்கடியைக் சந்திக்கிறோம்" என்று விவரித்தார்.

## 2008 ன் நிதி நெருக்கடி

2008 ம் நெருக்கடி மிக வேகமாக வளர்ந்து உலகளாவிய பொருளாதார ஆபத்தை அடைந்து, மிகப் பெரிய வர்த்தகச் சரிவை உண்டாக்கியது. சில மாதங்களுக்குள் உலகளாவிய ஏற்றுமதிகள் 22 சதவிகிதம் சரிந்தன. இதே சரிவு சீர்பெரும் நிலைக்கு கிட்டதட்ட இரண்டு ஆண்டுகள் ஆனது. 2008-2009 காலத்தில் அமெரிக்காவில் ஒரு மாதத்திற்கு 800,000 மக்கள் தங்கள் வேலைகளை இழந்தனர். 2015 ம் ஆண்டு கணக்கெடுப்பில் ஒன்பது மில்லியனுக்கு மேற்பட்ட அமெரிக்க குடும்பங்கள் தங்கள் வீடுகளை முன் கூட்டியே இழந்து விட்டனர் என்று தெரிய வந்தது.

1930ம் ஆண்டில் நடந்த தூகிப் புயலிற்கு பிறகு, இதுவே மக்களை கட்டாயமாய் வெளியேற்றும் நிகழ்வாகும். ஐரோப்பாவில் தோல்வி கண்ட வங்கிகள், மற்றும் தோல்வி அடைந்த போது நிதி நிறுவனங்கள், யூரோ மண்டலத்தில் பிளவு உண்டாக்கின. ஃபிடரல் ரிசர்வில் இருந்து அமெரிக்க அதிகாரிகள் தலையிட்டு, உலகளாவிய வங்கி நிறுவனங்களின் ஓட்டத்தை தடை செய்யாமல் இருந்திருந்தால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பொருளாதாரங்கள் இரண்டுமே மிக எளிதாக சரிந்திருக்கும். அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கு இடையே நடந்த சர்ச்சைக்குரிய அரசியல் மற்றும் பிளவுகள், ஒரு தெளிவற்ற நிலையை உருவாக்கியது.

லெஹமென் சகோதரர்களின் தோல்வியுற்ற முதலீட்டு வங்கியினை, அமெரிக்க கருவுல அதிகாரிகள் பிரிட்டிஷ் வங்கியிடம் விற்க ஏற்பாடு செய்தனர். பிரிட்டிஷ் வங்கிகள் ஏற்கெனவே தடுமாறி கொண்டிருந்ததால், பிரிட்டிஷ் அதிபர், இவையெல்லாம் அமெரிக்க புற்றுநோய் என்று விவரித்து வாங்க மறுத்துவிட்டார்.

ஜெர்மானிய நிதி மந்திரி பீர் ஸ்டீன் புருக்கு இந்த நெருக்கடியைப் பற்றி விவரிக்கையில், "இந்த பிரச்சனையின் நிமித்தம் அமெரிக்கா உலக நிதி முறை இயக்கத்தின் தனது வல்லரசு என்னும் ஸ்தானத்தை இழக்க நேரிடும்" என்று பிரகடனம் செய்தார். பிரஞ்சு ஜனாதிபதி நிக்கோலாசார்க் கோரி "அமெரிக்காவின் போக்கு நிறைவுற்றது" என்று அறிவித்தார். ஐரோப்பாவின்

வங்கிகள் மற்றும் வணிகம் ஆழ்ந்த கடனில் மூழ்கி, அவை அனைத்து டாலர் பண மதிப்பை மட்டுமே சார்ந்திருந்தது என்ற உண்மை கண்டறிந்தபொழுது தான் இது வெறும் அமெரிக்காவின் பிரச்சனை மட்டும் அல்ல என்று உறுதிசெய்யப்பட்டது. பிரிட்டனின் வடக்கு ராக்கு வங்கி தான் பிரம்மிக்கத்தக்க முறையில் தோல்வியடைந்து முதல் பெரிய வங்கியாகும். அதன் வணிகம் உலகம் முழுவதும் கடன் வாங்கும் வணிகமாய் இருந்தது. கற்பனையை விட அதிக வங்கிகள் மோசமான சொத்துக்களை வைத்திருந்தன. மொத்த விற்பனை கடன் முழுவதுமாய் நிறுத்தப்பட்டது.

இதன் காரணமாய் 2012ம் ஆண்டு, ஐரோப்பிய உறுதிப்பாட்டு இயக்கம் (EMS) நிறுவப்பட்டது. அது ஐரோப்பவிற்கு ஒரு நிரந்தர பாதுகாப்பு மண்டலமாய் அமைந்தது. யூரோப் பகுதியின் உறுப்பு நாடுகளை பாதுகாக்கவும், நிதியினால் சிரமம் ஏற்பட்டதை உடனடியாக நிதி உதவி செய்யவும் இந்த இயக்கம் செயலாற்றியது. இன்று (EMS) இன் சீர்திருந்த முறைகள் (EMU) யின் எதிர் காலத்தைப் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டுள்ளது.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஜீன் கிலௌடி ஜங்கர் யூரோவை குறித்து பேசுகையில் "ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலம் யூரோவின் எதிர்காலம், யூரோவின் எதிர்காலம் முழு ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலம்." இதனை ஜங்கர் பிரஸ்ஸல்ஸ் பொருளாதார இயக்கத்தின் ஒரு முக்கிய உரையின் போது கூறினார். நிதி எழுத்தாளர் ஆடம் டூஸ் சமீபத்தில் எழுதும் போது,"2008 ன் நிதி நெருக்கடியினால் பல செயல்கள் மாற்றப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அரசியல் சூழ்நிலை மாறியுள்ளது. அடுத்த நெருக்கடி வளர்ந்து வரும் சந்தைகளில் இருக்கும் அதிலும் சீனாவில் கூட சாத்தியமாக இருக்கலாம். அடுத்த முறை நடைபெற போகும் உலக பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்ற ஒரு தேவ தூதரால் கூட இயலாது" என்று கூறினார்.

**பாபிலோன் மீது வாதைகள்**

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறகையில்,"ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான், இணைத்தால், அதினோடே இணைத்ததுண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும். " மத்தேயு 9:16

நாம் செய்யும் ஆய்வானது எதிர் காலத்தில் உலகளாவிய மன அழுத்தத்தை விவரிக்கிறது. வெளிப்படுத்துதல் 16 ல் கூறப்படும் ஆறாம் வாதை, அர்மெகதோனிற்கு முன்பு வரும் கடைசி வாதை, அதிலிருந்து எந்த வித மீட்பும் கிடையாது. எதிர்காலத்தில் என்ன நேரிடும் என்று கணிக்க முடியாது. ஒரு புதிய உலகிற்குள் நுழைந்துள்ளோம்.

உலகளாவிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண பூலோகமயமாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஒரு புதிய உலக ஒழுங்கிற்கு வழிவழிக்கும் என்று பல நாடுகள் எதிர் பார்த்தன. ஆனால் 2008ல் நடந்த நிதி நெருக்கடி பல நாடுகளுக்கு ஒரு புதிய அச்சத்தையே கொண்டுவந்தது. அப்போஸ்தலர் பவுல் "இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியான வளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும், அவர்கள் தப்பிப்போவதில்லை. சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே." (1தெசலோனிக்கேயர் 5:2-4)ஒரு பெண் கர்ப்ப வேதனையில் இருப்பது போல் தொடர்ந்து நெருக்கடிகள் வரும் என்று நாம் எதிர்நோக்கலாம். தப்பிச் செல்ல வழி இல்லாமல் இறுதியான உபத்திரவம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

தேவனைப் பின்பற்றுவோருக்கு இந்த தெய்வீக திட்டத்தின் அறிவானது ஆறுதலை தரவேண்டும். இன்னும் நடக்கபோகும் நிகழ்வுற்கு ஏற்றாற்போல் நாம் நம் ஒழுக்கத்தில் முன்னேறி செல்ல வேண்டும். கிறிஸ்தவர்கள் தங்கள் ஆன்மீக வாழ்நாளை முடிந்துவிடும் என்றும் தங்கள் பொருளாதார வாழ்வில் தாங்கள் இன்னும் சுமார் 50 வருடம் இங்கு வாழலாம் என்ற எண்ணத்தில் வாழவேண்டும்." உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள், உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு." (நீதிமொழிகள் 27: 23)

கிறிஸ்துவ வாழ்வின் எல்லா அம்சங்களிலும் ஒழுக்கக்கேடில்லாமை மிக முக்கியம். அதிலும் நிதி விவகாரங்களை நிர்வகிப்பதில் இந்த ஒழுக்கம் மிக முக்கியமாய் பின்பற்ற வேண்டும்.

நாம் நம் காரியங்களை எல்லாம் மிகுந்த விவேகத்துடன் நிர்வகிக்கிறோம் என்றால் நாம் எதிர்காலத்தில் வரப்போகும் நெருக்கடியை குறித்து அச்சம் தேவை இல்லை. உணர்ச்சிகளால் தூண்டப்பெற்று, நன்மை பயக்கும் என்று நம்பி பல வழிமுறைகளை கடைப்பிடித்தால், நம் தனிப்பட்ட வாழ்வில் நிதி நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். நம் அடிப்படை தேவைகளை தேவன் சந்திப்பார் என்ற உறுதி நம்மிடம் இருக்க வேண்டும் (பிலிப்பியர் 4:19 ) ஆனால் நாம் எடுக்கும் சில தவறான முடிவுகளின் விளைவுகளை தேவன் அகற்றுவார் என்ற எதிர்பார்ப்பு நம்மிடம் இருக்க கூடாது. நமக்காகவும் நம்முடைய பாதுகாப்பின் கீழ் உள்ளவர்களுக்காகவும், நமக்கு தேவையான செல்வங்களை நாம் பொறுப்புடன் ஒதுக்கி வைக்க வேண்டும். நம் தனிப்பட்ட எதிர்காலத்தில் என்ன நேரிடும் என்று நமக்கு தெரியாது. மேலும் நம் எதிர்காலம் யார் கையில் உள்ளது என்றும் நமக்கு தெரியாது. "தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலிப்பியர் 4:12-13)

சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள், திருச்சி.
கைப்பேசி : 9244611241, 8122224919